# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI

## தொலைநிலை தொடர்கல்வி இயக்ககம்

**DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION**

## **B.A.** தமிழ்

## முதலாமாண்டு - முதற்பருவம்

## துணைமைப் பாடம்

## நாட்டுப்பபுறவியல் - **II**

**முனைவர் கோ. ஜெஸிறோஸ்,**
உதவிப் பேராசிரியர்,
தெ.தி. இந்துக்கல்லூரி,
நாகர்கோவில

# முதலாமாண்டு - முதற்பருவம்
# துணைமைப் பாடம்
# நாட்டுப்பபுறவியல் - II

**நோக்கம்:**

நாட்டுப்புற மக்களின் கலைகளை அறிதல், நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகளையும், பொழுதுபோக்கு நிகழ்வுகளையும் அறிந்து கொள்ளுதல்.
பயன் : அழிந்துவரும் கலைகளையும், மருத்துவத்தையும் காக்க முற்படுதல்.

**அலகு** - 1

நாட்டுப்புறக்கலைகளும் கைவினைப் பொலுட்களும் நாட்டுப்புறக் கலைகளின் வகைப்பாடு - நிகழ்ந்து கலைகள் - கட்டடக்கலை - கூத்து வகைகள், கைவினைப் பொருட்கள் - மண்பாண்டக்கலை பிற கைவினைத் தயாரிப்புகள்.

10 மணி நேரம்

**அலகு** - 2

நாட்டுப்புற நம்பிக்கைகள் - பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும் - நம்பிக்கைகளின் வகைகள் - நம்பிக்கை பற்றிய ஆய்வுகள்.

4 மணி நேரம்

**அலகு** - 3

நாட்டுப்புற தெய்வங்கள் - வழிபாட்டுமுறைகள் - சிறு தெய்வ, பெருந்தெய்வ வழிபாடுகள் - நாட்டுப்புறத் தெய்வ கோவில்களின் அமைப்பு - நாட்டுப்புறத் திருவிழாக்கள் - வருடாந்திர விழாக்கள் - கோவில் விழாக்களும் சந்தைகளும்.

11 மணி நேரம் (11L +1T)

**அலகு** - 4

நாட்டுப்புற விளையாட்டுகள் - விளையாட்டு பற்றிய கொள்கைகள் - விளையாட்டு : பாகுபாடு - சிறுவர் விளையாட்டுகள் - ஆடவர் விளையாட்டுகள் - மகளிர் விளையாட்டுகள்.

**அலகு** - 5

நாட்டுப்புற மருத்துவம் - மந்திர சமய மருத்துவம் - இயற்கை மருத்துவம் - கிறித்தவ மீனவர் நாட்டுப்புற மருத்துவம் - காணிக்கார பழங்குடிகள் நாட்டுப்புற மருத்துவம் - நாட்டுப்புற மருத்துவ நம்பிக்கைகள் - நாட்டுப்புற மருத்துவமும் பழமொழிகளும்

10 மணி நேரம்

# அலகு I

# நாட்டுப்புறக் கலைகள்

# அலகு I

## நாட்டுப்புறக் கலைகள்

மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வுகளில் கலை உணர்வும் ஒன்று. இயல்பாகத் தோன்றி இயற்கையோடியைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகளை நாட்டுப்புறக் கலைகள் எனலாம். பண்டைக்காலத்தில் மனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தி, பல கலைகளை உருவாக்கி மகிழ்ந்தான். மனமகிழ்ச்சி ஒன்றே முக்கிய நோக்கமாக இருந்தது. மனித உணர்வுகளுக்குக் கலைகள் வடிகாலாக இருந்தன. உணர்ச்சியின் வெளியீடாகக் கலைகள் இருந்ததினால் கால வெள்ளத்தைக் கடந்து நின்று வாழ்ந்து வளர்ந்து கொண்டுள்ளன.

நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்களின் ஜீவ ஊற்றாகும். அவை அவர்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன. இயற்கையறிவும் ஆழ்ந்த உணர்ச்சியும் எளிமையும் நேரடித் தன்மையும் இக்கலைகளில் மறைந்திருக்கின்றன. உணர்ச்சிப் பெருக்கின் மொத்த விளைவையும் அதைச் சரளமாக விளக்குகின்ற தன்மையையும் இதில் காணலாம். இயற்கையோடியைந்த கலைகள் சமயத்துடனும் பின்னர் சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றன. நாட்டுப்புற மக்கள் சமூகத்தின் அழகியல் உணர்வுகளின் மையமாக இக்கலைகள் விளங்குகின்றன. இக்கலைகள் ஐம்புலன்களையும் ஈர்த்து மக்களது கவலையைப் போக்கி பண்பாட்டுச் செல்வமாக விளங்குகின்றன.

**கலைகள் - அறிமுகம் :**

அழகுணர்ச்சியின் வெளிப்பாடுகளே கலைகள் எனலாம். ஆயக்கலைகள் அறுபத்து நான்கு என்று முன்னோர் கூறுவர். ஆனால் மனிதனது சீரான செயல்பாடுகள் அனைத்தும் கலைகளே எனலாம். கலைகளின் வளர்ச்சி நிலையை மூன்று பிரிவுகளாகக் கொள்ளலாம்.

1. தொன்மைக்கலை (Primitive Art)
2. நாட்டுப்புறக்கலை (Folk Art)
3. செவ்வியல் கலை (Classical Art)

தொன்மைக்கால நிலையைப் பழங்குடி மக்களிடையேயும் நாட்டுப்புறக் கலையை நாட்டுப்புற மக்களிடையேயும் திருந்திய கலையைச் சற்று முன்னேறிய மக்களிடையேயும் காணலாம்.

இயற்கையோடியைந்து வாழ்ந்த காலத்தில் தொன்மைக்கலை தோன்றியிருக்க வேண்டும். இயற்கையையே தூண்டுகோலாகக் கொண்டிருக்க வேண்டும். இயற்கைச் சூழலின் எழுந்த கலைகள் பின்னர் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியிருக்க வேண்டும். சமய அடிப்படையில்தான் தமிழகத்தில் பெரும்பாலான கலைகள் வளர்ந்தோங்கி உள்ளன. புனிதத்தையும் பேராற்றலையும் அடிப்படையாகக் கொண்டு பல நாட்டுப்புறக் கலைகள் தோன்றியுள்ளன. ஆரம்ப காலத்தில் பூதங்களினின்றும், கெட்ட ஆவிகளினின்றும் காப்பாற்றுமாறு தெய்வங்களை வேண்டுவதற்குப் பல கலைகள் தோன்றின. எனவே, கலைகளைச் சமூகச் சார்புக்கலைகள், சமயச் சார்புக் கலைகள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். சமூகக் கலைகள் உழைப்பின் பலன், காதல், சமூக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் கலைகளும் சமயமும் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

மக்களின் சமய உணர்வு, சமுதாய வாழ்க்கை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை விளக்கும் தன்மையுடையனவாக நாட்டுப்புறக் கலைகள் விளங்குகின்றன.

**நாட்டுப்புறக்கலைகளின் வகைகள் :**

உருவாக்குதல் பயன்படுத்துதல் அல்லது நிகழ்த்துதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப்புறக் கலைகளை இருபெரும் பரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பொருட்கலைகள் (Material Arts)
2. நிகழ்த்துக்கலைகள் (Performing Arts)

என்பன அவை.

**பொருட்கலைகள் :**

ஓவியம், உடலில் வரைதல் (பச்சை குத்துதல்), கோலம், பச்சைமண், சுடுமண், மாவு, தாள், கூழ் முதலியவற்றால் செய்யப்படும் சிலைகள், பொம்மைகள்,

மரச்சிற்பங்கள், தென்னை ஓலைத் தோரணங்கள், பனையோலைக் கலைப் பொருட்கள், துணிகளில் செய்யப்படும் கைவேலைப்பாடுகள், கோரைப் பாய்களில் உருவாக்கப்படும் உருவங்கள், பொன் நகைகளில் உருவாக்கப்படும் கை வேலைப்பாடுகள், மணமகள் ஒப்பனைப் பொருட்கள், மணவரை ஒப்பனை, தேர், கோயில் ஒப்பனை, தெய்வத்துக்கான ஒப்பனை முதலானவற்றை நாம் பொருட்கலைகள் எனலாம். இவை கலைப் பொருட்களாக உருவாக்கப்படுபவை.

**நிகழ்த்துக் கலைகள் :**

நிகழ்த்துக் கலைகள் என்பவை மக்களின் வாழ்வோடு கலந்து பண்பாட்டின் கூறுகளை வீரியத்துடன் வெளிப்படுத்துபவை. தமிழ்ப் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு நிகழ்த்துக்கலைகள் பற்றிய புரிதல் தேவை. ஏனெனில் அவை மரபுவழி நிகழ்த்தப்படுபவை. இக்கலைகள் தமக்கென்ற மரபுவழிப் பண்பாட்டு எல்லைகளையும் மரபுவழிப்பட்ட பார்வையாளர்களையும் கொண்டவை.

கரகாட்டம், காவடியாட்டம், தேவராட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், சாமியாட்டம், காளியாட்டம், சேர்வையாட்டம், உறியடி, கழைக்கூத்து, பாரதம் படித்தல், கதைப்பாட்டுப் படித்தல், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, கணியான் கூத்து, கோலாட்டம் முதலானவற்றை நாம் இன்று நிகழ்த்துக் கலைகள் என்கிறோம். இவையனத்தும் பயிற்சி பெற்ற கலைஞர்களால் மக்கள் முன் நிகழ்த்தப்படுபவை.

**ஆடற்கலை :**

நாட்டுப்புற மக்களிடையே ஆடற்கலை பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றது. அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

**1. காவடியாட்டம்:**

காவடியாட்டம் முருகக் கடவுளுடன் தொடர்புடையதாகும். முருகனை முன்வைத்துப் பல நோன்புகள் மேற்கொண்டு காவடி எடுப்பர். காவடியைக் குறுந்தடியால் வளைத்துப் பல வண்ணக் காகிதங்களால் அலங்காரம் செய்து இருமுனைகளிலும் மயில் தோகைகளையும் செம்பையும் கட்டி வைத்திருப்பர். காவடி எடுப்போர் நாக்கிலும், உதட்டிலும் சிறிய வேல்களைக் கொண்டு அலகு

குத்திக் கொள்வர். ‘காவுதடியே’ காவடியாயிருக்க வேண்டுமென ஏ.என்.பெருமாள் குறிப்பிடுகின்றார். இடும்பாசுரன் இரண்டு மலைகளைக் கட்டித் தூக்கி முருகனை வழிபடும் புராண நிகழ்ச்சியைப் பின்பற்றிக் காவடி எடுக்கும் வழக்கம் வந்ததாக ஆய்வாளர்கள் கூறுவர். காவடியாட்டம் சமய உணர்வில் வளர்ந்த கலையாகும். இக்கலை தொழில் முறையிலும் நடத்தப்படுகின்றது.

சந்தனக்காவடி, சர்ப்பக் காவடி, சேவல் காவடி, மச்சக்காவடி, வேல்காவடி எனப் பலவகைக் காவடிகள் உண்டு. அண்ணாமலை ரெட்டியார் ‘காவடிச் சிந்து’ பாடியதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. கலைத்திறனும் தொழில்நுட்பமும் காவடியாட்டத்தில் மிகுதியாக இருக்கும்.

## 2. கரகாட்டம்:

தலையில் குடத்தை வைத்து ஆடும் ஆட்டத்திற்குக் கரகாட்டம் என்று பெயர். ‘கரகம்’ என்ற சொல் கமண்டலம், ஆலங்கட்டி. நீர்த்துளி, கங்கை, பூங்குடம் என்ற பொருள்களைத் தருகிறது. சிலப்பதிகாரம்கூட கரக ஆட்டத்தைக் ‘குடக்கூத்து’ என்று குறிப்பிடுகிறது. கரக ஆட்டம் ஆடும் போது ஒன்று முதல் பத்து வரை எண்களைக் குறிப்பிட்டு, பாட்டுப்பாடுவர்.

‘ஒண்ணாம் கரகமாடி எங்க முத்துமாரி
ஒசந்த கரகமாடி எங்க முத்துமாரி
ரெண்டாம் கரகமாடி எங்க முத்துமாரி
ரத்தின கரகமாடி எங்க முத்துமாரி’

கரக ஆட்டம் பெரும்பாலும் மாரியம்மன் திருவிழாவுடன் தொடர்புடையதாகும். மாரி சொரிந்து நாட்டில் வளம் கொழிக்க வேண்டுமென்பதுதான் இதன் நோக்கமாகும். சமய உணர்வில் முகிழ்த்த இக்கலை, தொழிலுணர்வுக் கலையாகவும் நடத்தப்படுகின்றது. சமயவுணர்வு நிரப்பப்பட்டிருக்கும் கரக ஆட்டம் இன்று தெய்வ வழிபாடாகவும் கலை வழிபாடாகவும் உள்ளது.

## 3. கோலாட்டம் :

இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்பி ஆடுகின்ற ஆட்டம் கோலாட்டமாகும். கோலாட்டத்தில் ஆரம்ப காலத்தில்

தெய்வத்தை வாழ்த்திப்பாடும் துதிப்பாடல்களாகவே இருந்தன. கோலாட்டத்தில் பெண்கள் வட்டமாக நின்று கோல்களை முன்னும் பின்னும் திரும்பி மாறி மாறி அடித்துப் பாட்டுப்பாடி ஆடுவர். கண்ணனைப் பற்றி கோலாட்டப் பாடல்கள் பாடுவர். பின்னர் சமூகத்தைப் பற்றியும் தலைவர்களைப் பற்றியும் கோலாட்டப் பாடல்கள் எழுந்தன. பள்ளி விழாக்களில் கலைநிகழ்ச்சியாக இவ்வாட்டம் இடம்பெறும். கோலாட்டத்தை வடமொழியில் 'தண்டலாஸ்யா' என்பர். 'செவ்வாய்ச்சியர் கோலாட்டம்' என்று காஞ்சிபுராணம் குறிப்பிடுகின்றது.

**பின்னல் கோலாட்டம் :**

ஆடுபவரது கரங்கள் கயிறுகளால் பிணைக்கப்பட்டு உயரே ஓரிடத்தில் கட்டப்பட்டு இருக்கும். சுற்றிச் சுற்றிப் பின்னல்கள் போடப்படும். மறு ஆட்டத்தில் அவை பிரிக்கப்படும். பல்வகை வண்ணங்களாலான பின்னல் காண்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். இக்கலை மரபுவழிப்பட்ட கலைஞர்களினால் மட்டுமே நிகழ்த்தப்படுகிறது.

**4. கும்மியாட்டம் :**

பெண்கள் ஆடும் ஆட்டங்களில் கும்மியாட்டம் மிக முக்கியமான ஒன்றாகும். பெண்கள் விளக்கைச் சுற்றி நின்று கும்மியடிப்பர். கிராமப்புறங்களில் நடைபெறும் மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் திருவிழாக் காலங்களில் முளைப்பாரியைச் சுற்றி நின்று பெண்கள் கும்மியடிப்பர். அப்படிக் கும்மியடிக்கும்போது பாடல்களும் பாடுவர். காலப்போக்கில் கும்மிப்பாடல்கள் இலக்கியத்தில் தனிப்பிரிவாக வளரத் தொடங்கின. அரிச்சந்திரன் கும்மி, வள்ளியம்மை கும்மி, சிறுத்தொண்ட நாயனார் கும்மி என்ற நூல்களும் நபியுல்லாக்கும்மி, ஞானஉபதேசப் பேரின்பக்கும்மி போன்ற இஸ்லாமியக் கிறித்தவக் கும்மிகளும் உண்டு.

**5. ஒயிற்கும்மி :**

பொதுவாகக் கும்மி என்பது பெண்கள் ஆடும் ஆட்டமாயினும் ஒயிற்கும்மி ஆடவர்களாலேயே ஆடப்படுவதாகும். ஆடவர்கள் தலைப்பாகை முதலியவற்றை அணிந்து கொண்டு கையில் கைக்குட்டையை ஏந்தி காலில் சலங்கை கட்டிக்கொண்டு ஆடுவர். பழங்கதையையோ வரலாற்றையோ இசையோடு

பாடி ஆடுவர். அத்துடன் அந்தந்த வட்டாரக் கதைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பர். இக்கலையில் திருநெல்வேலியில் கட்டபொம்மனுக்கும், மதுரையில் மதுரை வீரனுக்கும், கோவையில் வள்ளித் திருமணத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

“தேரோடும் எங்கள் சீரான மதுரையிலே
ஊரார்கள் கொண்டாடும் ஒயிலாட்டம்”

என்றும்,

“சிறகை விரித்தால் மயிலாட்டம்
சேர்த்து குதித்தால் ஒயிலாட்டம்
சீறிப் பாய்ந்தால் புலியாட்டம்
திரையில் மறைந்தால் நிழலாட்டம்”

என்றும் பாடுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**6. பொய்க்கால் குதிரையாட்டம் :**

பொய்க்கால் குதிரையாட்டத்தைப் புரவியாட்டம் என்றும் கூறுவர். குதிரையின் உருவத்தை அட்டைகளாலும், மூங்கில் கீற்றுகளாலும் செய்து பல வண்ணத்துணிகளால் ஒப்பனை செய்வர். குதிரையின் முதுகுப்புறத்தில் ஆள் அமர்வது போன்று நிற்கச் சிறிது இடம்விடப்பட்டிருக்கும். அவ்வாறே அதில் அமர்பவரின் காலில் சலங்கை கட்டப்பட்டிருக்கும். குதிரையாட்டம் ஆடும் போது நையாண்டி மேளம் முழங்கப்படுகின்றது. சிலம்பில் இவ்வாட்டம் ‘மரக்கால் ஆட்டம்’ என்று ஒரு காலத்தில் இது தஞ்சையில் நடத்தப்பட்டதாக அறிகிறோம். பொய்க்கால் குதிரையாட்டத்தின் தாயகமே தஞ்சைத் தரணிதான் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. மராட்டிய மன்னர்கள் இக்கலைக்குப் பேராதரவு அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**7. மயிலாட்டம்:**

மயில் போன்று உருவம், செய்து மயில் தோகையால் அலங்காரம் செய்து, மயிலாட்டம் ஆடுவர். மயிலாட்டம் ஆடுபவர்கள் முருகக் கடவுள் வேடம் பூண்டு, கையில் வேலையும் வைத்திருப்பர். மயிலாட்டம் பார்ப்பதற்கு மிக

இனிமையான கலையாகும். முருக வணக்கத்தின் அடிப்படையில் இம்மயிலாட்டம் தோன்றியிருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது. இவ்வாட்டமும் சமய உணர்வுடன் ஒன்றிக் கலந்துள்ளது.

**8. தேவராட்டம்:**

தேவராட்டம் கம்பளத்து நாய்க்கமாரால் இன்றும் மதுரை மாவட்டத்தில் ஆடப்படுகின்றது. இவர்கள் ஜக்கம்மாதேவியை வழிபடுபவர்கள். ஆண்களே கலந்து கொள்ளும் இவ்வாட்டத்தில், கலந்து கொள்பவர்கள் அனைவரும் ஒரே மாதிரி ஆடை அணிந்து, தலையில் மினுமினுப்பான துணியால் தலைப்பாகை அணிந்திருப்பர். புராணக்கதை, கண்ணன் கதை, முருகன் வள்ளித் திருமணம், மதுரை வீரன் கதைகளைப் பாடிக்கொண்டே ஆடுவர். இந்த ஆட்டத்தில் உருமி மேளமும் முழங்கப்படும்.

**9. சக்கையாட்டம் :**

இவ்வாட்டம் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் காணப்படுகின்றது. நான்கு தேக்கு மரத்துண்டுகளை விரல்களுக்கிடையில் வைத்து ஒலி எழுப்புகின்ற இவ்வாட்டத்திற்குச் சக்கையாட்டம் என்று பெயர். ‘சக்கை’ என்றால் மரத்துண்டு என்று பொருள்படும். ஏறத்தாழ எட்டு அல்லது பன்னிரண்டு பேர்கள் ஒரே மாதிரியான ஆடை அணிந்து கொண்டு மாரியம்மன், முருகன் கோயில் திருவிழாக்களின் போது ஆடுவர். வீரர்களின் வரலாறு, நீதிக்கதை முதலியவற்றைக் கதைகளாகப் பாடுவர்.

**10. கணியான் ஆட்டம்**

இவ்வாட்டம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் காணப்படுகின்றது. சுடலைமாடன், இசக்கியம்மன் முதலிய கோயில் விழாக்களில் இவ்வாட்டம் நடைபெறும். சிவபெருமான் இருவரைப் படைத்து, ஒருவரைச் சுடலைமாடனாகவும் மற்றொருவரைக் கணியானாகவும் படைத்தார். சுடலைமாடனுக்கும் கணியானுக்கும் தொடர்பு இருப்பதாகப் புராணக்கதை கூறப்படுகின்றது. சுடலைமாடனுக்குக் கணியான் நாக்கையோ அல்லது விரலையோ அறுத்து, வடியும் இரத்தத்தை காணிக்கையாகக் கொடுப்பான்.

கணியான் ஆட்டத்தை ஒரு குறிப்பிட்ட இனத்தினரே நடத்துவர். நான்கைந்து பேர் பங்கு கொள்ளும் இவ்வாட்டத்தில் இருவர் பெண் வேடம் தாங்குவர். தப்பட்டை முழங்க அனைவரும் இணைந்து ஆடிப்பாடுவர். ஒருவர் தலைவராகயிருந்து (அண்ணாவி) ஆட்டத்தை நடத்துவார். பெரும்பாலும் தெய்வக் கதைகளைத்தான் பாடுவர். கணியான் ஆட்டம் சமயக் கலையைச் சார்ந்ததாகும்.

மேற்கூறப்பட்ட ஆடற்கலைகள் யாவும் இன்றளவும் நாட்டுப்புற மக்களிடையே நிகழ்த்தப்பட்டு வருவதை அறியமுடிகின்றது. கலை கலைக்காகவும் கலை வாழ்க்கைக்காகவும் நாட்டுப்புற மக்களிடம் விளங்குகின்றது.

**கூத்துக்கலை:**

கிராமங்களில் திறந்தவெளிகளில் நாட்டுப்புறக் கலைஞர்களால் நடத்தப்படுவது கூத்து. கூத்து பழமையின் சின்னமாகப் பண்பாட்டின் எச்சமாக விளங்குகின்றது. தெருக்கூத்தின் வளர்ச்சிதான் நாடகமெனின் மிகையாகாது. நாட்டுப்புற மக்களின் எண்ணம், செயல், பண்பாடு, வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டுவதே இக்கலை. கூத்து பற்றியே ஒரு பழமொழி வழங்குகிறது.

“கூத்தாடி கிழக்கே பார்ப்பான்

கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்”

இதிலிருந்தே கூத்தானது விடியும் வரை நடைபெறும் என்பது தெரிகிறது. ஆண்களே இடம்பெற்ற இக்கூத்தில் பின்பு பெண்களும் இடம்பெறலாயினர். கூத்துக்கான செய்திகளைப் புராண இதிகாசங்களிலும் மக்களது வாழ்க்கை முறையிலிருந்தும் எடுத்துக்கூறினர். அந்தந்த இடங்களுக்கு ஏற்ப கூத்துக்கள் மாறுபாடுவதுண்டு. இனி, கூத்துகளின் வகைகள் பற்றிக் காண்போம்.

**தெருக்கூத்து :**

பொதுமக்கள் புழங்கும் பொதுவெளியில் தெருவிலே நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து எனப்படும். தெருக்கூத்து நாடோடிக்கூத்து வகையைச் சார்ந்ததாகும். நாடக மேடையோ காட்சித்திரைகளோ இல்லாமல் எளியமுறையில் தெருவிலும் திறந்தவெளி அரங்கிலும் இக்கூத்து இரவு முழுவதும் நடைபெறும். பாரதக்கதை, இராமாயணக்கதை, அரிச்சந்திரன் கதை போன்றவற்றைத்

தெருக்கூத்தாக நடிக்கின்றனர். ஆடலும், பாடலும் இக்கூத்தின் முக்கிய அம்சமாகும். மழையை வேண்டுவோர் விராட பருவத்தையும், மனம் விரும்புவோர் மீனாட்சி கல்யாணத்தையும், பிள்ளைப்பேறு வேண்டுவோர் சத்தியவான் சாவித்திரியையும் நடத்துவர். தமிழகத் தெருக்கூத்து பற்றி மேலை நாட்டாரும் ஆய்வு செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கழைக்கூத்து :**

தெருக்கூத்தைப் போன்றே இதுவும் பொதுவெளியில் நடத்தப்படுவது. மூங்கிலின் மேல் நடமாடும் இக்கூத்தைக் கழைக்கூத்து என்பர். கழை என்பது மூங்கிலைக் குறிக்கும். நச்சினார்க்கினியரும் இக்கூத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். கழையிலும், கம்பியிலும் நடந்து வித்தை காட்டுவர். பாட்டும் பாடுவர். இக்கூத்தாடுபவர்களை ஆரியக்கூத்தாடிகள், நாடோடி டொம்மரர்கள் எனக் கூறுவர். இக்கூத்து மற்ற கூத்தினின்றும் வேறுபட்டது. இக்கூத்து கதை தழுவியதன்று.

**பாவைக்கூத்து:**

பாவைகளை மரத்தாலும் தோலாலும் செய்து நூல்களைக் கட்டி, திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் ஆட்டியசைத்துப் புராணக் கதைகளை விளங்கச் செய்யும் நாட்டுப்புறக்கலைக்குப் பாவைக்கூத்து என்று பெயர். மரத்தாலானவை மரப்பாவை என்றும், தோலாலானவை தோற்பாவை என்றும் வேறுபடுத்துவர். நிழலாட்டம், பொம்மலாட்டம் என்றும் இதைக் கூறுவர். நிழலாட்டம் என்பது சிறு தோல் பதுமைகளை ஒரு விளக்குக்கும் ஒரு வெள்ளைச்சீலையைத் திரைக்கும் நடுவே வைத்து ஆட்டி அவற்றின் நிழல் திரையில் விழுமாறு செய்து இக்கூத்தை நிகழ்த்துவர்.

**தோற்பாவைக் கூத்து :**

தோற்பாவைகளின் நிழல்கள் மூலம் இக்கூத்தை நடத்திச் செல்வதால் தோற்பாவைக் கூத்து என்கின்றனர். ஆந்திராவில் இதனை 'தோலு பொம்மலாடா' என்பர். பாவைக்கூத்தில் மூன்று முதல் ஆறுபேர் இருப்பர். பாவைகளை இருவர் ஆட்டுவர். இருவர் பாடுவர். பாவைக்கூத்துகளை ஒரு காலத்தில் மன்னர்கள் ஆதரித்து வந்தனர். திறந்தவெளி அரங்கில் வெள்ளைத்திரை கட்டப்பட்டிருக்கும்.

உள்ளே ஒரு விளக்கைத் தொங்கவிட்டிருப்பர். விளக்குக்கும் திரைக்குமிடையில் பாவைகள் இயக்கப்படும். காலில் கட்டையணிந்து ஒலி எழுப்புவர்.

தமிழகத்தில் இக்கலை முழுக்க முழுக்க பார்வையாளர்களை நம்பித்தான் உள்ளது. தமிழகத்தில் இராமாயணம், நல்லதங்காள் கதை, அரிச்சந்திரன் கதை ஆகியவைகளை தோற்பாவைக்கூத்து மூலம் நடத்துகின்றனர். இராமாயணம் போன்ற கதைகளைத் தோற்பாவைக்கூத்து மூலம் காண்பதால் மழைபொழியும் என மக்கள் நம்புகின்றனர்.

முதன்முதலில் பாவைக்கூத்து சீனாவில் நடத்தப்பட்டதாகவும், பின் இந்தோனோசியா வழியாக இந்தியாவுக்கு வந்ததாகவும் கூறுவர். 12-ஆம் நூற்றாண்டிலே இந்தியாவில் பாவைக்கூத்து இருந்ததை அறிகிறோம். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சிறுவர் நிகழ்ச்சியாக இக்கூத்து நடத்தப்படுகின்றது. ஜாவாவிலும் இக்கலைக்கு நல்ல ஆதரவு உண்டு, இந்தியாவில் ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு முதலிய தென்மாநிலங்களில் இக்கூத்து வழக்கில் இருந்து வருகின்றது இருப்பினும் இக்கலை இன்று நலிவடைந்து வருகின்ற கலையாக உள்ளது.

**நாட்டுப்புறக் கட்டடக்கலை:**

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் பல்வகைக் கலைகள் செழித்தோங்கி வளர்ந்துள்ளன. கலைகள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன. காலங்கள் தோறும் கலைகள் வளர்ந்த வரலாற்றை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. ஓவியம் கலைகளின் தாய்; சிற்பம் அதன் சேய், தமிழகக் கோயில்கள் சிற்பங்களின் களஞ்சியம். தமிழர் வளர்த்த அழகுக்கலைகளின் காப்பகமாகக் கோயில்கள் திகழ்கின்றன. திருக்கோயில்களின் செம்புப் படிமங்கள் தமிழர்கள் உலகுக்கு அளித்த கொடைகள். கல்லிலும் செம்பிலும் கலைகள் கொலுவிருக்கின்றன. காலவெள்ளத்தால் அழிக்க முடியாத கலை கருவூலங்கள், கோயில்கள் தமிழன் கட்டடக்கலையின் மாட்சிக்குச் சான்று பகர்வன. தமிழர்களின் கலைவாழ்வுக்கு எடுத்துக்காட்டுகள். தமிழகத்தின் பாரம்பரிய மரபினை உலகிற்கு எடுத்தியம்புவன. நீண்ட நெடிய பாரம்பரியப் மிக்க தமிழினத்திற்குக் கலை வரலாறும் உண்டு.

கட்டடக்கலை கலைகளில் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. நீளம், அகலம், பருமன் ஆகிய பரிமாணங்களால் கண்ணையும் கருத்தையும் கவர்வது கட்டடக்கலை, கட்டடம் கட்டடக்கலையாக வேண்டுமானால் காண்பவரின் கருத்தைக் கவரவேண்டும். கல், மண், மரம், உலோகத்தால் ஆக்கப்படுவது கட்டடக்கலை. கட்டடக்கலையை உறைந்து போன இசைக்கலை என்பர் 'ஸ்லீகல்'. கட்டடக்கலைக்கு இயல்பும் பயன்பாடும் நிலை பேற்றுத்தன்மை, அழகு என்ற மூன்று இயல்புகள் உண்டு. தமிழகக் கட்டடக்கலை தமிழகத்திற்கே உரியதாகும். மொஹஞ்சதரோ, ஹரப்பா நாகரிகம் திராவிடக் கலையின் முன்னோடி என 'ஜான் மார்ஷல்', 'ஈராஸ் பாதிரியார்' கூறுகின்றனர். தமிழகத்தில் புதிய கற்காலத்திலேயே மனிதன் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தான் எனத் தொல்லியல் கூறுகின்றது. கட்டடத்தின் மையப்பகுதியில் ஓரிரு அறைகளைக் கொண்ட சிறுமண்டபம், அதைச்சுற்றி நான்கு புறமும் தாழ்வாரம் போன்ற அமைப்பு, கிழக்கு அல்லது தெற்குப் புறமாக வாயில் அமைக்கப்பட்டிருந்தது. இது தமிழகத்தில் காணப்படும் தொன்மையான கட்டடக்கலை மரபின் வடிவமாகும்.

இந்தக் கட்டடக்கலையை மூன்றாகப் பகுக்கின்றனர்.

(i) நாகரம்

(ii) வேசரம்

(iii) திராவிடம்

நாகரம் என்பது வட இந்தியக் கட்டடக்கலையாகும். வேசரம் பௌத்த மதத்தினரால் வளர்ச்சியடைந்தது. டெக்கான் பகுதியில் காணப்படுகின்றது. திராவிடம் தென்னிந்திய கோயில் கட்டடங்களாகும். வீடு, மாளிகை, அரண்மனை பற்றி ஆய்வதே கட்டடக்கலையாகும். அதில் வீட்டின் கட்டிட அமைப்பை ஆராய்வது நாட்டுப்புறக் கட்டடக்கலையாகும்.

நாட்டுப்புறக் கட்டடக்கலை என்பது மரபு வழிப்பட்ட கட்டடக் கலையாகும். மேலை நாட்டில் 'அறிவு சார்ந்த கட்டடக்கலை', நாட்டுப்புறக் கட்டடக்கலை' என இரண்டு இருந்தன. தொழிற்புரட்சிக்குப் பின்னர் 'பொது மக்கள் கட்டடக்கலை' தோன்றியது. அறிவு சார்ந்த கட்டடக்கலை உயர் வகுப்பினர்க்குரியது. அக்கட்டடக்கலையைப் பற்றி பலர் ஆய்வு செய்துள்ளனர்.

ஆனால் நாட்டுப்புறக் கட்டடக்கலை பற்றி மிகுந்த அளவில் ஆய்வுகள் வெளிவரவில்லை.

நாட்டுப்புறக் கட்டடக்கலையில் மரபு வழிபட்ட திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. கட்டடம் கட்டுபவரே வீட்டின் அமைப்பைத் தீர்மானிப்பார். அவ்வீட்டின் அமைப்பு பெரும்பாலும் அப்பகுதியிலுள்ள மற்ற வீடுகளின் அமைப்பு போன்றிருக்கும். முன்னோர் கட்டிய கட்டிட அமைப்பின் மாதிரியாகவும் இருக்கும். அக்கட்டடத்திற்குப் பயன்படுத்தும் பொருட்கள் அப்பகுதியே கிடைக்கக் கூடியதாகவும் இருக்கும்.

மரபுவழிப்பட்ட கூறுகளை அறிவு சார்ந்த கட்டக்கலையிலும், பொதுமக்கள் கட்டடக்கலையிலும் காணலாம். நாட்டுப்புறக் கட்டடக் கலையில் பயன்படுத்தும் பொருட்கள், கருவிகள், தொழில்நுட்ப முறைகள் மற்ற கட்டடக்கலையிலும் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டுப்புறக் கட்டடக்கலை பல்லாண்டு காலமாக வழிவழியாக வருவது; அப்பாணியை அப்படியே பின்பற்றி கட்டடங்கள் கட்டுகின்றனர்.

ஸ்காண்டிநேவியா, வட ஐரோப்பா, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நாட்டுப்புறக் கட்டக்கலையைப் பற்றி ஆய்வுகள் நடந்துள்ளன. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் நாட்டில் நிறைய ஆய்வுகள் நடந்துள்ளன. பண்பாட்டுப் புவியியலாளர்கள் அமெரிக்க நாட்டில் நிறைய ஆய்வுகள் செய்துள்ளனர். ஆனால் இதில் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் அதிகம் ஈடுபடவில்லை.

மேலைநாட்டின் வீட்டமைப்பு (i) வசிக்கும் வீடு (ii) களஞ்சியம் (iii) கொட்டகை (iv) புகைப்பதன இறைச்சி சேமிப்புக்கிடங்கு (v) தொழுவம் போன்ற அமைப்புடையதாக உள்ளது. மரவீடுகளும் மேற்கண்ட அமைப்புடன் அமைத்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள வீட்டுக்கட்டட அமைப்பைப் பற்றிக் காண்போம். ‘சுகாஸ். கெ.பிஸ்வாஸீம், என்.கெ. பெஹீராவும்’ “Peasant Life in India A study in India unity and diversity" என்ற நூலில் வீட்டமைப்பு வகைகள் பற்றி நன்கு ஆராய்ந்துள்ளனர். இந்தியாவில் வீட்டமைப்பு பற்றி விரிவான வேறு ஆய்வுகள் நடைபெறவில்லையாதலால், அவர்களது ஆய்வின் சுருக்கத்தைக் கீழே காண்போம்.

இந்தியாவில் நாட்டுப்புற மக்கள் வசிக்கும் வீடுகளைத் தரையமைப்பு, கூரை ஆகியவற்றின் அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தியுள்ளனர்.

(i) நீண்ட சதுரத் தரையமைப்பும் மட்டமான கூரையும்

(ii) நீண்ட சதுரத் தரையமைப்பும் சாய்வான கூரையும்

(iii) வட்டமான தரையமைப்பும் கூம்புவடிவக் கூரையும்

**நீண்ட சதுரத் தரையமைப்பும் மட்டமான கூரையும் :**

மழை குறைவாகப் பெய்யக்கூடிய இடங்களில் இத்தகைய வீட்டமைப்பினைக் காணலாம். தென்மேற்கு காஷ்மீரம், இராஜஸ்தான், மகாராஷ்டிரா, கிழக்கு மேற்குக் கந்தேஷ், புல்தானா, அவுரங்கபாத் அகமத்நகர், கர்நாடகா, ஆந்திரப்பிரதேசத்தின் சில பகுதிகளில் இத்தகைய வீடுகள் காணப்படுகின்றன. கேரளாவில் இத்தகைய அமைப்புகள் இல்லை. வடபகுதியில் தொடர்ச்சியின்றியும் தென்பகுதியில் தொடர்ச்சியாகவும் காணப்டுகின்றன. தமிழ்நாடு, கர்நாடகாவில் வீட்டின் பின்பக்கத்தில் புறக்கடையமைக்கப்பட்டுள்ளது. வடமாநிலங்களில் திறந்த முற்றங்கள் உள்ளன. மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசங்களில் வீட்டைச் சுற்றி மதில் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. வீடுகட்ட செங்கல்களைப் பயன்படுத்துகின்றனர். மட்டமான கூரை, மரப்பலகை, கோரைப்புல், மூங்கில்பாய்கள் ஆகியவற்றால் கட்டப்படுகின்றது. இராஜஸ்தான், பஞ்சாப் போன்ற இடங்களில் கல் பலகையினால் கூரை அமைக்கப்படுகிறது. கூரையைச் சாணியால் மெழுகுவதுண்டு. கூரையில் இடுக்குகளில் தண்ணீர் ஒழுகாமல் இருக்க உலர்ந்த இலைகளைக் கூரையின் மேல் அடுக்காகப் போடுவர். கர்நாடகாவில் கூரைகளில் புகைபோக்கிகள் உள்ளன.

**நீண்ட சதுரத் தரையமைப்பும் சாய்வான கூரையும் :**

இத்தகைய அமைப்பு இந்தியா முழுவதும் காணப்படுகின்றது. கதவுகளும் காணப்படுகின்றன. அகன்ற கூடம் உள்ளது. வடகிழக்கிந்தியாவில் மேடை எழுப்பி அதன் மீது வீடு கட்டப்படுகின்றது. வெள்ளப்பெருக்கு ஏற்படும் இடங்களில் இவ்வாறு கட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. பழங்குடி மக்களிடையே இத்தகைய அமைப்பு வீடுகளைக் காணலாம். மேடை மீது வீடு கட்டும் அமைப்பு பர்மா, சயாம், தென்கிழக்காசியாவில் காணப்படுகின்றது. மேடை மீது கட்டப்பட்டு

நுழைவாயிலைப் பெற்றுள்ள நீண்ட வீடுகள் இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் காணப்படுகின்றன.

மண், கல், மூங்கில், பாய், மரக்கழிகள் பிரம்பு, மட்டி வர்ணப்பூச்சு ஆகியவற்றால் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. சிலர் செங்கல் சுவர் வைத்துள்ளனர். மண்சுவர் கட்டும் முறையில் சிறிது வேறுபாடு காணப்படுகின்றது. மேற்கு வங்கத்தில் களிமண்ணைப் பிசைந்து துண்டுத் துண்டாக்கி ஒன்றன்மீது ஒன்று அடுக்குகின்றனர். ஒரிஸ்ஸாவில் களிமண் உருண்டைகளால் சுவர் சுட்டுகின்றனர். கர்நாடகாவின் தார்வார் மாவட்டத்தில் களிமண்ணை முக்கோண வடிவத்தில் அடுக்குகின்றனர். சில இடங்களில் சுவர்களுக்குச் சிவப்பு, கறுப்பு வண்ணம் பூசுவதுண்டு. பறவைகள், விலங்குகள் உருவங்கள் வரைவதும் உண்டு.

கூரை வேயப் பயன்படும் புல்லுக்கு மரம் அல்லது மூங்கிலால் செய்யப்பட்ட சட்டமிடுகின்றனர். கிழக்கிலும் வடக்கிழக்கிலும் வைக்கோல் அல்லது ஒருவகைப் புல்லினால் கூரை வேய்கின்றனர். ஓடுகளாலும் வேயப்படுகிறது. தட்டை ஓடுகளைக் கொண்டும் வேய்கின்றனர். பீஹாரில் ஓட்டுக் கூரைகளைக் காணலாம். இராஜஸ்தானில் தட்டையான ஓடுகளைக் கொண்டு வேய்கின்றனர். ஒரிஸ்ஸாவிலுள்ள கூரைகள் வைக்கோலால் வேயப்பட்டுள்ளன. வடக்குப் பகுதிகளில் ஓடுகள் ஓரே அடுக்காகவும் தெற்கில் மூன்று அல்லது நான்கு அடுக்காக ஓடுகளைப் பயன்படுத்துகின்றனர். இந்தியாவின் மேற்குப்பகுதிகளில் நான்கு சாய்தளங்களுடைய கூரைகளையும், பீஹார், மத்தியப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் முக்கோணச் சாய்தள வடிவக் கூரைகளையும் காண்கிறோம். நான்கு சாய்தளங்கள் ஒரே முனையில் சேருமாயின் அது ‘C’ பிரமிடு வகை எனப்படும். அஸ்ஸாமிலும் முக்கோண வடிவக் கூரையே காணப்படுகிறது. கேரளாவில் நான்கு சாய்தளக் கூரையுடைய வீடுகளின் மேல் உத்திரத்திலுள்ள கழியின் முனைகள் மேல்நோக்கி வளைந்திருக்கும். இதனைச் சீனா அல்லது ஜப்பானியக் கூரையோடு ஒப்பிடலாம். கேரளாவில் மேல்நோக்கி வளைந்துள்ள உத்திரத்திற்கு இணையான கட்டட வேலைப்பாட்டிற்குச் சுமத்ராவை ஒப்பிடலாம். இங்குப் ‘பதக்’ கட்டடக்கலை காணப்படுகிறது. மேற்குவங்கத்தில் உத்திரக்கழியும் சாய்வுப் பக்கங்களின் மேல்மட்டமும் குவிந்துள்ளன. இந்தியாவின் கூரையை ‘வங்காளி சத்ரி’ என்பர். சுமத்ராவில் சாய்வான ‘திரை’களைப் பெற்றுள்ள வீடு கேரளாவிலுள்ள சில வீடுகளை ஒத்திருக்கின்றன. மேற்குவங்கத்திலுள்ள குவிந்த கூரைகள் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இரண்டு அல்லது மூன்று அடுக்குகளைக் கொண்ட வீடுகளில் மேலடுக்கு மற்றைய அடுக்குகளைவிடக் குறுகியதாகக் கட்டப்படுகிறது. மேற்கு வங்கத்தில் மூன்றடுக்கு மண்குடிசைகளைக் காணலாம்; குவிந்த வகை கூரைகளைப் பெற்றுள்ளன. ஒரிஸ்ஸாவின் கடற்கரையையொட்டிய இடங்களில் நான்கு சாய்தள வடிவமுடைய கூரைகளில் புதுமையான வேலைப்பாட்டைக் காணலாம்.

கிராம அமைப்பில் காணப்படும் பிரதேச வேறுபாடு கட்டட அமைப்பில் காணமுடியவில்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகளைவிட, ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம் முதலிய தனித்தனி மாநிலங்களில் காணப்படும் வேறுபாடே அதிகம். பொருளாதார நிலை, அந்தப் பகுதியில் கிடைக்கும். பொருட்கள், தட்பவெப்பநிலை ஆகியவற்றைப் பொறுத்தே வீடுகள் கட்டப்படுகின்றன. இந்தியா முழுவதும் பெரும்பாலும் ஒரே மாதிரியான கட்டிட அமைப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன.

**வட்டமான தரையமைப்பும் கூம்புவடிவக் கூரையும்:**

இந்த வகை அமைப்பு சில இனத்தாரிடையே மட்டும் உள்ளது. சோட்டா நாக்பூரில் வாழும் பீர்ஹோர் பழங்குடி மக்கள் இவ்வகைக் குடிசைகளைக் கட்டிக் கொள்கின்றனர். கிளை குச்சியைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் சுவர் இல்லை. ஆந்திரப்பிரதேச வால்டேர் பகுதியில் கூம்பு வடிவக் குடிசைகளைக் காண்கிறோம். ஒரிஸ்ஸாவிலுள்ள பூரி மாவட்டத்தில் குடிசைகள் கோளார்த்த வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. செஞ்சு பழங்குடிகளின் வீடும் ஏறத்தாழ இதே அமைப்பைப் போன்றது; சுவர் மண்ணைக் கொண்டும் பனை ஓலையால் கூரையும் வேய்கின்றனர். ஒரிஸ்ஸாவில் குடியேறியுள்ள ஆந்திர மக்கள் தேன்கூடு போன்ற குடிசைகளை அமைத்துக் கொள்கின்றனர். இங்குச் சுவர்கள் இல்லை. பனை ஓலைகளால் கூரை வேய்கின்றனர். மேற்கு குஜராத், சௌராஷ்டிரா பகுதி மக்களிடையே வட்டமான வீடுகள் காணப்படுகின்றன. சுவர்கள் கட்டப்படுகின்றன. கூரைகள் குட்டையாகவும் வட்டமாகவும் கூரான முனையுடனும் அமைக்கப்படுகின்றன. கட்டடக்கலையில் வட்டத்தரையமைப்பு பழமை வாய்ந்ததாக இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர். இத்தகைய அமைப்பு பெரும்பாலும் பழங்குடி மக்களிடையே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறக் கட்டடக்கலையைப் பற்றி உலக அளவிலே கூட மிகுந்த ஆய்வு செய்யப்படவில்லை. இந்திய நாட்டில் துவக்கமே செய்யப்படவில்லை

எனலாம். நாட்டுப்புறக் கட்டடக்கலையை நன்கு ஆராயின் இந்தியப் பண்பாட்டின் வேற்றுமையில் ஒன்றுமையையும் கட்டக்கலையின் வளர்ச்சியையும் நன்கு அறிந்து கொள்ளலாம். கட்டடக்கலையின் தொன்மையை மீட்டுருவாக்கம் செய்யப் பயன்படும். இத்தகைய ஆய்வு நாட்டுப்புற வாழ்வியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமையும்.

**நாட்டுப்புறக் கைவினைப்பொருட்கள் (Folk Crafts):**

நாட்டுப்புறக் கைவினைப் பொருட்களின் தாயகமே கிராமங்கள்தான். கிராம மக்கள் தங்கள் கலைத்திறனைக் காட்டி, பல பொருட்களைச் செய்கின்றனர். பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்ற பொருட்களும் உண்டு. தமிழ்நாட்டு மக்கள் உற்பத்தி செய்யும் சில கைவினைப் பொருட்களை உலகமே கண்டு வியந்து பாராட்டுமளவிற்கு அமைந்துள்ளன.

**மண்பாண்டக்கலை:**

தமிழகத்தின் மண்பாண்டக்கலை மிகவும் சிறப்புப் பெற்றது. கலையழகுடன் கைத்திறனையும் காட்டி மண்பாண்டம் செய்வதையே பெரும் கலையாக்கிவிட்டனர். வண்ண நிறங்களும் உருவ அமைப்பில் மாற்றமும் செய்து கலையழகுடன் பொருந்திய பொருட்களை உருவாக்குகின்றனர். கிராமங்களில் காணப்படும் அய்யனார் போன்ற தெய்வங்கள் அனைத்தும் இவர்களது கைவண்ணத்தில் மிளிர்ந்தவைகளே. பண்டைய வேலைத்திறனுடனும் இன்றைய கலைக்கண்ணோட்டத்துடன் களிமண்ணில் செய்யப்படுகின்றன. காசியைச் சேர்ந்த வைத்தியநாத சரசுவதி அவர்கள் மண்பாண்டக் கலையை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். சிறந்த ஆய்வாக அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பெற்ற ஆய்வாகும்.

**காகித பொம்மைகள்:**

களிமண்ணில் பொம்மைகள் செய்வது போன்று காகிதத்தைக் கொண்டு பொம்மைகள் செய்ய முற்பட்டுள்ளனர். உலோகத்தில் செய்தது போன்று பிரமிப்பைக் காகிதப் பொம்மைகள் நமக்கு அளிக்கின்றன. இன்றைய நாகரிகப் போக்கிற்கேற்ப காகிதப் பொம்மைக்கலை வளர்ச்சி பெற்றுள்ளது.

**மர பொம்மைகள்:**

காகிதத்தில் பொம்மைகள் செய்வது போன்று மரத்தில் அழகான பொம்மைகள் செய்யப்படுகின்றன. இக்கலை பன்னெடுங்காலமாக நம் நாட்டில் இருந்து வருகிறது. தேரின் சக்கரங்களிலும், வீட்டுவாயிற்படிகளிலும் கதவுகளிலும் அழகான மரப்பொம்மைகள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

**பாய் பின்னுதல்:**

பாய் பின்னும் தொழிலும் பல தலைமுறையாகத் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றது. பத்தமடை பாய் உலகிலே புகழ் வாய்ந்த தொன்றாகும். பனை ஓலையால் கூடைமுடைதலும் பெருகி வருகின்ற கைத் தொழிலில் ஒன்றாகும்.

**மர வேலைப்பாடு:**

தமிழ் நாட்டில் மரவேலைப்பாடு மிகச் சிறப்பாக வளர்ந்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தேர்களில் அழகான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. திருவாரூர் தேர், ஸ்ரீவில்லிபுத்தூர் தேர் முதலியவற்றில் மரத்தினால் எவ்வளவு அழகான அருங்கலைகளை உருவாக்கியுள்ளனர். இக்கலை பன்னெடுங்காலமாகச் சிறப்புற்று விளங்கி வருகிறது.

**உலோக சிற்ப வேலைப்பாடு:**

உலகத்தின் கவனத்தையே கவரும் வண்ணம் தமிழகத்தில் உலோகச் சிற்ப வேலைப்பாடு சிறப்புற்று விளங்குகிறது. நமது கலைஞர்களின் கைவண்ணத்தில் செய்யப்பட்ட உலோக சிற்பங்களுக்கு உலக அரங்கில் பெரும் மதிப்புண்டு. உலோகங்களில் தெய்வச்சிலைகளும் பாவை விளக்குகளும் செய்யப்படுகின்றன. வெண்கல வார்ப்புக்கலையும் தமிழகத்தில் சிறந்து விளங்குகின்றது.

**கல் சிற்ப வேலைப்பாடு:**

உலோகத்தால் செய்கின்ற சிற்பங்கள் போல, கல்லாலே அழகிய சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. கலைஞர்களின் கைத்திறனையும்

கைவண்ணத்தையும் இவற்றில் காணலாம். கோயில்களில் காணப்படும் கல் சிற்ப வேலைப்பாடு உலகில் அனைவரது கவனத்தையும் கவர்கின்றது. கல்லிலே சிலை வடிப்பதற்கென மகாபலிபுரத்தில் பயிற்சிக்கூடமே உள்ளது. தமிழர்கள் இம்மூன்று கலைகளிலும் வல்லவர்கள் என்பதை நம் கோயில்களே சான்றாகும். வாழையடி வாழையாக வளர்ந்து வரும் இக்கலைகள் மேலும் சிறப்புற்று வளர அரசு ஆவன செய்து வருவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

**சப்பரம், தேர், தெய்வம் அலங்கரிக்கும் கலை:**

திருவிழாக் காலங்களில் தெய்வங்களை ஊர்வலமாக எடுத்துச் செல்வர். அப்போது சப்பரம், தேர் முதலியவற்றையும் தெய்வத்தையும் அலங்கரிப்பர். இவ்வலங்காரம் மூலம் அழகியல் உணர்வு வெளிப்படுகின்றது. பல வண்ணத்துணிகள், வண்ணச் சேர்க்கை, மலர்கள், இலைகள் முதலியவற்றைக் கொண்டு அலங்கரிப்பர். கோயில்களில் பயன்படுத்தும் குடை, ஆலவட்டம் முதலியவை கலைஞர்களின் கைவண்ணப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

**நெசவுக்கலை, சாயமேற்றும் கலை:**

இவ்விரண்டு கலைகளும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே சிறந்து விளங்கியுள்ளதை வரலாறு நமக்குக் காட்டுகின்றது. நெசவுக்கலையோடு இணைந்த சாயமேற்றும் கலையும் சிறப்புற்று விளங்கியது. சோலைகளிலும், பூங்காக்களிலும் காடுகளிலும் பூத்த மலர்களின் வண்ணங்களைக் கண்டு ரசித்த மனிதன், உதயசூரியன் வானத்தில் தீட்டும் பல வண்ணங்களை ரசித்த மனிதன் பற்பல நிலங்களைக் கொண்ட சாயங்களைத் தோற்றுவித்தான். சங்க இலக்கியங்களிலும் சீவகசிந்தாமணி, பெருங்கதை போன்ற நூல்களிலும் இவற்றைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**தஞ்சாவூர்த் தட்டு, நெல்மணி, ஏலக்காய் மாலை செய்யும் கலை:**

தஞ்சை என்றாலே பல கலைகளின் பிறப்பிடம் எனக் கூறலாம். தென்னாட்டின் நெற்களஞ்சியமான அத்தஞ்சைத் தரணியிலே நெல்மணி, ஏலக்காய் முதலியவற்றைக் கொண்டு அழகுற மாலை தொடுக்கின்றனர். இவ்வழகைக் கண்டு மேலை நாட்டினரே வியந்து போற்றுகின்றனர். தஞ்சாவூர் தட்டும் தஞ்சாவூர்

பொம்மையும் கழையழகுடன் மிளிர்பவைகள். கலைகளுக்குப் பெயர் போன தஞ்சை மாவட்டத்தில் தென்னங்கீற்றைக் கொண்டு அழகான பந்தல் அமைக்கின்ற கலையே தொழிலாகவும் தொழிலே கலையாகவும் கொண்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# அலகு II

# நாட்டுப்புற நம்பிக்கைகள்

# அலகு II

## நாட்டுப்புற நம்பிக்கைகள்

"நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்". நாட்டுப்புறவியல் என்பது மக்களது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படைப் பொதுக்கூறு எனப்படும். மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுங்கு, சட்டம், வழக்கம் முதலியவைதாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர் அவர்கள். வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கைப் பண்பாடு என்கிறார். மாலினோவஸ்கி. பண்பாட்டினை வாழ்முறையாகக் கருதினால் மனிதனின் சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் இதன் கண் அடங்கிவிடுகின்றன. பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிகற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர்.

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்மை உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாகத் தொடர்ந்து வரக்காண்கிறோம். நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத போதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன. மனித மனத்தின் விளைவாக நம்பிக்கை தோன்றுகிறது. மனிதன், அச்சத்தின் காரணமாக இயற்கையின் தோற்றத்தினையும் செயற்பாடுகளையும் தனது வாழ்வோடு இணைத்து நோக்கிய நிலையில் தோற்றம் கொண்டன எனக் கூறலாம். நம்பிக்கைகள் காலம் காலமாக ஒரு

தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவி வருகின்றன. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பலவித நம்பிக்கைகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன என்று கூறுமளவிற்கு அவன் வாழ்வில் பெரும்பங்கு வகிப்பதையும் காண்கிறோம். நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன என்று கூறுமளவிற்கு அவன் வாழ்வில் பெரும்பங்கு வகிப்பதையும் காண்கிறோம். மனித வாழ்வில் நம்பிக்கைகள் என்று தோன்றின என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. எனினும் மக்களின் நடைமுறை வாழ்வில் இந்நம்பிக்கைகள் தொடர்ந்து வருவதைக் கூர்ந்து நோக்கின் இதனைச் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனக் கூறலாம். காரண காரிய தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ, காரண காரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என்றும் வகைப்படுத்துவர். மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளுக்குக் காரணம் அறியமுடியவில்லை என்றாலும் மனித சமுதாயம் நம்பிக்கை வயப்பட்டுச் செயல்படுவதைக் காணலாம். ஒரு சமுதாயத்திடம் காணப்படும் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தினைப் பற்றி அறியமுடிகின்றது. தனி மனித நம்பிக்கை காலப்போக்கில் சமுதாய நம்பிக்கையாக மாற்றம் பெறுவதுண்டு.

பழங்குடி நிலையிலிருந்து மனிதன் நாகரிகம் அடைந்தாலும் பழங்குடி மனநிலை அவனை விட்டுப் போகவில்லை. பழங்கால மனிதன் தன்னைச் சுற்றி நடக்கின்ற காரியங்களுக்குக் காரணங்கள் கண்டுபிடிக்க இயலாத நிலையில் இருந்தான். பின்னர் இயற்கையைக் கட்டுப்படுத்த விரும்பி 'செய்வினையில்' ஈடுபட்டான். செய்வினை ஆதிக்கம் குறைந்த சமுதாயத்தில் செய்வினை பற்றிய நம்பிக்கைகள் நாட்டுப்புற நம்பிக்கைகளாக மாறின. சமூக நீதியானது சமூக மாற்றத்திற்குப் பின் நாட்டுப்புற நம்பிக்கையாக மாறிற்று. நாட்டுப்புற மருத்துவமே பல நாட்டுப்புற நம்பிக்கைளுக்குத் தாய் ஆகும். நாட்டு மருத்துவம் ஆதிக்கம் உள்ள சமுதாயத்தில் நாட்டுப்புற மருத்துவம் கூறும் விதிகளும் நடைமுறைகளும் நாட்டுப்புற நம்பிக்கையாயிற்று. நாட்டுப்புற நம்பிக்கைகள் தோன்றிய வரலாற்றைத் தமிழவன் அவர்கள் தமது 'நாட்டுப்புற நம்பிக்கைகள்' என்று நூலில் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகின்றார்.

பழக்கவழக்கங்கள் காலப்போக்கில் சீரிய சிந்தனை, அறவியல் கருவி ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும் பொழுது அவை

சடங்காக மாறுகின்றன. சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனிமனிதனின் சுயமான ஆக்கமாகவோ பண்பாட்டினுடைய தனிச்சிறப்புக் கூறாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றிச் சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன என்கிறார் 'ரூத் பெனடிக்ட்'. புனிதப் பொருள்களின் முன்னால் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனக்கூறும் ஒழுக்க விதிகளே சடங்குகள் என்கிறார் 'டூர்கைம்' எனும் சமூகவியல் பேரறிஞர். சடங்குகள் பற்றிய ஆரம்ப காலத்தில் பண்பாட்டு மானுடவியல் பேரறிஞர்கள் மட்டுமே ஆராய்ந்தனர். தற்போது நாட்டுப்புறவியலிலும் ஆராயத் தொடங்கிவிட்டனர். நம்பிக்கைகளையும் இலட்சியங்களையும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான சடங்கு நாட்டுப்புறவியலில் முக்கிய இடம் வகிக்கின்றது. சடங்குகளின் சமூகப் பயன்பாட்டை நோக்குதல் இன்றியமையாதது. மாலினோவ்ஸ்கி, ரெட்கிளிப், பிரௌவ்ண் போன்றோர் பயன்பாட்டாய்வுக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தினர். வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் அவற்றின் சடங்குகளில் மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இது சடங்கு பற்றிய ஆய்வுக்கு ஆழமான வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தை அளிக்கின்றது என 'நரேந்திரநாத் பட்டாச்சாரியா' குறிப்பிடுகின்றார். இவன்கண் சடங்குடன் நம்பிக்கைகளையும் இணைத்து நோக்க வேண்டும். செயல் வகை, அறிவியல் வகை, மொழி வகை, இலக்கிய வகை என்ற நான்கினுள் நம்பிக்கைகள், எண்ணங்கள், சகுனங்கள் முதலியன அறிவியல் வகையின்கண் அடங்குமென்பர்.

**பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும் :**

பண்டைக்காலம் முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடியைந்த மனித வாழ்க்கையில் நம்பிக்கைகள் தோன்றலாயின. உலகெங்கும் வாழும் பழங்குடி சமுதாய வரலாற்றை நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். பண்டைத் தமிழரிடையே நிலவிய நம்பிக்கைகளையும் சகுனங்களையும் இங்குச் சுருக்கமாகக் காண்போம். கி.பி.5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 'ஆசாரக்கோவை' மூலம் பண்டைத்தமிழரின் நம்பிக்கைகளைப் பற்றி அறிகிறோம்.

தொல்காப்பியத்திலே 'நாளும் புள்ளும் பிறவற்றினிமித்தமும்' (தொல்.பொருள்.91) எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'புள்' எனக் குறிப்பிட்டது முன்னர்

பறவையையும் பிற்காலத்தே சகுனங்களைப் பற்றியும் குறிப்பனவாக அமைந்துள்ளதை 'வாய்ப்புள், பறவாய்புள்' எனக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

'கூகை அலறினால் சாவு வரும்'

என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடையேயும் இன்றும் தமிழகத்தில் நிலவி வருவதை அறியலாம். இதனைப் புறநானூறு நமக்குக் காட்டுகின்றது.

'அஞ்சுவரு குராற் குரலுந் தூற்றும்' (புறநானூறு -280)

'காகம் கத்தினால் விருந்தினர் வருவர்' என்பது அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவி வரும் நம்பிக்கையாகும்.

'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை

அன்புடை மரபினின் கிளையோ டார' (குறுந்தொகை - 391)

ஏதேனும் நல்ல காரியத்திற்குப் புறப்படும் பொழுது காகம் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் செல்லுதல் நல்லது என நம்புகின்றனர்.

பண்டைக்காலத்தில் காட்டிடையே மக்கள் செல்லும் பொது ஆறரலைக் கள்வர் மிகுந்த தொல்லை கொடுத்துக் கொண்டேயிருப்பர். ஆறரலைக் கள்வர் நடமாட்டத்தைக் 'கணந்துள்' என்ற பறவை சத்தம் எழுப்பி மற்றவர்கட்கு எச்சரிக்கை விடுத்த செய்தியையும் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.

'ஆற்றய லிருந்த இருந்தோட் டஞ்சிறை

நெடுங்காற் கணந்துள் ஆளறி வுறீஇ

ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்' (குறுந்தொகை - 350)

ஏதேனும் காரியத்திற்குப் புறப்படும் போது நல்ல வார்த்தை கேட்பதும் நல்ல சகுனமாகக் கருதப்பட்டது. இந்த நம்பிக்கை இன்றும் நிலவுவதைக் காணலாம். தொல்காப்பியர் இதனைப் 'பாக்கத்து விரிச்சி' எனக் குறிப்பிடுகின்றார். இதனை விரிச்சி நிற்றல், வாய்ப்புள், பறவாப்புள், நற்சொல், வாய்ச் சொல் என்றும் வழங்குகின்றனர். இதனை அசரீரீ என்றும் கூறுவர். கனவு காணுதல், பல்லி சொல்லுதல், கண் துடித்தல் பற்றிய நம்பிக்கைகளையும் காண்கிறோம் உடம்பிலுள்ள ஒரு பகுதி துடிப்பது முதவியவற்றைக் கொண்டு, எதிர்காலத்தைக் கணிப்பதும் உண்டு. இடது கண் துடிப்பது பெண்களுக்கு நல்லது என 'எட்கர்

தொர்ஸ்டன்' கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. தலைவனை எதிர் நோக்கும் தலைவிக்குக் கண் துடித்தால், தலைவன் விரைவில் வருவான் என நம்புகிறாள்.

'நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே' (கலித்தொகை - II)

'நுண்ணோர் புருவத்த கண்ணு மாடும்' (ஐங்குறுநூறு - 218)

அடியார்க்கு நல்லார் 'கனாநூல்' பற்றியும் குறிப்பிடுகின்றார். இரவில் காணும் கனவுகளுக்குப் பலன் கூறுவதை இன்றும் காண்கிறோம்.

தன்னை ஒருவர் நினைத்தால் தும்மல் வரும் என்ற நம்பிக்கையைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.

'சென்றவர் உள்ளிய தன்மையர் போலு மடுத்தடுத்து

ஒள்ளிய தும்மல் வரும்' (ஐந்திணை எழுபது - 40)

குழந்தை தும்மினால் தாய் 'நூறு' எனக் கூறுவது நூறாண்டு வாழ்க என்ற பொருளில் ஆகும்.

சுபகாரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது விளக்கு அணைந்தால், நல்ல சகுனமாகக் கருதுவதில்லை. இந்த நம்பிக்கை இந்தியா முழுவதும் உள்ளது.

'நெடுநகர் வரைப்பின் விளக்கம் நில்லா' (புறநானூறு - 280)

யாரேனும் ஒரு காரியத்திற்குப் புறப்படும் பொழுது தலைவிரிக் கோலமான பெண்ணைக் கண்டால் கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர்.

'பல்லி சொல்லுதல்' தமிழர்களது வாழ்வில் முக்கிய இடம் பெற்றுள்ளது எனலாம்.

'பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி

நல்ல கூறென நடுங்கிப்

புல்லென மாலையொடு பொருங்கொறானே' (அகநானூறு - 289)

'நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கிற் றேற்றம்'(நற்றிணை - 246)

பச்சோந்தி இடமிருந்து வலம் சென்றால், நல்ல சகுனமாகக் கருதினர்.

'நாவி சிச்சிலி யோந்திதான். . . வலமாயின்

வழிப்பயண நாகை நன்றாம்' (அரப்பளீச்சர சதகம்)

பெண்களிடையே கூடலிழைத்தல் இருந்தது. காதலன் வருகையை நினைத்துக் காதலி மணலில் விரலால் வட்டமிடுவாள் வட்டத்தின் இருமுனைகளும் நேராகச் சந்தித்தால் நல்ல அறிகுறி என்றும், அப்படியில்லாவிட்டால் நல்ல அறிகுறி இல்லையென்றும் சங்க கால மக்கள் (அகநானூறு - 351, கலித்தொகை - 142) நம்பினார்.

எதிர்காலத்தைக் குறி சொல்லுபவர் மூலம் அறிந்து கொண்டார்கள் தமிழர்கள். குறி சொல்லும் பெண்களைக் ‘கட்டுவிச்சி’ என்றும் ‘அகவன் மகள்’ என்றும், குறிசொல்வோனை ‘வேலன்’ என்றும் குறிப்பிட்டனர். குறி கேட்கும் நம்பிக்கையுள்ள மக்களை அன்று மட்டுமல்ல இன்றும் கிராமப்புறங்களில் காண்கிறோம்.

பண்டைத் தமிழர் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினர் என்பதும் பறவை, விலங்குகளின் நடத்தைகளைக் கண்டுணர்ந்தனர் என்பதும் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். ஹெலன் ஜான்சனின் கருத்து இங்கு நினைவுகூரத்தக்கது. ‘நம்பிக்கைகள் எழக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகள் உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். ஆனால் நம்பிக்கை இருப்பது உண்மை, அவை மெய்ப்பிக்கத்தக்கவை’. அந்த அடிப்படையில் நம்பிக்கைகள் ஆராய வேண்டும் என்கிறார்.

**நம்பிக்கைகளின் வகைகள்:**

நாட்டுப்புற மக்களிடையே எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன. அவற்றில் சிலவற்றைத் தொகுத்தும் வகுத்தும் காண்போம்.

**குழந்தை பற்றிய நம்பிக்கைகள்:**

**1. பிள்ளைப் பேற்று நோன்பு**

திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்துவிட வேண்டும் என விரும்புவர். குழந்தை இல்லையெனின் சமுதாயத்தின் தூற்றுதலுக்கு ஆளாக வேண்டுமே என எண்ணினர். குடும்பத்தின் பெயர் சொல்ல வாரிசு வேண்டும் என விரும்பினர். அதற்காகப் பெண்கள் அரசமரத்தைச் சுற்றி வருதல் உண்டு. ‘அரசமரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைப் பார்த்தாளாம்’ என்ற பழமொழியே வழங்குகிறது. அரசமர வழிபாடு மலட்டுத் தன்மையைப் போக்கவல்லது எனச்

‘சிங்கர் சென்குப்தா’ தமது நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். வெள்ளிக்கிழமை விரதமும் பாம்புப்புற்று வண்ணமும் பிள்ளைப் பேற்று நோன்புகளாகும்.

## 2. கண்ணேறு கழித்தல்

குழந்தைகளுக்குக் கண்ணேறு கழிப்புச் செய்வதுண்டு. சில கண்களுக்குத் தீமை விளைவிக்கும் சக்தி உண்டு. எனவே அத்தகையாரது கண்பட்டால் குழந்தைக்கு நோய்நொடி வரக்கூடும் என்று நம்புகின்றனர். எனவேதான் ‘கல்லடி பட்டாலும் கண்ணடிப்படக்கூடாது’ என்று கூறுவர். கண்ணேறுபட்டதைக் கழிப்பதற்காகச் சுண்ணாம்பும் மஞ்சளும் கொண்டு சுற்றி வீதியில் எறிவார்கள். இவ்வாறு செய்தால் கண்ணேறு கழிந்து விடுமென இன்றும் மக்கள் நம்புகின்றனர்.

‘கண்ணான கண்ணார்க்கு கண்நோக்கும் வாராமல்

சுண்ணாம்பும் மஞ்சளும் சுற்றி எறி கண்ணார்க்கு’

என்ற பாடல் கண்ணேறு கழிக்கும் முறையைக் கூறுகின்றது. இதனைத் ‘திருஷ்டி கழித்தல்’ என்றும் கூறுவர்.

புதுவீடு கட்டும்போது பூசணிக்காயில் மனித உருவமிட்டுக் கரும்புள்ளி இடுதலும் கண்ணேறு கழித்தல் என்ற நம்பிக்கையில் செய்வதாகும்.

## 3. காது குத்தல்:

குழந்தைக்குச் சிறு காயம் ஏற்படாவிட்டால் எமன் அக்குழந்தையைத் தூக்கிச் சென்று விடுவான் என்ற நம்பிக்கையின் காரணமாகக் காதுகுத்தும் வழக்கம் தமிழ்நாட்டில் தோன்றியிருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுவர். காது குத்தும் வழக்கம் தமிழ்நாடு மட்டுமின்றி சீனா, எகிப்து போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது. காது குத்தும் போதும் ஏதேனும் உலோகத்தையும் அணிவிப்பர். தீமை தரும் ஆவிகள் தலை, வாய், மூக்கு, காது ஆகிய உறுப்புகள் வழியாக எளிதில் புகுந்துவிடும் என்ற நம்பிக்கையில் காதில் துளையிட்டுத் தீய ஆவிகளை விரட்டும் சக்தியாகக் காதில் ஏதேனும் ஓர் உலோகத்தை அணிவித்தால் காது வழியாகத் தீய ஆவி நுழைவதைத் தடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் இப்பழக்கம் ஏற்பட்டிருக்கலாம். கண்ணேறு பட்டுவிடும் என்பதாலும் காது

குத்துகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். காது குத்தும் சடங்கிற்கும் இத்தகைய நம்பிக்கைகள் அடிப்படைக் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

**4. குழந்தை கொடி சுற்றிப் பிறத்தல்:**

குழந்தை கொடி சுற்றிப் பிறந்தால் அதன் தகப்பனாருக்கு ஆகாது என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. 'கொடி சுற்றிப் பிறந்தால் கோத்திரத்திற்கு ஆகாது மாலை சுற்றிப் பிறந்தால் மாமனுக்கு ஆகாது' என்ற பழமொழி இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியிருக்கலாம்.

(i) முதல் குழந்தை பெண்ணாகயிருப்பின் அக்குடும்பத்திற்கு வளம் சேரும்.

(ii) மூன்று பெண் பிள்ளைகளுக்கு அடுத்துப் பையன் பிறந்தாலும், மூன்று ஆண் பிள்ளைகளுக்கு அடுத்துப் பெண் பிறந்தாலும் அழகல்ல.

(iii) குழந்தையின் அருகே இரவில் வௌவால் பறந்தால் நல்லதல்ல.

(iv) கர்ப்பிணி படுத்து எழுந்திருக்கும்போது வலது கையை ஊன்றினால் ஆண் குழந்தை பிறக்கும்.

(v) குழந்தை பிறக்கும் போது தலைமயிர் குறைவாகயிருந்தால் பெற்றோர்க்குக் கடன் தொல்லை குறைவாகயிருக்கும்.

(vi) குழந்தை பிறக்கையில் தலைமயிர் அடர்த்தியாக இருந்தால் பெற்றோர்க்குக் கடன் தொல்லை அதிகமாக இருக்கும் என்று குழந்தை தொடர்பான பல நம்பிக்கைகள் உள்ளன.

**பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பூப்படைதல் நல்லது.

(ii) செவ்வாய்க்கிழமை பருவமடைந்தால் நல்ல கணவன் கிடைக்கமாட்டான்.

(iii) ஞாயிற்றுக்கிழமை பூப்படைந்தால் குழந்தைப்பேறு கிட்டாது.

(iv) சித்திரை மாதம் பருவமடைந்தால் கணவனுக்கு நல்லதல்ல.

(v) வைகாசி மாசம் பருவமடைந்தால் செல்வம் செழிக்கும்.

(vi) ஆனி மாதம் பருவமடைந்தால் பொருட்சேதம் உண்டாகும்.

(vii) ஆடி மாதம் பருவமடைந்தால் பொருள் சேரும்.

(viii) ஆவணி மாதம் பருவமடைந்தால் வாயாடியாக இருப்பாள்.

(ix) புரட்டாசி மாதம் பருவமடைந்தால் பொருட்சேதம் உண்டாகும்.

(x) ஐப்பசி மாதம் பருவமடைந்தால் பிள்ளை குட்டி நிறைய பெறுவாள்.

(xi) கார்த்திகை மாதம் பருவமடைந்தால் புண்ணியவதியாக இருப்பாள்.

(xii) மார்கழி மாதம் பருவமடைந்தால் பதிபக்தியுள்ளவளாக இருப்பாள்.

(xiii) தை மாதம் பருவமடைந்தால் செல்வம் செழிக்கும்.

(xiv) மாசி மாதம் பருவமடைந்தால் கர்ப்பத்தை அழித்திடுவாள்.

(xv) பங்குனி மாதம் பருவமடைந்தால் பதிவிரதையாக இருப்பாள்.

**திருமணம் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) இரண்டு திருமணங்கள் ஒரே வீட்டில் ஒரே நேரத்தில் நடந்தால் ஒரு குடும்பம் சிறக்கும் ஒரு குடும்பம் தாழும்.

(ii) திருமணத்திற்குப் பின் மணப்பெண்ணை வெள்ளியன்று கணவன் வீட்டிற்கு அனுப்பக் கூடாது.

(iii) திருமணம் பற்றிய கனவு நல்லதன்று.

(iv) மணமான பெண் மாப்பிள்ளை வீட்டில் நுழையும் போது, வலதுகாலை எடுத்து வைத்து நுழைய வேண்டும்.

(v) ஆடி மாதத்தில் பெண் பார்த்தல் நல்லதல்ல.

(vi) சுமங்கலிகள் தாம் திருமணச்சடங்கில் பங்கு பெற வேண்டும்.

(vii) திருமணமான மணமக்களை மஞ்சள் கலந்த அரிசியால் வாழ்த்த வேண்டும்.

(viii) கணவன் வீட்டிற்கு வந்தவுடன் மணப்பெண்ணானவள் உப்பிலோ அல்லது நெல்லிலோ கை வைக்க வேண்டும்.

(ix) புதுமணத் தம்பதிகள் புதுவீட்டில் குடியேறக் கூடாது.

(x) ஆடி மாதத்தில் கணவனும், மனைவியும் ஒன்றாக இருக்கக் கூடாது. ஆடி மாதத்தில் உறவு ஏற்படின் கோடைக்காலமான சித்திரையில் குழந்தை பிறக்கும். அது தாயுக்கும் சேயிக்கும் உடல்நிலை கருதி நல்லதல்ல என்ற எண்ணத்தில் இப்படியொரு நம்பிக்கை தோன்றியிருக்கலாம்.

**கர்ப்பிணிப் பெண்கள் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) கர்ப்பமாக உள்ளவர்கள் தலைவாசலில் தலை வைத்துப் படுக்கக் கூடாது.

(ii) கர்ப்பிணிப் பெண்கள் விரும்பும் பொருளை வாங்கிக் கொடுக்காவிட்டால், குழந்தையின் காதில் சீழ் வடியும் என நம்புகின்றனர்.

(iii) கர்ப்பிணிப் பெண்கள் வலது கையை ஊன்றினால் ஆண் குழந்தையையும் இடது கையை ஊன்றினால் பெண் குழந்தையும் பெறுவாள் என நம்புகின்றனர்.

(iv) கர்ப்பிணிப் பெண்கள் அதிகமாக வாந்தி எடுத்தால் ஆண் பிள்ளையும், குறைவாக வாந்தி எடுத்தால் பெண் குழந்தையும் பிறக்கும் என நம்புகின்றனர்.

(v) வலது பக்கம் சாய்ந்து படுத்தால் பெண்; இடது பக்கம் சாய்ந்து படுத்தால் ஆண்.

**வேளாண்மை பற்றிய நம்பிக்கைகள்:**

(i) வியாழன் நாற்று நடுவது வெள்ளி அறுப்பதும் நல்லது.

(ii) திங்கள், வெள்ளி நெல் அவிக்கக் கூடாது.

(iii) சந்திரனில் பிறை வடகோடு உயர்ந்திருந்தால் வரப்பெல்லாம் நெல் என நம்புகின்றனர்.

(iv) நிலத்தில் முதலில் ஈசானத்தில் ஆரம்பித்து கன்னியில் உழுது முடிக்க வேண்டும் கிழக்கு மேற்காக சால் அடிக்க வேண்டும்.

**மழை பற்றிய நம்பிக்கைகள் :**

(i) வடக்கே, தெற்கே மின்னல் தோன்றினால் மழை வரும் என நம்புகின்றனர்.

(ii) நிலவைச் சுற்றி பெரிய வட்டமாக இருந்தால் மழை பெய்யும் என்றும் சிறியதாக இருந்தால் சில நாட்கள் ஆகும் என்றும் நம்புகின்றனர்.

(iii) ஆடி கூடி கூடி அலைந்தால் மழை வரும்.

(iv) கருப்பு எறும்பு முட்டைத் தூக்கிச் சென்றால் மழை வரும்.

(v) தட்டான் தாழப் பறந்தால் மழை வரும்.

(vi) கோழி சிறகை விரித்து மணலில் பதுங்கினால் மழை வரும்.

(vii) கழுதை இரண்டு காது தூக்கியிருந்தால் மழை வரும்.

(viii) தவளை கத்தினால் மழை வரும்.

(ix) நரி ஊருக்குள் வந்தால் மழை வரும்.

(x) அந்திமழை அழுதாலும் விடாது.

**விலங்கு, பறவை பற்றிய நம்பிக்கைகள் :**

(i) நஞ்சுக் கொடியை நாய் தின்றால் மாட்டின் பால் வற்றிவிடும்.

(ii) கருடன் வட்டமிடல் நல்லது.

(iii) இரண்டு ஆந்தைகள் ஒன்றாகக் காண்பது நல்லது.

(iv) அணில் வந்தால் நல்லது, ஓணான் வந்தால் கெட்டது.

(v) கழுதைக்கு ஊடே போகக் கூடாது.

(vi) எருமை மாடு சனிக்கிழமை ஈனக் கூடாது.

(vii) தேள் கடித்தால் தேளைத் தலைகீழாகத் தொங்கவிட்டால் விஷக்கடி நீங்கும் என நம்புகின்றனர்.

(viii) ஈன்ற பசுவின் இளங்கொடியை ஆலமரத்தில் கட்டித் தொங்கவிட்டால் நிறைய பால் தரும் என நம்புகின்றனர்.

**விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை உள்ளது.

(ii) அடுப்பு இரைந்தாலும் விருந்தினர் வருவர்.

(iii) விருந்தினர் விளக்கு வைத்த பின்பு செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நம் வீட்டு இலட்சுமி அவர்களோடு போய்விடும் என நம்புகின்றனர்.

(iv) வந்த விருந்தினர்கள் ஊர் செல்லும் போதும் வீட்டிலுள்ளவர்கள் ஊர் செல்லும்போதும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது.

(v) முதன்முறையாக வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கு அசைவ உணவு படைக்கக் கூடாது; உறவு முறிந்து விடும்.

(vi) முதன்முதலாக விருந்தினர்கள் வியாழனன்றும் ஞாயிறு அன்றும் ஒரு வீட்டில் உண்ணக் கூடாது.

(vii) விருந்தாளி வாழை இலையை உள்பக்கம் மடித்தால், திரும்ப வந்து சாப்பிடும் பாக்கியம் கிட்டும்.

(viii) விருந்தினர்க்குச் சேவல் கறி படைக்கக்கூடாது.

(ix) விருந்தினர்கள் சென்றதும் வீட்டைப் பெருக்கக் கூடாது; அவ்வாறு செய்யின் அவர்களது தொடர்பு அறுந்துவிடும்.

**எண் பற்றிய நம்பிக்கைகள் :**

(i) மூன்று நல்ல எண்ணாகக் கருதப்படுகின்றது.

(ii) ஒற்றை எண்கள் நன்மை பயக்கும் என நம்புகின்றனர்.

(iii) அஞ்சாவது பெண் அடுக்களையெல்லாம் பொன்

(iv) நான்காவது பெண் நடைக்கல்லைப் பெயர்க்கும்.

(v) எட்டாவது ஆண் வெட்டும் சேவகன்.

(vi) எட்டாவது பெண் பிறந்தால் எட்டிப் பார்க்கும் இடமெல்லாம் கஷ்டம்.

(vii) ஆறாவது ஆண் மகன் ஆனைகட்டி வாழ்வான்.

(viii) ஆறாவது பெண் பிறந்தால் குடும்பம் சீரழியும்.

**நட்சத்திர நம்பிக்கைகள் :**

(i) பரணி பிறந்தவன் தரணி ஆள்வான்.

(ii) அவிட்டம் நட்சத்திரத்தில் பெண் பிறந்தால், தவிட்டுப் பானையெல்லாம் பொன்.

(iii) சித்திரை நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால் தந்தைக்கு ஆகாது (சித்திரையப்பன் தெருவிலே).

**அங்க பலன் பற்றிய நம்பிக்கைகள் :**

(i) மாறுகண் அதிர்ஷ்டம், ‘மாறு கண் மாறி மாறி யோகம்’ என்பர்.

(ii) முன்பல் நீண்டிருந்தால் எதிர்காலத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

(iii) இடுப்புக்குக் கீழே முடி இருந்தால் தரித்திரம்.

(iv) சுருட்டை சோறு போடும்.

(v) கோமுடி கோத்திரத்திற்காகாது.

(vi) பரட்டைமுடி பாடு பார்க்கும்.

(vii) கையில் ஆறுவிரல் இருந்தால் யோகம்.

**மச்சங்களின் பலன் பற்றிய நம்பிக்கைகள் :**

(i) நெற்றியில் மச்சமிருந்தால் சிறப்பான பலன் கிடைக்கும்.

(ii) உச்சந்தலையில் மச்சமிருந்தால் இலட்சியப் பிடிப்பு உள்ளவராக இருப்பர்.

(iii) கண்ணில் மச்சமிருப்பின் அறிவாளியாக இருப்பான்.

(iv) மூச்சின் நுனிப்பகுதியில் மச்சமிருப்பின் வக்கிரப்பு நீதிக்காரணமாக இருப்பான்.

(v) மூக்கின் வலதுபுறம் மச்சமிருப்பின் அறிவாளியாக இருப்பான்.

(vi) உதட்டில் மச்சமிருப்பின் நல்ல நடத்தை உள்ளவனாக இருப்பான்.

(vii) நாவில் மச்சமிருப்பின் கலைமகள் குடியிருப்பாள்.

(viii) கழுத்தில் மச்சமிருந்தால் துரதிருஷ்டசாலி என்று நம்புகின்றனர்.

(ix) தொப்புளில் மச்சமிருப்பின் இன்பமான வாழ்வு அமையும்.

(x) மார்பில் மச்சமிருப்பின் வாழ்க்கை சிரமமாக இருக்கும்.

(xi) தொடையில் மச்சமிருப்பின் நன்கு உழைப்பர்.

(xii) முழங்காலில் மச்சம் இருப்பின் மனைவி மூலம் சுக வாழ்வு அமையும்.

(xiii) பாதத்தில் மச்சமிருப்பின் சமூக நலச் சேவையில் ஈடுபாடு இருக்கும்.

(xiv) மறைவான இடத்தில் மச்சம் இருப்பின் இன்பமான வாழ்வு அமையும்.

**கிழமை பற்றிய நம்பிக்கைகள்:**

(i) செவ்வாய் முடிவெட்டல் வறுமை தரும்.

(ii) செவ்வாயும் வெள்ளியும் தையல் கூடாது.

(iii) பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது.

(iv) புதன் கிழமை பணம் கிடைப்பது நல்லது.

(v) புதன் கிழமை ஈன்ற மாட்டைச் சம்பந்தக்காரருக்குத் தானமாகக் கொடுத்துவிட வேண்டும்.

(vi) வெள்ளிக்கிழமை இரவு ஒரு பொருளையும் கொடுக்கக் கூடாது.

(vii) வெள்ளி, செவ்வாயில் ‘காத்து கறுப்பு’ லாந்தும்

(viii) செவ்வாய் வெறுவாய்.

(ix) வெள்ளிக்கிழமை ஆண் பிறந்தால் கொள்ளிக்கு உதவாது.

(x) வெள்ளி, புதன் தானியங்களை எடுக்கக் கூடாது.

(xi) சனிக்கிழமை சாவுக்குச் சென்றால் அங்கே தங்கக் கூடாது.

(xii) சனிக்கிழமை பிணம் புதைத்தால் கோழியையும் சேர்த்துப் புதைக்க வேண்டும். சனிப்பிணம் துணை கேட்கும்.

**திசை பற்றிய நம்பிக்கைகள்**

(i) ஞாயிற்றுக்கிழமை கிழக்கே போனால் விருந்து சாப்பிடலாம்.

(ii) திங்கட்கிழமை கிழக்கே போனால் வரவு உண்டாகும்.

(iii) வெள்ளிக்கிழமை கிழக்கே போனால் அடிதடி உண்டாகும்.

(iv) சனிக்கிழமை கிழக்கே போகக் கூடாது.

**கோலம் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) வெளியே இருந்து உள்நோக்கி கோலம் போட வேண்டும். தெருப்படியில் ஆரம்பித்து வாசற்படியில் முடிக்க வேண்டும்.

(ii) கோலத்தில் இலட்சுமி இருப்பதாக நம்புகின்றனர்.

(iii) கோலமிடும் செம்மண்ணைத் திருமாலாகக் கருதுகின்றனர்.

(iv) கோலமிட்டால் கோடிச் செல்வம் பெருகும் என நம்புகின்றனர்.

(v) உயிர்களை மீட்கும் சக்தி கோலத்துக்கு உண்டு என நம்புகின்றனர்.

(vi) கோலத்தைத் தாண்டி பேய், பிசாசு வராது என நம்புகின்றனர்.

(vii) நீர்க்கோலம் அழிவைக் கொடுக்கும்.

(viii) பின் வாசலைத் தெளித்து பின்னர் முன் வாசலைத் தெளிக்க வேண்டும். ‘முற்றம் தெளித்தேன் மூதேவியே போ வாசல் தெளித்தேன் மகாலட்சுமியே வா என்பது மக்கள் நம்பிக்கையாகும்.

(ix) வாசலில் கீழிருந்து மேல்நோக்கி புள்ளிகள் வைத்து கோலமிட்டால் செல்வம் பெருகும்.

(x) அழகாகக் கோலமிட்டால் நல்ல கணவன் கிடைப்பான் என நம்புகின்றனர்.

(xi) கதிரவன் தோன்றும் முன் போட்டால் அருள் கிட்டும்.

(xii) வீட்டிலுள்ளோர் வெளியே புறப்படும் முன் கோலமிட்டால், செல்லும் காரியம் வெற்றி பெறும்.

(xiii) தாமரையும் சங்கும் இணைத்துக் கோலமிட்டால் சங்கநிதியும் பதுமநிதியும் கிட்டும்.

(xiv) ஐஸ்வரிய லட்சுமி கோலமிட்டால் ஐஸ்வர்யம் பெருகும்.

(xv) ஏகாதசியன்று பாம்பு கோலமிட்டால் ஆயுள் பெருகும்.

(xvi) திருமணத்தின் போது கோலமிட்டால் பேய், பிசாசுகள் வராது.

(xvii) குழந்தை பிறந்தவுடன் கோலமிட்டால் கண்ணேறு கழியும்.

(xviii) கோலமிடாத வீட்டு வாசலில் தேவதைகள் முக்காடிட்டு அழும் என நம்புகின்றனர்.

**விலங்கு பற்றிய நம்பிக்கைகள்:**

(i) இரவில் பாம்பைச் ‘செடி’ என்று கூறுவர்.

(ii) உப்பை ‘ரவணம்’ ‘பெரிய சீனி’ எனக் கூறுவர்.

(iii) கணவன் பெயரை மனைவியும் மருமகள் பெயரை மாமியாரும் கூறக்கூடாது.

**கடவுள் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) இறைவன் அருளால் மக்கட்பேறு கிட்டுமென நம்புகின்றனர்.

(ii) வாழ்வில் துன்பம் நேரும் போது இறைவனிடம் முறையிட்டுப் பால், தேன் போன்றவற்றை இறைவனின் படிமத்திற்கு அபிஷேகம் செய்தால் துன்பம் தீரும் என மக்கள் நம்புகின்றனர். பழனி முருகன் கோவிலுக்கு மக்கள் பால் அபிஷேகம் செய்வது இங்குக் குறிப்பிடத்தக்கது.

(iii) நாட்டில் மழை பெய்து நாடு செழிக்க மாரியின் அருள் வேண்டுனெ நம்பினர் மக்கள். மாரியை வேண்டி வரங்கிடந்தமையால் தான் மாரி எனப்பட்டாளோ என எண்ண வேண்டி உள்ளது. நாட்டில் உண்டாகும் அம்மை முதலிய நோய்களுக்கு மாரிதான் காரணம் என்றும், அதனை நீக்குவதும் மாரிதான் என்றும் மக்கள் நம்புகின்றனர். அத்தகைய மாரிக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தாவிட்டால் பிழைக்க முடியாது என்று மக்கள் நம்பினர் என்பதை,

'ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆவாது
மாரி கடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீருமம்மா'

என்ற வரிகள் காட்டுகின்றன.

(iv) கோயிலில் பூக்கட்டிப் போட்டுச் சிறுகுழந்தைகளை எடுக்கச் சொல்லி நல்லதா, கெட்டதா என்பதைப் பற்றி அறிந்து கொள்வார்கள்.

(v) தும்பிக்கையானைப் பாடினால் துன்பங்கள் வாரா என்று மக்கள் நம்பினர்.

"தும்பிக்கை உள்ளவரே துன்பங்கள் வாராமல்
நம்பிக்கை வைத்தெந்தன் நாவில் குடியிருந்து
. . . . . . . . . . . . . . . . . . . . வாக்கருளும்"

(vi) மாரியம்மன் பேர் நினைத்தால் பில்லி, பிசாசு, சூன்யம், வைப்பு முதலியவை பறந்தோடும் என மக்கள் நம்பினர்.

“உன் பேர் நினைத்தால் பில்லி பிசாசு பறந்தோடுமம்மா

. . . . . . . . . . . . . . . . . . ”

**நோய்கள் பற்றிய நம்பிக்கைகள் :**

நாட்டுப்புற மருத்துவம் பல நம்பிக்கைகளுக்குத் தாய் ஆகும். மேலைநாட்டு மருத்துவ முறைகளினால் நாட்டுப்புற மருத்துவம் கூறும் விதிகளும் நடைமுறைகளும் நாட்டுப்புற நம்பிக்கையாகக் காட்சி தருகின்றன. நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற மருந்தினை நம்பிக்கை அடிப்படையில் பயன்படுத்துகின்றனர்.

(i) அம்மை நோய் தெய்வக் குறை என நம்பி மாரிக்கு வழிபாடு செய்து, வேப்பிலையைப் பயன்படுத்துகின்றனர்.

(ii) இரட்டையர் தடவினால் சுளுக்குப் போய்விடும் என நம்புகின்றனர்.

(iii) நோய்களைத் தெய்வங்கள் தீர்க்குமென்றும் அதற்கு நேர்த்திக் கடனே நல்ல மருந்து என்றும் நம்புகின்றனர்.

(iv) ‘ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்’ என்ற பழமொழி நாட்டுப்புற மருத்துவத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. ஆயிரம் மூலிகையைக் கொன்றாலும் அரை வைத்தியன்தான் ஆக முடியும் நம்புகின்றனர்.

**வீடு பற்றிய நம்பிக்கைகள்:**

(i) இரவு வீடு பெருக்கினால் குப்பையை வெளியே கொட்டக் கூடாது.

(ii) ஐந்தாவது பெண்ணும் ஆறாது ஆணும் பிறந்தா வீடு சிறப்புறும்.

(iii) மாடு அசைந்து தின்னும், வீடு அசையாமல் தின்னும். (நம்பிக்கை பழமொழியாகிவிட்டது).

(iv) கர்ப்பமான பெண்கள் இருக்கும் வீட்டில் குளவி கூடு கட்டும்.

(v) கர்ப்பிணிகள் எட்டாம் மாதம் தாய் வீடு செல்லக் கூடாது.

(vi) சிறப்பு எறும்பு சாரிசாரியாக வந்தால் வீட்டிற்குக் கெட்டது.

(vii) செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பெண்கள் பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்கோ, புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டிற்கோ வரக் கூடாது.

(viii) தென்திசை நோக்கி வீடு இருப்பது நல்லது.

(ix) தை மாதத்தில் புது வீட்டில் குடியேறுவது நல்லது.

(x) பிணம் வீட்டில் இருக்கும் போது அடுப்பு மூட்டக் கூடாது.

(xi) வடதிசை நோக்கி வீடு கட்டுவது நல்லதல்ல.

(xii) விருந்தினர் சென்றதும் வீட்டைப் பெருக்கினால் அவர்களது தொடர்பு அத்துடன் அறுந்து விடும்.

(xiii) விறகுச் சுமையை அவிழ்த்த பின்னரே வீட்டினுள் கொண்டு வர வேண்டும்.

(xiv) புதுவீடு கட்டி முடிந்தால், எலுமிச்சையையும் பூசணியையும் வீட்டின் முன் உடைத்தாலோ அல்லது இரண்டாக்கினாலோ கெட்டது விலகும்.

(xv) புது வீட்டிற்குச் செல்லும் போது உப்பையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

(xvi) நிலைப்படியில் தலையை வைத்துப் படுத்தால் லெட்சுமி தங்கமாட்டாள்.

(xvii) காலையில் வீட்டின் பின் கதவுகள்தான் முதலில் திறக்கப்பட வேண்டும்.

(xviii) இரவில் உப்பைச் சர்க்கரை எனக் கூறுவர்.

(xix) இரவில் உப்பு, அரிசி, எண்ணெய் முதலியவற்றை மற்றவர்கட்குத் தரக் கூடாது. தந்தால் தரித்திரம் வரும்.

**உணவு, ஆடை, அணிகலன்கள் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) காலால் உணவை உதைத்தால் போஜனம் கிடைக்காது.

(ii) கைராசிப்படி, உணவின் சுவை அமையும்.

(iii) பெண்களுக்கு மாறுகண்ணும் வலது தோள்பட்டையில் கரிய அல்லது நீல நிறத்தில் நீண்ட நிறத்தில் நீண்ட மச்சமும் இருந்தால் உணவுக் கஷ்டம் ஏற்பாடதென்பர்.

(iv) மனைவி தன் பாத்திரத்திலுள்ள உணவைக் கணவன் பாத்திரத்தில் இடலாகாது. கணவன் மனைவிக்கு இடலாம்.

(v) வாயிலிட்ட உணவைத் திரும்பத் தட்டில் இடக்கூடாது.

(vi) ஆடைகளுள் சில அதிர்ஷ்டத்தையும் வேறு சில துரதிர்ஷ்டத்தையும் தரும் என நம்புகின்றனர்.

(vii) சுமங்கலிகள் வெண்ணிற ஆடை அணியலாகாது.

(viii) திருமணப் பெண்ணிற்கு அனுப்பும் ஆடைகளில் கறுப்பு, வெள்ளை நிறங்கள் இருத்தலாகாது.

(ix) புத்தாடைகளைச் செவ்வாயன்று வாங்கவும் உடுக்கவும் மாட்டார்கள்.

(x) புத்தாடைகளை அணியப் புதன் நல்ல நாள்.

(xi) புத்தாடைகளைச் சனியன்று உடுப்பது நல்லதல்ல.

(xii) புத்தாடையை அணிந்து கொண்டு உறங்கக் கூடாது.

(xiii) விதவைகள் புத்தாடையை நனைத்து உடுக்க வேண்டும்.

(xiv) நடுவிரலில் மோதிரம் அணிவது நல்லதல்ல.

(xv) பெண்கள் கைவளையலின்றி இருக்கக் கூடாது.

(xvi) தங்க வளையல் அணிந்தாலும் ஒரு கண்ணாடி வளையலாவது அணிந்திருக்க வேண்டும்.

(xvii) பெண்கள் நெற்றியில் திலகம் எப்பொழுதும் இட்டிருக்க வேண்டும்.

(xviii) தலையில் சூடும் மலர் நீண்ட நேரம் மணமுடையதாக இருந்தால், வருகிற மாமியார் நல்லவராகியருப்பார்.

(xix) மோதிரம் கல் தேர்ந்தெடுக்கும் பொழுது அவர்களது நட்சத்திரத்தில் ஏற்றாற்போல் நிறங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கெடுதி நேரும்.

**மரணம் பற்றிய நம்பிக்கைகள் :**

(i) ஒருவர் மார்கழித் திருவாதிரை நாளிலோ, ஏகாதசியன்றோ இறந்தால் அவர் பெரும்பேறு செய்ததாக நம்பப்படுகின்றது.

(ii) சனிக்கிழமையன்று ஒருவர் இறந்தால் மற்றொரு சாவு விரைவில் நடைபெறும் என்று நம்பினர். எனவே தான் 'சனிப்பிணம் தனியே போகாது' என்று கூறுகின்றனர். சில இடங்களில் சனியன்று இறந்த பிணத்துடன் கோழியையும் புதைப்பர்.

(iii) மூத்த குழந்தை இறப்பின் வீட்டினுள்ளே புதைப்பர்.

(iv) இறந்த அன்று மழை பெய்தல் நல்லது.

(v) இறந்தவர் வாயில் அரிசி போட வேண்டும்.

(vi) இறக்கும் முன்னர் ஒருவர் விரும்பும் பொருளை அளித்தால் அவர் உயிர் எளிதில் பிரியும் என்பர்.

(vii) இறந்தவருக்குரிய சடங்குகளை அனுஷ்டிக்காவிட்டால் தீங்கு நேரும்.

(ix) மரண ஊர்வலம் எதிரே சென்றால் போகும் காரியம் வெற்றியடையும்.

(x) மரண வீட்டில் இரவு முழுவதும் விளக்கு எரிய வேண்டும்.

(xi) மரண வீட்டிற்குச் செல்பவர்கள் குளித்த பின்பு தான் வீடு திரும்ப வேண்டும்.

(xii) மரணம் அடைந்த நேரம் பகல் என்றால், நிறைநாழி நெல் பிணத்திற்கருகில் வைக்க வேண்டும்.

(xiii) மரண வீட்டிற்குச் சென்ற 'போய் வருகிறேன்' என்று கூறக்கூடாது.

(xiv) மரண வீட்டில் பெண்கள் மாரடித்து அழுதால், மறு உலகம் கிட்டும் என நம்புகின்றனர்.

(xv) இறந்தவர்க்குச் செய்யும் ஈமக்கிரியையால் இறந்த உயிர் வீடுபேறும் அடையும் என நம்புகின்றனர்.

**பயணம் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) பயணத்திற்குப் புறப்படும் போது ‘போய் வருகிறேன்’ எனக் கூறவேண்டும்.

(ii) வருடப் பிறப்பன்று பிரயாணம் மேற்கொள்ளக் கூடாது.

(iii) ஞாயிற்றுக் கிழமையன்று பயணம் மேற்கொள்ளக் கூடாது.

(iv) வெளியூர்ப் பயணம் செல்லும் போது ‘சீயக்காய் தூள்’ எடுத்துச் செல்லக்கூடாது.

(v) பயணம் மேற்கொள்ளும் போது ‘எங்கே போகிறாய்?’ எனக் கேட்க கூடாது.

(vi) ஏதேனும் காரியத்தில் புறப்படும் போது மூவராகச் சேர்ந்து செல்லக் கூடாது.

(vii) மழை தூறும்போது வீட்டை விட்டுப் புறப்படக் கூடாது.

(viii) கடவுளைத் தொழுதுவிட்டுப் பயணம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ix) பயணம் புறப்படும் பொழுது ஏதேனும் கெட்ட சகுனத்தைக் காண நேரிட்டால், மீண்டும் வீட்டிற்கு வந்து சிறிது நேரம் அமர்ந்து தண்ணீர் அருந்திவிட்டு மீண்டும் புறப்பட வேண்டும்.

(x) பயணம் புறப்படும்போது எண்ணெய் வணிகனையோ, ஒற்றைப் பார்ப்பனனையோ காண்பது கெட்ட சகுனமாகும்.

(xi) பயணம் புறப்படும் போது தாயையும் சேயையும் காண்பது நல்லது.

(xii) பயணம் புறப்படும் போது சவ ஊர்வலத்தைக் காண்பது நல்லது.

(xiii) பயணம் புறப்படும் போது அழுக்குத் துணியோடு வரும் வண்ணானைக் காண்பது நல்லது.

(xiv) பயணம் புறப்படும் போது கன்னிப் பெண்கள் நிறைகுடத்துடன் வருதல் நல்லது.

**ஊழ்வினை, பிறவிக் கொள்கை பற்றிய நம்பிக்கைகள் :**

(i) முற்பிறப்பில் செய்த நல்வினை, தீவினைப் பயனாக இப்பிறப்பில் இன்ப, துன்பங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. ஊழ்வினைப் பற்றிப் பண்டைத்தமிழர் கொண்டிருந்த கோட்பாடுகளைத் திருக்குறளிலும் சிலம்பிலும் காண்கிறோம்.

(ii) உயிர்களின் வினைக்கேற்ப பிறவிகள் எடுக்கின்றன என்பது பிறவிக் கொள்கையின் அடிப்படையாகும். பிறப்பு என்பது வினைப்பயனுக்கேற்ப அமையும் என்பது சமுதாயக் கொள்கையாகும்.

(iii) ஒப்பாரிப் பாடல்களில் இறப்பு, இறந்த உயிர், முற்பிறவி, மறுபிறவி, விதி, வினை அறம் தொடர்பான நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

(iv) இறந்தவர் உடலினின்று பிரியும் உயிர் மறுமையில் சந்தித்துக் கொள்ளும் என்றும், உயிர் சிவலோகம், வைகுண்டம், கைலாசம், எமலோகம் செல்கிறது என்றும் மக்கள் நம்புகின்றனர்.

‘உயிர் கைலாசம் போகிறது
உயிர் சிவலோகம், வைகுண்டம், எமலோகம் போகிறது’

(v) நல்வினை செய்தோருக்குத்தான் நல்ல சாவு கிட்டும் என்றும், குழந்தை நிலைப்பதற்கு நல்வினை செய்திருக்க வேண்டும் என்றும் நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். தீவினை செய்தவர்களின் சந்ததி சிறப்பற்றுப் போகும் என்றும், மழலைச் செல்வம் கிட்டாது என்றும் நம்புகின்றனர்.

(vi) தமக்கு விதிக்கப்பட்ட காலம் முடிந்தவுடன் எமன் வந்து உயிரைக் கவர்ந்து செல்வதாக மக்கள் நம்புகின்றனர். அவரவர் செய்த நன்மை, தீமைகளுக்கேற்ப உயிர் வெவ்வேறு உலகங்களுக்குச் செல்வதாக மக்கள் நம்புகின்றனர்.

(vii) மக்கள் தங்களுக்கு ஏற்படும் நன்மை, தீமைகளுக்கெல்லாம் தாங்கள் பிறக்கும்பொழுதே தங்கள் தலையில் பிரமன் எழுதி வைத்திருப்பதுதான் காரணம் என்று நம்புகின்றனர். ஒருமுறை எழுதிய எழுத்தை மறுபடியும் அழித்து எழுதப்போவதில்லை என்றும் நம்புகின்றனர். ‘தலை எழுத்தைச் சிரைத்தால் போகுமா?’ என்ற பழமொழி இந்நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்ததாகும். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிக் கொண்டு

தங்கள் தலையெழுத்தே காரணம் என்றும் விதியே காரணம் என்றும் அமைதியாகச் செல்லும் போக்கே இந்த நம்பிக்கைக்குக் காரணமாகும். சமுதாயம் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் பெரும் மாற்றங்கள் ஏற்படாமல் தேங்கிக் கிடப்பதற்கு இந்த விதிக்கொள்கையே காரணமாகும்.

**சோதிடம், பஞ்சாங்கம், இராசிப்பொருத்தம் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) சோதிடம் பார்க்கும் பழக்கம் நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் இன்றும் உள்ளது. பிறந்த நேரத்தை வைத்து ஜாதகம் கணித்து அதற்கேற்ப அதன் வருங்காலத்தைச் சொல்லுவார்கள். திருமணம் செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஜாதகப் பொருத்தம் பார்ப்பதுண்டு. சோதிடங்கள் தெய்வங்களின் பெயர்களைக் கோள்களுக்கு இட்டு வழங்குகின்றன. 'திருத்தக்கதேவர்' காலத்திலேயே குழந்தை பிறந்தவுடன் சாதகம் எழுதுவதும், திருமணத்திற்கு ஜாதகம் கேட்பதும் இருந்தது என்பதால் அக்கால மக்கள் சோதிடத்தில் வைத்திருந்த நம்பிக்கை தெரிய வருகிறது. மட்டுமின்றி கையிலுள்ள ரேகையைப் பார்த்து வருங்காலத்தைப் பற்றிக் கூறுவதுமுண்டு. இதனை 'ரேகைப் பார்த்தல்' என்பர். விண்ணியல் நிகழ்வுகளே வாழ்வியல் நிகழ்ச்சிகளை நிச்சயிக்கின்றன என்று மக்கள் நம்பத் தொடங்கிய நிலையில் சோதிடம் வளர்ச்சியுற்றது.

(ii) நாட்டுப்புற மக்கள் பஞ்சாங்கத் துணை கொண்டும் வாழ்க்கையைக் கணிப்பார்கள். பஞ்சாங்கத்தில் கூறப்படும் சந்திர கிரகணம், சூரிய கிரகணம் போன்றவை அறிவியல் முறைப்படி ஆராயும் வானவியல் கூறுவது போல் ஒத்துள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

(iii) தமிழ்நாட்டில் எல்லாக் காரியங்களுக்கும் இராசி பார்த்தல் உண்டு. கைராசியில் நம்பிக்கை கொண்ட ஒருத்தி தாலி பண்ணிய ஆசாரி, திருமணச் சேலை செய்த கேணியன், பஞ்சாங்கம் பார்த்த பார்ப்பான், முதலானவர்கள் கைராசி இல்லாதவர்கள் என்று கணவனை இழந்த பெண்ணொருத்தி ஒப்பாரிப் பாட்டு ஒன்று பாடுகிறாள்.

'தாலிக்கு அரும்பெடுத்த

தட்டானும் கண்குருடோ?

சேலைக்கு நூலெடுத்த

சேணியனும் கண்குருடோ?

பஞ்சாங்கம் பார்க்க வந்த

பார்ப்பானும் கண்குருடோ?

எழுதினவன்தான் குருடோ?

எழுத்தாணி கூர் இல்லையோ?

பஞ்சாங்கம், சாதகம், ராசி ஆகியவற்றைப் பார்த்தும் பொருத்தம் பார்த்தும் திருமணம் செய்து வைத்தால் தம்பதிகள் நல்லபடியாக வாழ்வார்கள் என்று மக்கள் நம்புகின்றனர்.

**கனவு பற்றிய நம்பிக்கைகள்:**

கனவுகள் மக்களுக்கு வாழ்வில் பின் நிகழப்போவதை முன் உணர்த்துகின்றன என்று நம்புகின்றனர். உளவியல் பேரறிஞர்கள் அடக்கி வைக்கப்பட்ட விருப்பத்தின் மறைமுகமான வெளிப்பாடே கனவு என்பர். வேறு சிலர் கனவு உளநோயால் தோன்றுகிறது என்றும் கூறுவர் கனவுகளையே நல்ல கனவு, கெட்ட கனவு என இருவகையாகப் பிர்ப்பர். மக்களுக்கு நன்மையோ, தீமையோ வருவது கனவு மூலம் தெரிந்து விடும் என நம்புகின்றனர். மரப்பெட்டி உடைதல், ஏற்றி வைத்த தீபம் அணைதல், தேங்காய் உடைதல் போன்ற கனவு கண்டால் தீமை விளையும் எனக் கருதுகின்றனர். தங்களுக்கு நிகழப்போவதை தெய்வமோ அல்லது முன்னோர்களின் ஆவியோ கனவில் தோன்றி கூறுவதாக நம்புகின்றனர் தமிழில் ‘கனா நூல்’ என்றொரு நூல் இருந்ததே தமிழ் மக்கள் எந்த அளவிற்குக் கனவு பற்றி சிந்தித்துள்ளனர் என்பதற்குச் சான்றாகும். கனவில் மரணம் என்றால் சுபம், திருமணம் என்றால் இழவாகும். அதாவது கனவுக்கும் நேரில் காண்பதற்கும் பலன்கள் எதிரிடையாக உள்ளதைக் காணலாம்.

(1) அதிகாலை கனவு பலிக்குமென நம்புகின்றனர்.

(2) கனவில் சாவைக் காண்பது நல்லது.

(3) கனவில் திருமணத்தைக் காண்பது நல்லதன்று.

(4) கனவில் மலத்தைத் தொட்டதாகக் கண்டால் செல்வம் பெருகும்.

(5) கனவில் பன்றி, பூ, பெண்கள், ஆடு, பச்சை மரம், விறகு முதலியவற்றைக் காண்பது நல்லதல்ல.

(6) கனவில் ஆகாய விமானத்தைக் கண்டால் வரவிருக்கின்ற ஆபத்தைக் குறிக்கும்.

(7) கனவில் ஆமையைக் கண்டால் அதிர்ஷ்டத்தைக் குறிக்கும்.

(8) கனவில் ஆப்பிள் பழங்களைக் கண்டால் வாழ்க்கையில் வெற்றி ஏற்படும்.

(9) கனவில் இரும்பைக் கண்டால் துன்பங்கள் நேரும்.

(10) கனவில் உப்பைக் கண்டால் செல்வம் சேரும்.

(11) வெள்ளியைக் கனவில் கண்டால், வாழ்க்கையில் வெற்றியும் வேசியர் உறவும் ஏற்படும்.

(12) எழுதிக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டால் நல்ல செய்திகள் வரும்.

(13) ஏர் உழுவதாகக் கனவு கண்டால், எடுத்த காரியங்கள் தாமதமாக வெற்றியடையும்.

(14) கழுகு வட்டமிடுவதாகக் கனவு கண்டால், தீமை வரும்.

(15) காகத்தைக் கனவிலே கண்டால், மரணச்செய்தி.

(16) கிணற்றில் நீந்துவதாகக் கனவு கண்டால், எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.

(17) கோயிலைக் கனவிலே கண்டால், குடும்பத்தில் எதிர்ப்பு உண்டாகும்.

(18) பொற்சங்கிலியை அணிவது போல் கனவு கண்டால் நல்ல அறிகுறியாகும்.

(19) சந்திரனைக் கனவில் கண்டால், காதலில் வெற்றி ஏற்படும்.

(20) ஒருவர் தாமே இறந்து விட்டதாகக் கனவு கண்டால், ஆயுள் பெருகும்.

(21) சிறைச் சாலையில் இருப்பதாகக் கனவு கண்டால், பேரும் புகழும் உண்டாகும்.

(22) சீட்டு ஆடுவதாகக் கனவு கண்டால் மனக்கவலை ஏற்படும்.

(23) மணியோசையைக் கேட்பதாகக் கனவு கண்டால், திருமணம் நடைபெறும்.

(24) மனைவியைத் தவிர மற்றப் பெண்களுடன் உறவு கொள்வதாகக் கனவு கண்டால் ஆபத்துகள் நேரும்

(25) சூரியன் உதயமாவதாகக் கனவில் கண்டால், எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.

(26) சூரிய கிரகணம் பிடித்திருப்பதைக் கனவில் கண்டால், கெடுதி உண்டாகும்.

(27) காதலனுடன் ஓடிப் போவதாகப் பெண் கனகவு கண்டால் அப்பெண் கற்பழிக்கப்படுவாள்.

(28)தேர்வு எழுதுவதாகக் கனவு கண்டால், உத்தியோக உயர்வு ஏற்படும்.

**சகுனங்கள் பற்றிய நம்பிக்கைகள்:**

சகுனம் பார்க்கும் நம்பிக்கை உலகெங்கிலும் காணப்படுகின்றது. பண்டைத்தமிழர் இதனைப் புள், நிமித்தம் ஆகிய சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். நிமித்தம் (சகுனம்) என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சிலக் குறியீடுகளின் வாயிலாக உணர்த்துவதாகும். நிமித்தங்கள் அனைத்தும் நம்பிக்கையின் பாற்பட்டன. நிமித்தங்களை அவற்றின் செயற்பாட்டு விளைவு கருதி இருவகையாகப் பிரிக்கலாம். நற்செயலையும் நற்பயனையும் அறிவிக்கும் குறியினை நன்னிமித்தம் என்றும், தீச்செயலையும் தீமையையும் அறிவிக்கும்

குறியினைத் தீ நிமித்தம் என்றும் வகைப்படுத்தலாம். இதனையே நாட்டுப்புற வழக்கில் நல்ல சகுனம் என்றும், கெட்ட சகுனம் என்றும் கூறுவர். ஒரு செயலைத் தொடங்கும் போது நல்ல சகுனம் தோன்றினால் அச்செயல் தோல்வியடையும் என்றும் நம்புகின்றனர். நாட்டுப்புற மக்கள் சகுனங்களில் பெரும் நம்பிக்கையுடையவர்கள். அவற்றிற்குரிய காரணகாரியத் தொடர்பு தெரியாவிட்டாலும், முன்னோர்கள் நம்பியதால் இவர்களும் நம்புகின்றனர். கன்னிப்பெண் தண்ணீர்க் குடத்துடன் வருதல், வண்ணான் அழுக்குத் துணியுடன் வருதல், பிணம் எதிரே வருதல், சுமங்கலியைக் காணல் போன்றவற்றை நல்ல சகுனம் என்றும், விதவை எதிரே வரல், பூனை குறுக்கிடுதல், ஒற்றைப் பார்ப்பான் எதிரே வரல் போன்றவற்றைக் கெட்ட சகுனம் என்றும் கருதுகின்றனர். சகுனத்தில் மக்கட்கு நம்பிக்கை உண்டு என்பதைப் பழமொழியே எடுத்துக்காட்டுகின்றன.

'ஆந்தை அலறினும் காக்கை எச்சமிட்டாலும் தீது என்பர்'

'நீர் நிறைத்துவரினும் திருநீறு அணிந்துவரினும் நல்லது என்பர்'

சகுனங்களைச் சிந்தனை நிலை, சொல் நிலை, செயல் நிலை என்ற மூன்று நிலைகளில் காண வேண்டும். சிந்தனை நிலையாவது ஏதாவது ஒரு செயல் பற்றியோ அல்லது பொருள் பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்கையில் காணப்படும் சகுனங்கள். சொல் நிலையாவது ஏதாவது ஒரு செயலைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது ஏற்படும் சகுனங்கள். செயல் நிலையாவது ஏதாவது ஒரு செயலைத் தொடங்குவதற்காகப் புறப்படும்போது காணப்படும் சகுனங்கள். இன்றயை நிலையில் பெரும்பாலும் பயணம் புறப்படும்போதுதான் சகுனங்கள் பார்க்கப்படுகின்றன. இருப்பினும் சுபகாரியங்கள், பணம் கொடுக்கல் வாங்கல், சுப நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்றவை சகுனங்களை முன்வைத்து நடத்தப்பெறுகின்றன.

**நல்ல சகுனங்கள்:**

(1) அழுக்குத் துணியோடு வண்ணான் வருதல்.

(2) தாயும் பிள்ளையுமாக வருதல்

(3) கோயில் மணியடித்தல்

(4) சுமங்கலிகள் வருதல்

(5) கருடனைக் காண்பது நல்லது.

(6) திருவிழாவைக் காணல்

(7) எருக்கூடையைக் காணல்

(8) யானையைக் காண்பது நல்லது

(9) நரி இடமிருந்து வலமாகச் செல்லல்.

(10) பாம்புகளில் ஆணும் பெண்ணும் பிணைந்திருப்பதைக் காணல்.

(11) கருடன் வலப்பக்கத்தில் இடப்பக்கம் செல்லல்

(12) கழுகு வலப்பக்கத்தில் இடப்பக்கம் செல்லல்.

(13) காகம் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் செல்லல்.

(14) கழுதை கத்துதல்

(15) பசு கன்றுக்குப் பால் கொடுத்தலைக் காணல்

(16) அணில் வீட்டிற்குள் வருதல்

நாம் பயணத்தை மேற்கொள்ளும் பொழுது மலர், மஞ்சள், குடை, கிளி, மான், பழம், பசு இரட்டைப் பிராமணர், பல்லக்கு, வெண்ணெய், தயிர், மோர், மயில், இரட்டை விதவைப்பெண்கள், யானை, தேர், தாமரை, மலரைக் காணுதல் போன்றவைகள் நல்ல சகுனங்களாகும். பசு, புலி, யானை, முயல், கோழி, நாரை, புள்ளிமான், கொக்கு ஆகியவை வலப்பக்கமாக வந்தால், நினைத்த காரியங்கள் வெற்றியடையும். எருமை, பன்றி, கரடி, குரங்கு, நாய், கீரிப்பிள்ளை, ஆடு ஆகியன இடப்பக்கமாக வந்தால் நல்ல சகுனங்களாகும்.

**கெட்ட சகுனங்கள்:**

(1) பூனை குறுக்கே போதலும் எதிர்ப்படுதலும் கெட்ட சகுனம்.

(2) ஒற்றைப் பிராமணனைக் காணல்.

(3) விதவையைக் காணல்

(4) எண்ணெய்ப் பானை எதிர்ப்படல்

(5) விறகுடன் வருவரைக் காணல்

(6) மண்வெட்டியுடன் எதிர்ப்படல்

(7) தும்மல் ஒலி கேட்டல்

(8) ஆந்தை அலறல்

(9) கருடன் இடப்பக்கத்திலிருந்து வலமாகச் செல்லல்.

(10) காகம் வலமிருந்து இடமாகச் செல்லல்.

(11) நாய் குறுக்கே செல்லுதல்.

(12) போர் வீரனைக் காணுதல்

(13) நாய் ஊளையிடுவதைக் கேட்டல்

(14) அம்பட்டனைக் காணல்

(15) வண்ணான் வெளுத்த துணியுடன் வருதலைக் காணல்.

(16) முக்காடிட்டவரைக் காணல்.

பயணத்தை மேற்கொள்ளும்போது கோடாரி, கத்தி, கடப்பாரை, வீட்டுக்குத் தூரமான பெண், பாம்பு, குரங்கு, ஆடு, கழுதை, நெருப்பு, நோயாளி, விறகு சுமை, ஏணி முதலியவற்றைக் காண்பது கெட்ட சகுனமாகும்.

**பல்லி சகுனம்:**

மனிதரால் பார்க்கப்படும் சகுனங்களில் மிக முக்கியமானது பல்லி சகுனம். நமது சமுதாயத்தில் பல்லி சகுனம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததால் ‘கௌரி சாஸ்திரம்’ என்ற நூலையே நமது முன்னோர்கள் இயற்றியுள்ளனர். பல்லி

சகுனம் என்பது சொல் பலன், விழும் பலன் என இரண்டு வகைப்படும். பல்லி சொல் எண்ணிக்கையைக் கொண்டு பலன் சொல்லுவர். எண்ணிக்கை மட்டுமின்றி திசையை வைத்தும் கிழமையை வைத்தும் பலன் சொல்லுவர். பல்லி மனிதர்கள் மீது விழும் பலனையும் நமது முன்னோர்கள் கண்டுணர்ந்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| சிரசில் | - | மரணம் |
| மூக்கில் | - | நோய் |
| வயிற்றில் | - | குழந்தை |
| குறியில் | - | கேடு |
| முழங்காலில் | - | கலகம் |
| பாதத்தில் | - | பிணி |
| இடக்கையில் | - | மரணம் |
| வலக்கையில் | - | பெரிய சாவு |
| உடம்பில் | - | தீர்க்காயுள் |

பல்லி உடம்பில் விழும் இடத்திற்கு இடம் வேறுபட்ட பலனை உணர்த்துகின்றது. இத்துடன் பல்லிகளின் வகை, நிறம், இருப்புநிலை முதலியவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**மந்திரங்கள் பற்றிய நம்பிக்கைகள்:**

சமயங்கள் தோன்றுவதற்கு முன்னுள்ள நிலையை மந்திர ஆற்றலின் நம்பிக்கைமிக்க காலக்கட்டமாகக் கருதுவர். மந்திரம் என்பது ‘போலச் செய்தல்’ என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. நாம் செயல் புரிந்து அதுபோல செயல்புரிய இயற்கையினைத் தூண்டுவதே அதன் செயற்பாடாகும். நாம் செய்வதைப் பார்த்து இயற்கையினைச் செயற்பட வைப்பதே அதன் நோக்கமாகும். தம்மைப் போலவே இயற்கைக்கும் ஆசைகளும் உணர்ச்சிகளும் இருக்கும் என்று நம்பினர். சூரிய ஒளியில் குதூகலித்துப் புன்முறுவல் செய்வதும் இயற்கை இயங்குவதாக நம்பி அதற்கு உணர்ச்சிநிலையும் உயிர்நிலையும் கற்பித்தனர்.

இந்தக் கற்பனையிலிருந்துதான் மந்திரம் தோன்றியது எனலாம். இயற்கைக்கும் ஆவி உண்டு என நம்பினர். மாயமந்திரங்களினால் ஆவியைக் கட்டுப்படுத்தவும் திருப்திப்படுத்தவும் முனைந்தனர். காலப்போக்கில் மாய மந்திரங்களை இயற்கையைக் கட்டுப்படுத்தவும், பகைவர்களை அழிக்கவும், நோயைக் குணப்படுத்தவும் பயன்படுத்தினர். நான்மணிக்கடிகை எனும் நூல் மந்திரத்தால் நாகப்பாம்பினைக் கட்டுப்படுத்தலாம் எனக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**பில்லி சூன்யம்:**

பில்லி சூனியக்காரர்களுக்குப் பிணத்தோடு தொடர்பு இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பில்லி சூனியக்காரர்கள் தங்களது மாந்திரீகச் சக்தியால் எதையும் செய்ய முடியும் என நம்புகின்றனர். பகைவர்கள் மீது பில்லி சூனியம் ஏவப்பட்டால் இரவில் அவர்களது வீட்டின் மீது கற்களோ அல்லது அசிங்கமான பொருட்களோ விழும் என நம்புகின்றனர். பில்லி சூன்யத்தை வரவழைத்துவிட்டால் அதற்கு ஏதேனும் வேலை கொடுக்க வேண்டுமாம். இல்லாவிட்டால் அழைத்தவர் மீதே பாய்ந்து விடும். பில்லி சூனியக்காரர்கள் எலியாகவோ, பூனையாகவோ, கோழியாகவோ வடிவம் எடுத்துச் செல்வர். பில்லி சூன்யக்காரர்களுக்குச் சக்தி பல்லில் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். பில்லி சூன்யத்தைப் பற்றி தெள்ளத் தெளிவாக, விளக்கமாகத் தெரியாவிட்டாலும் நாட்டுப்புற மக்கள் பில்லி சூன்யத்தின் மீது நம்பிக்கை வைத்து உள்ளனர்.

**செய்வினை:**

ஒருவர் தமக்கு வேண்டாதவர்கள் மீது பகைவர்கள் மீது செய்வினை செய்வார். கேரள மாநிலம் இதற்குப் புகழ் பெற்றது. செய்வினை பற்றியும் நாட்டுப்புற மக்களிடையே நம்பிக்கை நிலவுகின்றது. கேரள மாநிலத்தின் நம்பூதிரிகளைக் கொண்டு செய்வினை செய்யும் வழக்கம் உள்ளது.

**இயற்கை தொடர்பான சடங்குகள் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) வெள்ளி தென்கோடியில் தோன்றினால் பஞ்சம் வரும் என நம்புகின்றனர்.

(ii) வால் நட்சத்திரம் தோன்றினால் ஏதேனும் கெட்ட காரியம் நடைபெறும் என நம்புகின்றனர்.

(iii) நாளிலும் கோளிலும் மக்கள் மிக்க நம்பிக்கை கொண்டிருந்தனர். சூரிய உதயம்முன் எல்லாக்காரியமும் நடைபெற வேண்டும். வளர்பிறையிலே நம் செயல்கள் அனைத்தும் நடைபெறவேண்டும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர்.

**வழக்கங்கள் பற்றிய நம்பிக்கைகள்**

(i) பெண்களுக்கு முழங்கால் வரை மயிர் வளர்ந்திருந்தால், அவர் கணவனை விரைவில் இழப்பாள்.

(ii) செவ்வாய்க்கிழமையன்று மயிர் வெட்டினால் தரித்திரம் வரும்.

(iii) நீண்ட நெற்றியுடையவர்கள் அறிவாளிகள்.

(iv) ஆண்களுக்கு வலது கண் துடித்தல் நல்லது.

(v) ஆண்களுக்கு இடது கண் துடித்தல் நல்லதல்ல.

(vi) பெண்களுக்கு இடது கண் துடித்தல் நல்லது.

(vii) ஒருவர் தும்மும்போது ‘நீண்ட நாள்கள் வாழ்க’ ‘நூறாண்டு வாழ்க’ என்று கூறினால் பலிக்கும்.

(viii) மறைவிடத்தில் மச்சம் இருப்பின் நல்லது.

(ix) திருமண நேரத்தில் மகன் அருகில் தாய் செல்லக் கூடாது. தாலிக்கட்டும் போது தாய் பார்க்கக் கூடாது.

(x) சுபகாரியங்களை முதல் பிறைநாளன்று செய்யக் கூடாது.

**பல்பொருள் பற்றிய நம்பிக்கைகள்:**

(i) ஒற்றை எண்கள் நன்மை பயக்கும் என்று நம்புகின்றனர்.

(ii) சாபங்களைப் பற்றி இலக்கியங்களில் நிறைய சான்றுகள் கிடைக்கின்றன. கோவலனின் கொலைக்கு அவன் முன்பிறப்பில் சங்கமனின் கொலைக்குக் காரணமாகிச் சங்கமனின் மனைவி நீலியிட்ட சாபம் பலித்ததாக இளங்கோ காரணம் காட்டுகிறார். நாட்டுப்புறப் பாடல்களை நோக்கும் போது பாதிப்புக்கு உள்ளானவர்கள் கண்ணீருடன், வயிறெரிந்து எரிந்து சொல்லும் சொல் பலிக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே இருப்பதைக் காணலாம்.

**சவரம் செய்யாமை:**

மனைவி கர்ப்பமாக இருக்கும்போது முகச் சவரம் செய்து கொண்டால் அவள் வயிற்றில் இருக்கும் குழந்தைக்குக் கேடு விளையும் என மக்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையை இன்றும் காணலாம்.

**சத்தியம் செய்தல்:**

நாட்டுப்புற மக்களிடையே அனைத்து உறுதிமொழிகளும் வாய்மொழியாகவே இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதும் நிறைவேற்றாததும் வாக்குறுதி அளித்தவரின் மனசாட்சியைப் பொறுத்ததாகும். இந்நிலையில் உறுதிமொழியை மீறினால் தெய்வ தண்டனை கிடைக்கும் என்ற அடிப்படையில் சத்தியம் செய்யும் வழக்கம் தோன்றியிருக்க வேண்டும். தலையில் அடித்துச் சத்தியம் செய்தல், கையில் அடித்துச் சத்தியம் செய்தல், குடம் அணைத்துச் சத்தியம் செய்தல், பால்தொட்டு சத்தியம் செய்தல், வேட்டிபோட்டுத் தாண்டிச் சத்தியம் செய்தல் என பல வகையாகும். சத்தியத்தை மீறினால் தெய்வ தண்டனை கிடைக்கும் என்று நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர்.

"வேட்டி போட்டுத் தாண்டித் தாரேன்

கற்பூரத்தைக் கைபோட்டு அணைச்சித் தாரேன்"

என்ற நாட்டுப்புறப் பாடல் சத்தியத்தைப் பற்றிக் கூறும்.

**கொடும்பாவி கட்டி இழுத்தல்:**

நாட்டில் தொடர்ந்து மழையில்லாது போனால் மழைக்கஞ்சி, பரிமாறுதல், கொடும்பாவி கட்டியிழுத்தல் போன்றவற்றைக் கிராமப்புற மக்கள் செய்வர். கொடும்பாவி கட்டி இழுத்தால் மழைத் தெய்வத்தின் அருள் கிடைக்கும் என நம்புகிறார்கள்.

**வாய் சிவத்தல்:**

வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொள்பவனின் வாய் சிவத்திருந்தால், அவன் தன் மனைவி மீது அன்புடன் இருப்பான் என்றும், பெண்ணின் வாய் சிவத்திருந்தால் அவள் தன் கணவன் மீது அன்பாக இருப்பாள் என்றும் நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர்.

**நம்பிக்கை பற்றிய ஆய்வு:**

ஆய்வாளர்கள் மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளுக்கு காரணம் அறிய முடியவில்லை என்பர். நமது நாட்டில் நம்பிக்கைகள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆய்வேடுகள் மலரவில்லை. ஆய்வுக் கட்டுரைகள் தாம் சில வெளிவந்துள்ளன. இந்நிலையில் தமிழில் தமிழவன் அவர்கள் 'நாட்டுப்புற நம்பிக்கைகள்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். நாட்டுப்புற நம்பிக்கை பற்றிய இந்நூல் முதல்நூல் மட்டுமின்றி முதன்மையான நூல் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்நூலை அடிப்படையாக வைத்து 'டாக்டர்.மு.சண்முகம் பிள்ளை' அவர்களும் 'எரிக்கா எ.இ.கிளாஸ்' என்பவரும் இணைந்து 'Folk Beliefs of the Tamils' என்ற நூலை வெளியிட்டுள்ளார்கள். தமிழவன் நூலின் முக்கியத்துவம் இதன் மூலம் நன்கு தெரிகிறது. தமிழவன் எழுதிய நாட்டுப்புற நம்பிக்கைகள் என்ற நூலின் அடிப்படையில், நம்பிக்கைகளுக்குரிய தோற்றம் பற்றி ஆராய்வோம்.

'கண்ணாடி உடைந்தால் கேடு வரும்'

என்பது நம் நாட்டில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் காணப்படும் நம்பிக்கையாகும். நம்பிக்கை சமுதாயத்தில் எழக் காரணம் என்ன என்பதைச் சந்திக்க வேண்டும். மனிதனுடைய பிம்பம் தண்ணீர், கண்ணாடி போன்றவற்றில் பிரதிபலிப்பதால் அதற்குள் ஆவி இருக்க வேண்டும் என்பது பழங்குடிகளின் நம்பிக்கையாகும். சமயவாதிகளும் ஆவி குடிகொண்டுள்ள கண்ணாடி உடைவது உயிருக்கே கேடு நேரும் எனக்கருதி, கண்ணாடி உடைந்தால் கேடு வரும் என்ற நம்பிக்கை உருவாயிற்று. சமூகம் நாகரிக வளர்ச்சி அடைந்த பிறகும் மனித சமுதாயத்தில் இது நாட்டுப்புற நம்பிக்கையாக இன்றும் உள்ளது.

தமிழகத்தில் கிராமப்புறங்களில் இன்னும் பெண்கள் தமது கணவன்மார்கள் பெயர்களைக் கூறுவதில்லை. பழங்குடி மக்கள் சமுதாயத்தில் பெயர் ஒரு விலக்காக இருந்துள்ளது. பெயர் குறியீடாக மட்டுமின்றி ஓர் உறுப்பாகவும் கருதப்பட்டது. எனவே புதியவர்களிடம் கணவனின் பெயரைக் கூறினால், பெயரை வைத்துச் செய்வினை செய்து விடுவார்கள் என நம்புகின்றனர். தீண்டல் செய்வினைப்படி உறுப்புக்குப் பதிலாகப் பெயரையும் பயன்படுத்தலாம் என ஆதி மனிதன் நம்பினான். தீண்டல் செய்வினைப்படி உறுப்புக்குப் பதிலாகப் பெயரையும் பயன்படுத்தலாம் எனக் கருதிதான். கணவன் பெயரைச் சொல்லத் தயங்கினர். ஆனால் இன்று பழங்குடித் தன்மை மாறிய பிறகும், விலக்கு என்ற நிலை விலகிய போதும், மனிதன் நாகரிகம் அடைந்தாலும் பழங்குடி மனநிலை மட்டும் அவனைவிட்டுப் போய்விடவில்லை என்பதை இது காட்டுகின்றது. சில நாட்டுப்புற நம்பிக்கைகளுக்குத்தான் காரண காரியங்களை ஆராயமுடியும். அந்த ஆய்வும் சில நேரங்களில் ஊகமாகத்தான் இருக்க முடியும். ஏனென்றால் இதனை அறிவியல் முறை போன்று ஆராய்வதற்கு வாய்ப்பில்லை என்பதையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

**நம்பிக்கை பற்றி அமைப்பியல் ஆய்வு:**

மேனாட்டார் தொடர்பு, ஆங்கிலக்கல்வி, நாகரிக வளர்ச்சி, நவீனமாக்கல், இயந்திரமயமாக்கல் ஆகியவற்றின் காரணமாக மக்களின் பழக்க வழக்கங்களிலும் நம்பிக்கைளிலும் மாற்றங்கள் உருவாயின. நம்பிக்கைகளின் தோற்றம், வளர்ச்சி பற்றிய இன்றைய ஆய்வுகள் பண்பாடு, நாகரிகம், மக்களது உளப்பாங்கு முதலியவற்றை தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றன.

**நம்பிக்கை பற்றிய அமைப்பியல் ஆய்வு:**

1960 ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டு நாட்டுப்புறவியல் அறிஞர்களிடையே அமைப்பியல் செல்வாக்குப் பெற்ற கோட்பாடாகும். ‘ஆர்னி தாம்ஸனின்’ ஆய்வுமுறை அறிவியல் அடிப்படையில் அமையவில்லை என்று ‘விளாடிமிர் பிளாப்’ இக்கோட்பாட்டை உருவாக்கினார். ‘ஆலன் டாண்டில் பிராப்பின்’ கொள்கையைப் பின்பற்றினாலும் அதில் சில மாற்றங்களைச் செய்தார். ‘லெவி ஸ்டிராஸ் பிராப்பின்’ கோட்பாடினின்று சிறிது விலகினாலும், அமைப்பில் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கிறார். அமைப்பியல் கோட்பாடினால் வகைப்படுத்தல் எளிமையாகிறது.

ஆலன் டாண்டிஸ் நம்பிக்கையை மூன்றாகப் பகுத்து ஆராய்கிறார். அதாவது ‘A’ இருந்தால் ‘B’ இருக்கும் ‘C’ பரிகாரம் செய்தால் நல்ல விளைவு கிட்டும்.

A - Conditional Statement

B - Violation

C - Expiation or Mantiras

D - Result

குழந்தை மாலைச் சுற்றிப் பிறந்தால் மாமனுக்கு ஆகாது என்ற நம்பிக்கையில் நிபந்தனையும் அதனால் ஏற்படும் விளைவும் கொடுக்கப்பட்டுள்ளது.

A - குழந்தை மாலை சுற்றிப் பிறத்தல்

D - மாமனுக்கு ஆகாது

இந்த நம்பிக்கையை $\underset{+}{A}\ \underset{-}{B}\ \underset{-}{C}\ \underset{+}{D}$ என ஆராயலாம். மீறலும் பரிகாரமும் இல்லை.

# அலகு **III**

# நாட்டுப்புறத் தெய்வங்கள்

# அலகு III

## நாட்டுப்புறத் தெய்வங்கள்

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி வழங்கும் நாடு நமது நாடு. தொன்றுதொட்டு நம் மக்களிடையே தெய்வ பக்தி காணப்படுகின்றது. நாட்டுப்புற மக்களில் பெரும்பாலோனோர் தங்களுக்கு நன்மை ஏற்பட்டால் அது தெய்வத்தால் வந்தது என்று கூறிப் போற்றுவர். அதே போல் தீமை ஏற்பட்டால் அது தெய்வத்தின் கோபத்தால் வந்தது என்று நினைத்துத் தெய்வங்களை வேண்டிக்கொள்வர். மனித மனம் ஒரு பலமற்ற கொடி. அதனால் நமிர்ந்து நிற்க முடியாதது. எனவே கடவுள், தலைவர் போன்ற ஏதாவது ஒரு வழிபாட்டின் முதுகில் ஏறிக்கொள்வது அன்று தொட்டு இன்று வரை இயல்பாகிவிட்டது. கடலோடு கலக்கும் ஆறுகள் போல எல்லாத் தெய்வ வணக்கமும் என்னையே அடைகிறது என்று கண்ணபிரான் சொன்னது உண்டு. ஆறுகளைக்கூட எண்ணிவிடலாம். ஆனால், தெய்வங்களையும் தேவதைகளையும் வழிபாடுகளையும் எண்ணுவதும் எழுதுவதும் அரிதினும் அரிது. இந்நிலையில் நாட்டுப்புற மக்களின் வழிபாடுகளையும் தெய்வங்களையும் இப்பிரிவின்கண் விரிவாகக் காண்போம்.

**நாட்டுப்புற வழிபாடு:**

பண்டைக் காலத்தில் மனித இனமானது இருப்பிடம், உணவு, உடை போன்றவற்றிற்கு இயற்கையைச் சார்ந்திருந்தது. இயற்கை மனிதனுக்கு உதவிய காரணத்தால், தன் நன்றியைத் தெரிவிக்கும் விதமாக மனித இனம் முதன்முதலில் இயற்கையைத் தெய்வமாக வழிபட ஆரம்பித்தது. முன்னோர்களால் தங்களது வாழ்வில் நன்மை, தீமை ஏற்படக்கூடும் என்று எண்ணி அவர்களையும், அவர்கள் பயன்படுத்திய கருவிகளையும் மனிதன் வழிபடத் தொடங்கினான். பின்னர் அவர்களுக்காக (முன்னோர்களுக்காக) நடப்பட்டிருக்கும் நடுகல்லையும் வழிபடத் தொடங்கினான். இதுபோல வழிபடும் முறை படிப்படியாக வளர்ச்சி பெற்று தெய்வங்களை வழிபட ஆரம்பித்தான்.

நாட்டுப்புற மக்களின் வழிபாடுகள் அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப அமைகின்றன. இன்னின்ன முறைகளில்தான் வழிபாடு செய்ய வேண்டும் என்கிற கட்டுப்பாடுகள் இல்லை. நாட்கால பூசை, உச்சிக்கால பூசை, இரவு நேரப் பூசை என்கிற நாட்பூசைகள் பெரும்பாலும் நடைபெறுவது இல்லை. விருப்பப்பட்டால் எந்த நாளாக இருந்தாலும் எவர் வேண்டுமானாலும் சென்று பூசை செய்வார்கள். அவரவர் வீட்டு விசேஷ தினங்களில் பொங்கல் வைத்து, பூ வைத்து, மஞ்சள் குங்குமம் இட்டு கற்பூரம் ஏற்றி வழிபடுவார்கள். இவ்வழிபாட்டிற்கென்று தனியாக யாரும் நியமிக்கப்படுவது இல்லை. யார் வேண்டுமானாலும் வழிபாடு செய்யலாம். நாட்டுப்புறத் தெய்வங்களுக்குப் பெரும்பாலும் சிலைகள் இருப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் முறையாக வடிவமைக்கப்படாத தன்மை கொண்டதாக அமைந்திருக்கும். இத்தெய்வங்களுக்குக் காணிக்கையாக இரத்தம், மாமிசம், கள் போன்றவற்றையே வைத்துப் படைப்பர். பலியிடுதலும், பொங்கிப் படைத்தலும் கிராம வழிபாட்டின் சிறப்பியல்பாக அமைகிறது. முறையான வழிபாடுகள் ஏதும் இல்லை. துன்பம் வருகிறபோது வேண்டிக் கொள்வர். அதன் நேர்த்திக் கடனாக வேப்பிலைப் பாவாடை அணிதல், மொட்டையடித்தல், உருவார பொம்மைகள் போன்ற சிலைகள் செய்து வைத்தல் போன்றவற்றை மேற்கொள்வர்.

தனியான பூசாரி எவரும் இல்லாத இவ்வழிபாட்டில் அருள் வந்தோர் சாமியாடி ஆசி வழங்குவதும், கடந்த காலம் எதிர்காலம் பற்றிக்குறி கூறுவதும் உண்டு. கிராமிய வழிபாட்டில் அம்மக்களின் தலைவரே தெய்வ வழிபாட்டையும் முன் நின்று நடத்தி வைக்கின்றார். எனவே நாட்டுப்புற வழிபாடு என்பது எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி தங்களிடம் கிடைக்கின்ற பொருள்களைப் படைத்துத் தங்களையும், வணங்கும் தெய்வத்தையும் திருப்திப்படுத்திக் கொள்ளும் நிலையிலேயே அமைகின்றது.

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதனை வழிபட்டால் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதனடிப்படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பலிகள் தருவதன் மூலம் இயற்கையினை வயப்படுத்தி விடலாம் என்ற அடிப்படையில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தோன்றின. காலப்போக்கில் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினர். இவ்வாறு மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பழங்கால மனிதன் இடி, மழை, மின்னலைக் கண்டு அஞ்சினான். நோய் முதலியவற்றிற்கு ஆவிகளே காரணமென

எண்ணினான். அவ் ஆவிகளை வழிபட ஆரம்பித்தான். உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Fraud) அவர்களும் இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கிறார்.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியே தமிழகத்தில் வழங்குகிறது. நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் மக்கள் நம்புகின்றனர். நாட்டுப்புறமக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர்.

**இயற்கை வழிபாடு:**

ஆதிமனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டான். இயற்கையை வழிபட ஆரம்பித்தான். இயற்கையை வழிபட ஆரம்பித்து விழாவெடுத்து நன்றிக்கடன் ஆற்ற விரும்பினான். நாட்டுப்புற மக்களிடையே இன்றும் இயற்கையை வழிபடுவதைக் காணலாம். சிலம்பில் கூட 'ஞாயிறு போற்றுதும்' என்ற இயற்கை வழிபாட்டைக் காணலாம்.

ஞாயிறு, சந்திரன், மழை, மரம், செடி, கொடிகள் முதலியவற்றை வழிபடுவதைக் காண்கிறோம். நாட்டுப்புற மக்கள் நிலவைக் கும்மியடித்து வழிபடுவதைக் காண்கிறோம். கதிரவனின் பேரொளியையும் காற்றின் சீற்றத்தையும் மழையின் பொழிவையும் இருளின் மறைப்பையும் கண்டு அஞ்சி அவற்றின் சீற்றத்தை உள்ளத்தே கொண்டு அஞ்சியதாலேயே இவ்வழிபாடு தோன்றியது. 'இயற்கைத் தோற்றங்களாகிய பொருள்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல் முதலான பொருள்களைக் கண்டு ஏற்பட்ட என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயின' எனக் கூறும் மாக்ஸ் முல்லரின் கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது. நலன் பெருகவும் நன்றிக்கடன் செலுத்தவும் இயற்கையை வணங்க ஆரம்பித்தார்கள். கதிர் வழிபாடும் மாரி வழிபாடும் விண் வழிபாடும் மண் வழிபாடும் இப்படித்தான் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இயற்கையின் ஒழுங்கமைவுகளும் நுட்பமும் மனிதனைச் சமய நம்பிக்கைக்கு அழைத்துச் செல்கின்றன. கதிரவனின் இயக்கமும் மதியின் இயக்கமும் பருவங்களின்

மாறுதல்களும் இயற்கை நியதியின் விளைவு மனிதனின் மனதில் ஒரு பாதிப்பை உண்டாக்கி சமயவாழ்வுக்கு நம்பிக்கை அளிக்கின்றன.

**நாட்டுப்புறச் சமயம்** :

நாட்டுப்புறச் சமயம் தொன்மையானது, பழமையானது இயற்கையின் ஆற்றலை அறிந்து கொள்ளாத மனிதன் அவற்றைக் கண்டு அஞ்சி, தன்னைப் பயமுறுத்தும் இடி, மின்னல், மழை முதலானவற்றை வழிபட ஆரம்பித்த காலத்திலேயே நாட்டுப்புறச் சமயம் தோன்றி விட்டது எனலாம். இந்நாட்டுப்புறச் சமயம் பண்பாட்டின் நாற்றாங்காலாகவும், தமிழர்களின் வீரஞ்செறிந்த கலை வாழ்வினைக் காட்டும் தூண்களாகவும் விளங்குகின்றன. தமிழ்நாட்டின் ஒவ்வொரு கிராமமும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தியால் பிணைக்கப்பட்டு அச்சக்தியே கிராமப்புறத் தெய்வமாக வழிபடப்படுகின்றது. எத்தகைய வரையறைகளுக்குள்ளும் அடங்காத தன்மையுடையதே நாட்டுப்புறச் சமயம். கண்ணுக்குப் புலப்படாத சக்தியோடு தங்கள் முன்னோரையும் இயற்கையையும் தலைவர்களையும், வீரர்களையும் இன்ன பிறவற்றையும் வணங்கும் தன்மையுடையதே நாட்டுப்புறச் சமயம்.

சுருக்கமாகக் கூற வேண்டுமானால் கிராம மக்களின் வாழ்வோடு தொடர்புடையதும் அவர்களால் மரபு ரீதியாக வழிவழியாக வணங்கப்பட்டு வருவதும் அவர்களுக்கே உரியதுமாகிய தன்மைகளை உடையதே நாட்டுப்புறச் சமயம் எனலாம். 'நாட்டுப்புறச் சமயம் என்பது அமைப்புக்குட்படுத்தப்பட்டு, நிறுவனமாக்கப்பட்டுவிட்ட கட்டுப்பாடுகளைக் கொண்ட சமயங்களுக்கு மாறுபாடானது' என்ற 'டான்யோடரின்' கூற்றும் இங்குக் குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறச் சமயத்தில் சைவம், வைணவம் என்ற பாகுபாடுகள் இல்லை. அதோடு கிறித்தவம், இசுலாமியம் என்ற வேறுபாடுகளும் இல்லை. சில இசக்கியம்மன் கோயில்களுக்குக் கிறித்தவர்கள் போவதும் சில இசுலாமிய தர்காக்களுக்கு இந்துக்கள் போவதும் நாட்டுப்புறங்களில் மட்டுமே காண இயலும். நாட்டுப்புறச் சமயம் சமத்துவத்தின் இருப்பிடம், ஒற்றுமையின் பிறப்பிடம்; அமைதியான வாழ்க்கையின் உறைவிடம், மன அமைதியின் வாழ்விடம் என்ற தன்மைகளைக் கொண்டது.

எண்ணிலடங்கா நாட்டுப்புறத் தெய்வங்கள், பல்வேறு பெயர்களால் நாட்டுப்புற மக்களால் வழிபடப்படுகின்றன. பொதுவாக நாட்டுப்புறத் தெய்வங்களை ஆண் தெய்வங்கள் என்றும், பெண் தெய்வங்கள் என்றும் வகைப்படுத்தலாம்.

நாட்டுப்புறத் தெய்வங்களுள் பெரும்பாலனவை பெண் தெய்வங்களாகவே அமைந்துள்ளன. அதற்குக் காரணமாகத் தமிழருடைய பண்பாட்டைக் கூறலாம். எதையுமே தாயாகப் பாவிக்கும் தன்மை நம்மிடம் உள்ளது. தாய்நாடு, தாய்மண், தாய்மொழி என்று தாய்மைக்குப் புனிதத் தன்மை கொடுத்துப் பார்க்கும் இயல்பு உள்ளதால் பெண் தெய்வங்கள் அதிகமாக வணங்கப்படுகின்றன எனலாம்.

மேலும் நாட்டுப்புறத் தெய்வங்களைச் சிறுதெய்வங்கள், பெருந்தெய்வங்கள் என்று வகைப்படுத்தலாம். மாரி, காளி, வீரன், பிடாரி, அய்யனார், முனீஸ்வரன் முதலிய தெய்வங்களைச் சிறுதெய்வங்களாகவும், சிவன், திருமால், இராமர், கிருஷ்ணர், பார்வதி, சரஸ்வதி, லட்சுமி போன்ற தெய்வங்களைப் பெருந்தெய்வங்களாகவும் காணலாம். பழங்காலத்தில் நாட்டுப்புறத் தெய்வங்களாக இயற்கைச் சக்திகளான காற்று, மழை, நெருப்பு போன்றனவே இருந்தன. பின்னர் சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்கள் என காலப்போக்கில் வளர்ந்தன. சமூகத்தில் உயர்வு, தாழ்வு, அதிகம், குறைவு போன்ற பாகுபாடுகள் காணப்படுவது போல தெய்வங்களிலும் சிறுதெய்வங்கள், பெருந்தெய்வங்கள் என்ற பாகுபாட்டினைக் காணமுடிகின்றது.

ஆரியர் வருகைக்குப் பின் வளர்ச்சியடைந்த, புராண இதிகாசங்களுக்குப்பட்ட ஆகமவிதிகளின்படி அமைக்கப்பட்ட கோயில்களில் வணங்கப்படும் வேதமுறைப்படியான தெய்வங்களைப் பெருந்தெய்வம் என்று குறிப்பிட்டு, நாட்டுப்புறத் தெய்வங்களைச் சிறு தெய்வங்கள் என்று அழைப்பது. பொருத்தமுடையதாக அமையவில்லை. காரணம் ஆரியர் நம் நாட்டிற்கு வருகை தருவதற்கு முன்பாகவே நம் நாட்டில் தெய்வங்களும் வழிபாடுகளும் இருந்தன. எனவே, நான்கு வருணங்களைப் புகட்டும் வேதமுறைப்பட்ட தெய்வங்களோடு நாட்டுப்புறத் தெய்வங்களை ஒப்பிடலாம், பழமை வாய்ந்த மரபுரீதியாக வழிவழியாக வணங்கப்பட்டு வரும் தெய்வங்களைச் ‘சிறு தெய்வங்கள்’ என்று குறிப்பிடாமல் ‘பழந்தெய்வங்கள்’ என்று அழைப்பதே பொருத்தமாக அமையும்” என்ற பொற்கோவின் கருத்தும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

நாட்டுப்புறத் தெய்வங்களின் வகைப்பாட்டினை அறிஞர்கள் பலவாறு வெளிப்படுத்தி உள்ளனர். அவர்களின் வகைப்பாட்டினைக் காண்போம். சு.சக்திவேல் அவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை ஐந்தாக வகைப்படுத்துகின்றார்.

1. ஆண் தெய்வங்கள்
2. பெண் தெய்வங்கள்

3. குல தெய்வங்கள்

4. சாதித் தெய்வங்கள்

5. ஊர்த் தெய்வங்கள்

என்பன அவை. துளசி. இராமசாமி அவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை ஆறாக வகைப்படுத்துகிறார். அவையாவன.

1. ஊர்த் தெய்வங்கள்
2. இனத் தெய்வங்கள்
3. குலத் தெய்வங்கள்
4. மாலைத் தெய்வங்கள்
5. சமாதித் தெய்வங்கள்
6. துணைத் தெய்வங்கள்

**நாட்டுப்புறத் தெய்வ வகைப்பாடுகள் :**

நாட்டுப்புற மக்கள் தெய்வங்களையேன்றி இயற்கையையும், முன்னோர்களையும், தலைவர்களையும், வீரர்களையும், ஏனைய விலங்குகள், பறவைகள் போன்றவற்றையும் தெய்வங்களாக வழிபட்டுள்ளனர். அவற்றை வரிசைப்பட அறிவோம்.

**ஆவியுலக வழிபாடு (Amimism):**

ஆவியுலக வழிபாட்டைப் பற்றி டைலர், சமயத்தின் தொடக்கம் ஆவிகளின்பாற் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது என்கிறார். ஆதிமனிதன் ஆவியின் சீற்றத்தைத் தணிக்க ஆவியை வழிபட ஆரம்பித்தான். ஆவிகள்தான் அவர்களது செயலைக் கட்டுப்படுத்துவதாக ஆதிமனிதன் நம்பினான். எனவே முன்னோரது ஆவியை வழிபட ஆரம்பித்தனர். பெரும்பாலான பழங்குடி மக்கள் ஆவியுலகக் கோட்பாட்டினராவர். தமிழர்களும் ஆவி வழிபாட்டினரே. ஆவி வழிபாட்டைப் பற்றி பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணலாம். ஆவியுலகக் கோட்பாட்டில் ஆன்மாக் கோட்பாடும் அடங்கும் என டைலர் கூறுவது குறிப்பிடத்தக்கது. இக்கோட்பாட்டிலிருந்து எழுந்ததே தோடரது பச்சைச் சாவுச்சடங்கும் உலர்ந்த சாவுச் சடங்குமாகும். எம்மோர் (Elmore) அவர்களும்

இறந்தவரது ஆவிகளே தெய்வங்களின் தோற்றம் எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களிலும் கதைத்தலைவர்கள் உயிர் பெற்று, தெய்வமாவதைக் காண்கிறோம். கொடூரமாக, சமூக அநீதியால் கொல்லப்பட்ட தலைவர்களது ஆவியின் சினத்தைத் தணிவிக்க, பூசையிட்டு வழிபடுவது குறிப்பிடத்தக்கது. இது ஆவியுலக வழிபாட்டின் அடிப்படையில் எழுந்ததாகும்.

**குலக்குறி வழிபாடு (Totemism):**

பழங்குடியினர் சில பொருள்களிலிருந்து தோன்றியவர்கள் என்று நம்புவதால் அப்பொருள்களைப் பாதுகாக்கவும் வழிபடவும் ஆரம்பித்தனர். விலங்கு, பறவை, இயற்கைப் பொருட்களைக் குலக்குறியாகக் கொண்டனர். இவற்றை வழிபடுவதன் மூலம் இவற்றின் ஆற்றல் தங்கட்குக் கிட்டும் என நம்பினர். குலக்குறி கால் வழிப் பகுப்புக்கும் திருமண உறவுக்கும் அடிப்படையாக உள்ளது. குலக்குறி வழிபாட்டை நாட்டுப்புற மக்களிடையேயும் காண்கிறோம். வழிபாடு, நம்பிக்கை முதலியவற்றைக் குலக்குறியம் (Totemism) என்பர். ஓரே குலக்குறி வழிபடுவோர் ஒரே கால்வழியைச் சார்ந்தவராகயிருப்பர்.

குலக்குறியின் தோற்றம் பற்றி ஆண்ட்ரூஸ் லாங்க், பிரேசர், வில்கெம் ஸ்மித், ரெட்கிளிப் பிரென் போன்றோர் ஆராய்ந்துள்ளனர். மனிதர்களின் ஆவி விலங்குகளிடம் சென்று உறையும் என்ற நம்பிக்கையில் எழுந்ததே குலக்குறி என்கிறார் வில்கெம். ஒரு கூட்டத்தினரின் சமூக மனநிலையின் ஒன்றுபட்ட வெளிப்பாடே குலக்குறி என்கிறார். டூர்கைம் பல்வேறு நிகழ்வுகளால் குலக்குறி நம்பிக்கை தோன்றியிருக்கலாம் என வெரியர் எல்வின் எண்ணுகிறார். கொங்கு நாட்டில் குலக்குறியைக் கூட்டம் என்கின்றனர். கொங்கு நாட்டில் காடை விநாயகர் கோயிலிருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே குலக்குறி வழிபாடு தொன்மைச் சமுதாயத்தின் ஒரு கூறாகும்.

**புனிதப் போலிப் பொருள் வழிபாடு (Fetishism):**

இயற்கை கடந்த ஆற்றல்கள் சில பொருள்களில் உறைவதாக மக்கள் எண்ண அவற்றை வழிபட ஆரம்பித்தனர். அப்பொருட்கள் உயிருள்ளவையாகவோ உயிரற்றவைகளாகவோ இயற்கையானவைகளாகவோ

செயற்கையானதாகவோ இருக்கும். இயற்கை மீறிய ஆற்றல் உடையதென்று நம்பி வழிபடுகின்றனர். தாயத்து கட்டிக் கொள்ளுதல் போலிப்பொருள் வழிபாட்டின் தொடர்ச்சியாகும். இவற்றிற்கு மந்திர ஆற்றல் இருப்பதாகவும் மக்கள் நம்புகின்றனர். இவ்வழிபாடு ஆப்ரிக்கா மட்டுமின்றி உலக முழுவதும் பரவியுள்ளது. இவ்வழிபாட்டு முறையை ஆவியுலக நம்பிக்கையின் தொடர்ச்சி என்று கூறலாம்.

### முன்னோர் வழிபாடு (Ancestor Worship):

கிராம மக்கள் தங்கள் குலத்தில் பிறந்து தமக்கு உதவி செய்து இறந்துவிட்ட முன்னோரை வழிபடுவது வழக்கம். அவ்வாறு வழிபாடு செய்வதால் தங்கள் குலம் தழைக்கும் என்று நம்புகின்றனர். பொதுவாகவே இறந்து போன முன்னோர்களைத் தெய்வமாகப் பாவிப்பவர்கள் நாட்டுப்புற மக்கள், தமிழகத்தில் இருந்த நடுகல் வழிபாடும் முன்னோர் வழிபாடே ஆகும். இவ்வழிபாடு ஒவ்வொரு வீட்டிற்கும் வேறுபடும். ஒவ்வொரு சாதிக்கும் மாறுபடும். எடுத்துக்காட்டாக கருப்பராயரை உப்பிலியாக மக்கள் முன்னோராக வழிபடுகின்றனர். இவைதவிர ஒவ்வொரு வீட்டிலும் இறந்து போகும் பெரியவர்களையும், அம்மைநோயால் இறந்து போனவரையும், மணமாகாது இறந்து போன கன்னிப் பெண்களையும் வழிபடுவர். இவையாவும் முன்னோர் வழிபாடு. நாட்டுப்புற மக்கள் தங்கள் வீட்டில் மஞ்சள் குங்குமமிட்டு விளக்கேற்றி வழிபடுவர். இறந்தவர்க்குப் பிடித்தமான பொருள்களையும் துணிமணிகளையும் வைத்துப் படைத்து வழிபடுவார்கள். இவ்வாறு செய்தால் தங்கள் குடும்பத்தை முன்னோர்கள் காத்து வழிநடத்துவார்கள் என்று நம்புகின்றனர்.

### தலைவர்கள் வழிபாடு

தங்கள் குலத்திற்கோ, சாதிக்கோ, ஊருக்கோ உதவி செய்து அவர்களுக்காகப் போராடிப் பல துன்பங்களை அனுபவித்து உயிர்விட்ட பெரியோர்களை வழிபடும் வழக்கமும் கிராமங்களில் உண்டு. அவ்வழிபாட்டைத் தலைவர் வழிபாடு எனலாம். கட்டபொம்மன், மருதுபாண்டியர் போன்றவர்களை வழிபடுகின்றனர். அதாவது சமூக வரலாற்று அடிப்படையில் தங்களுக்குத் தெரிந்த உண்மைகளின் வழிநின்று முன்னோரைப் போற்றும் வகையில் இத்தகையோரையும் கிராம மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

**வீரர்கள் வழிபாடு :**

தங்கள் கிராமத்திற்காகவும், தங்கள் சாதிக்காகவும் பாடுபட்டு மாண்டு போன வீரர்களை வழிபடும் வழக்கம் கிராமங்களில் உண்டு. மாடசாமி, மதுரைவீரன், காத்தவராயன், கருப்பராயன், வீரனார். அக்கினி வீரபத்திரன், மந்தை வீரன். இருளப்பசாமி, முதலான வீரர்களைத் தெய்வங்களாக வழிபடுகின்றனர். நெல்லை, குமரி மாவட்டங்களின் கிராமங்களில் முக்கிய தெய்வமாகப் போற்றி வழிபடக் கூடியது மாடசாமி ஆகும். மாடசாமியைச் சுடலைமாடன் என்றும், இருளப்பசாமி என்றும் வழங்குகிறார்கள். மாடசாமியை சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட தெய்வமாகவும், ஊர் மக்களைக் காக்கும் காவல் தெய்வமாகவும், மக்கள் நம்புகிறார்கள். இவ்வாறு வீரர்களும் தெய்வங்களாகக் கிராம மக்களால் வழிபடப்படுகின்றனர்.

**தெய்வங்கள் :**

நாட்டுப்புறத் தெய்வங்களை, அமைப்பு நோக்கில் ஆராய்ந்த ஆய்வாளார்கள் பின்வருமாறு அவற்றை வகைப்படுத்துகின்றனர்.

1. ஊர்த் தெய்வம்
2. காவல் தெய்வம் (அ) எல்லைத் தெய்வம்
3. சாதித் தெய்வம்
4. குலத் தெய்வம்
5. பொதுத் தெய்வம்

**ஊர்த்தெய்வம்:**

ஒவ்வொரு கிராமத்திலும் ஊர் மக்கள் அனைவருக்கும் பொதுவான தெய்வம் இருக்கும். அத்தெய்வம் ஊர்த்தெய்வம் எனப்படும். பெரும்பாலான கிராமங்களில் 'மாரியம்மன்' ஊர்த்தெய்வமாக இருக்கும். 'வட ஆற்காடு' மாவட்டத்திலுள்ள 'ஊத்தூர்' என்னும் கிராமத்தில் 'போலார் அம்மன்' ஊர்த்தெய்வமாக வணங்கப்படுகின்றது. இதற்கு வருடந்தோறும் விழா எடுக்கப்படுகின்றது. இதற்கென்று தனிப்பட்ட கோயில் அமைப்பு இல்லை. ஆனால் மேடை போன்ற அமைப்பின் மேல், சிறு மாடம் அமைத்து அதில் நாளும்

விளக்கேற்றி வருகின்றனர். திருவிழாவின் போது மட்டும் 'போயார் அம்மன்' உருவம் செய்யப்படுகிறது. மூன்று நாள் நடக்கின்ற திருவிழாவில் முதல்நாள் காப்பு கட்டப்படுகிறது. ஊர் மக்கள் அனைவரும் பொங்கல் வைக்கின்றனர். இரண்டாம் நாள் கரகம் எடுக்கப்படுகின்றது. மூன்றாம் நாள் குயவர் வீட்டில் செய்யப்பட்ட அம்மன் சிலையை வண்ணார் வீட்டிற்குக் கொண்டு வந்து வண்ணார் மகனால் தாலி கட்டப்படுகின்றது. பிறகு ஊர்வலமாகக் கொண்டு சென்று ஊர் சுற்றி வந்த பிறகு ஊரின் கடைப்பகுதிக்குக் கொண்டு சென்று மண்ணால் செய்யப்பட்ட உருவத்தை உடைத்து எறிந்து விட்டு, தீய வார்த்தைகளால் ஏசிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வந்து விடுகின்றனர். இத்தெய்வமே தங்கள் ஊரைக் காக்கும் கிராமத் தெய்வமாகும் என்றும், அத்தெய்வத்திற்கு விழா எடுத்து ஏசுவது பிடிக்கும் என்றும் கூறுகின்றனர். இதுபோன்று ஒவ்வொரு ஊர்க்கும் ஊரைக் காக்கும் கிராமத் தெய்வம் என்று ஒன்றிருக்கும். அது அவ்வூர் மக்கள் அனைவருக்கும் பொதுவானதாக அமைந்திருக்கும்.

**காவல் தெய்வம் (அ) எல்லைத் தெய்வம்:**

கிராமத் தெய்வத்தைப் போன்றே ஊரின் எல்லையிலிருந்து வேற்றார்களால் ஊருக்கு எந்தத் தீங்கும் வந்து விடாமல் காக்கும் தெய்வம் ஒன்று இருக்கும். அத்தெய்வத்தையே காவல் தெய்வம் (அ) எல்லைத் தெய்வம் என்று கூறுவர். மேற்கூறிய ஊத்தூரை எடுத்துக் கொண்டால் அவ்வூருக்குக் காவல் தெய்வமாகக் கன்னியம்மாள் விளங்குகின்றது. இதன் அமைப்பற்ற கோயில் ஏரிக்கரையின் கடைவாயிலில் அமைந்துள்ளது. இதற்கென்று தனிப்பட்ட பூசைகள் எதுவும் இல்லை. எப்போதாவது விழா எடுப்பார்கள். ஊருக்கு ஆபத்து வருகிறபோது, காவல் தெய்வத்திற்குப் பலியிட்டு வழிபாடு செய்வார்கள்.

**சாதித்தெய்வம் :**

ஒரு கிராமத்தில் பல சாதி மக்கள் வாழ்கிற நிலையில் ஒவ்வொரு சாதிக்கும் ஒரு தெய்வம் இருக்கும். அத்தெய்வம் அச்சாதி மக்கள் அனைவருக்கும் பொதுவானதாக அமைந்திருக்கும். அதனைச் சாதித்தெய்வம் என்று கூறுவர். ஊத்தூரையே எடுத்துக்காட்டாகக் கொண்டால் அங்கே வாழும் இருளர், கருமார், வாணியர், வன்னியர், ஒட்டர், ரெட்டியா, இடையர் முதலான ஒவ்வொரு சாதி மக்களுக்கும் ஒரு சாதித் தெய்வம் உண்டு. இருள் சாதி மக்களுக்கு

முத்தாளம்மன் என்னும் அம்மனும், இடையர் இன மக்களுக்கு மாகாளியம்மனும் சாதித்தெய்வங்களாக உள்ளன. இச்சாதித் தெய்வங்களுக்கு அவர்கள் ஒன்று கூடி விழா நடத்துவதும் உண்டு. சில நேரங்களில் பூசைகள் செய்வதும் உண்டு. ஊர் சாதிக்கு மட்டுமல்லாது, அதே சாதியைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களில் வாழும் மக்களுக்குப் பொதுவான சாதித் தெய்வங்களும் உண்டு. எடுத்துக்காட்டாக கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பதினெட்டு கிராமங்களைச் சேர்ந்த ‘உப்பிலிய’ சாதி மக்களுக்குப் பொதுவான சாதித் தெய்வமாகக் கருப்பராயன் அமைந்துள்ளது.

**குலத்தெய்வம்:**

ஒரே சாதியைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும் ஒவ்வொரு குடும்பத்திற்குமாக ஒரு தெய்வம் இருக்கும். அத்தெய்வத்தைக் குலத்தெய்வம் என்பர். வீட்டில் நடக்கும் நற்காரியங்களின் போது பொங்கல் வைத்து, பூசை செய்து வழிபடுவர். அதேபோன்று தொழில் செய்கிற போதும் குலதெய்வத்தை வேண்டிய பிறகே செய்வார்கள்.

**பொதுத்தெய்வங்கள்:**

ஊர் மக்கள் அனைவருக்கும் பொதுவாக உள்ள தெய்வத்தைப் பொதுத் தெய்வம் என்பர். தமிழ்நாட்டில் பெரும்பான்மையான கிராமங்களில் ‘மாரியம்மன்’ பொதுத்தெய்வமாக இருக்கும். இதற்கென்று பெரும்பாலும் கோவில் இருக்காது. சிறுமேடையின்மேல் வேல் சூலம் நடப்பட்டிருக்கும். இதற்கு சித்திரை அல்லது ஆடிமாதம் பூசை செய்வார்கள். அதாவது கூழ் ஊற்றிப் பொங்கல் வைத்துப் பலியிட்டு வழிபடுவார்கள். இத்தெய்வத்திற்கு ஊர் மக்கள் சேர்ந்து விழா எடுப்பார்கள். குடும்பம் குடும்பமாகப் பூசை செய்வார்கள். இத்தெய்வ வழிபாடு அம்மை, காலரா ஆகிய நோய்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காகவே செய்யப்படுகிறது.

‘மாரியம்மனே’ பெரும்பாலும் ஊர்த்தெய்வமாகவும் பொதுத் தெய்வமாகவும் காணப்படுகின்றது. ஊர்த்தெய்வத்திற்கும், பொதுத் தெய்வத்திற்கும் வேறுபாடுகள் ஒன்றும் இல்லை என்பதையும் உணரமுடிகின்றது. இவ்வாறு பல்வேறு நிலைகளில் நாட்டுப்புறத் தெய்வ வகைப்பாடுகளைப் பற்றி அறியமுடிகின்றது.

**சிறு தெய்வ வழிபாடு:**

நாட்டுப்புறத் தெய்வங்களைத்தான் சிறு தெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும் குல தெய்வ வழிபாடும் ஊர்த்தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும். வீட்டில் யாரேனும் துன்புற்றாலும் நோய்வாய்ப்பாட்டாலும் குடும்ப தெய்வத்திற்குப் பூஜை செய்வர். குடும்ப தெய்வத்தின் பெயரைப் பிள்ளைகட்கு வைப்பர். ஒவ்வொரு சாதியினரும் பல குலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம் உண்டு. இன்றும் நாட்டுப்புறங்களில் அந்தந்த குலத்து தெய்வம் துணை எனத் திருமண அழைப்பிதழில் அச்சிடுவதைக் காணலாம். ஒரே குல தெய்வத்தை வழிபடுபவர்கள் அனைவரும் பங்காளிகளாவர்.

'குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்'

'குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி'

என்ற கும்மிப்பாடல் வரிகள் குல தெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறுகிறது. நேரங்களில் செல்வாக்குமிக்க குல தெய்வம் ஊர்த்தெய்வமாகவும் பின்னர் பல ஊர்த் தெய்வமாகவும் மாறுவதுண்டு.

சிறு தெய்வங்கள் வேதக்கடவுளோடு பெரும்பாலும் தொடர்பு கொள்ளாதவை. முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கப்படாதவை. பூசை, திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமான வரையறை கிடையாது. பிராமணர் அல்லாதோர் பூசாரியாகயிருப்பர். கோவில் போன்ற அமைப்பும் பெரும்பாலும் கிடையாது. செவிவழிச் செய்திகளும் கர்ண பரம்பரைக் கதைகளும் உண்டு. அச்சத்தின் காரணமாகவும் வளமைக்காகவும் இயற்கையின் சீற்றம் தணியவும் அம்மை காலரா போன்ற நோய்களைத் தடுக்கவும் நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுகின்றனர். சிறு தெய்வங்களில் மாரியம்மன், அய்யனார் போன்றவை பெரும் பாரம்பரிய மரபை (great tradition) நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்று கூறுவர். பிராமணர் பூசாரி, உயிர்ப்பலி இன்மை, திட்டவட்டமான பூசை, திருவிழா, ஆகவிதிப்படி, கோயில் உருவச்சிலையில் மாற்றம் முதலியவற்றால் ஜோஸ்பின் கலா அவர்கள் இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்கிறார். இத்தெய்வ வழிபாடுகளை ஆழ்ந்து நோக்கின் ஆரியமயமாகும். தன்மையைக் (Aryanization) காண்கிறோம்.

நாட்டுப்புறங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள்தான் அதிகம் உள்ளன. அவர்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப்பிணைந்து விட்டன. நாட்டுப்புறத் தெய்வங்களே நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சிக்குக் காரணமெனின் மிகையாகாது. தமிழகமெங்கும் மாரியம்மன் வழிபாடு காணப்படுகிறது. 'ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது' என்ற நம்பிக்கையை மக்களிடம் காண்கிறோம். மாரியம்மனை வேண்டுவது போல் காளியம்மனையும் வேண்டுகின்றனர். மாரியம்மன் வழிபாட்டைப் போன்ற அய்யனார் வழிபாட்டையும் காணலாம்.

'ஊருக்கு நேர்கிழக்கே உறுதியுள்ள ஐயனாரே

சத்தத்தை நீ கொடய்யா சரளிவிட்டு நான் படிக்க'

என்று ஐயனாரைப் பற்றிப் பாடுகின்றனர். அய்யனார் காவல் காக்கும் தெய்வமாகக் கருதப்படுகிறார். நாட்டுப்புறத் தெய்வங்களில் வேளாண்மையோடு தொடர்புடைய பெண் தெய்வங்கள்தான் அதிகம். நாட்டுப்புறத் தெய்வங்கள் தங்களுடைய விருப்பங்களையும் நிறைவேற்றப்பட வேண்டிய வேண்டுதல்களையும் தெய்வநிலைக்குட்பட்ட பூசாரி, அருள் வந்தோர் மூலமாக அறிந்து கொள்கிறார்கள். நாட்டுப்புறத் தெய்வங்களை வளமையைக் கொடுப்பனவாகவும் ஆறு, குளம் முதலியவற்றைக் காப்பனவாகவும் கொடிய நோயிலிருந்து காப்பனவாகவும் கால்நடைகளை நோயிலிருந்து காப்பனவாகவும் கருதுகின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்கட்கு வேண்டுதலை நிறைவேற்றாவிட்டால் துன்பம் நல்கும் என நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். நாட்டுப்புற மக்கள் பெருந்தெய்வங்களை வழிபட்டாலும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் வேறுபாடு அதிகம் காணமுடியாது. நாட்டுப்பறத் தெய்வ வழிபாட்டு முறையை நுணுகி ஆராய்ந்தால் அது தனித்து விளங்குவதைக் காணலாம்.

**பெருந்தெய்வ வழிபாடு:**

நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை மட்டுமின்றி பெருந்தெய்வங்களையும் வழிபடுகின்றனர். சிவன், திருமால், முருகன், பிள்ளையார் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற தெய்வங்கள் பெருந்தெய்வங்கள் வேதக் கடவுளோடும் அதனொடு தொடர்பு கொண்ட கடவுளாகவும் கருதப்படுகின்றன. ஆகம விதிப்படி கோயிலும் திட்டவட்டமான பூஜை, திருவிழாக்களும் உண்டு.

வழிபாட்டு முறையில் பிராமணிய முறை பின்பற்றப்படுவதோடு திருவிழாக்களும் குறித்த காலத்தில் நடைபெறுகின்றன.

தெய்வங்களில் சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்களுக்கிடையே மிகுந்த வேறுபாடு உண்டு. ‘சமூகத்தில் உயர்வு தாழ்வு, அதிகம், குறைவு போன்ற பாகுபாடுகள் தோன்ற வளர்ந்துள்ளன. அதுபோல மனிதப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் தெய்வ வழிபாடும் பெருந்தெய்வ, சிறுதெய்வ வழிபாடு என இருவகையாகப் பிரிந்து காணப்படுகிறது. நாட்டுப்புறத் தெய்வங்கள் நாட்டுப்புற மக்களோடு ஒன்றிக் காணப்படும் சக்தியாக விளங்குவதோடல்லாமல், மக்களில் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுத்தால், கிராமப்புறத் தெய்வங்கள் அன்றாடம் நினைத்து வழிபடப்படுகின்றன. அதனால் இங்கு கிராமப்புறத் தெய்வங்கள் கிராம மக்களுக்கு ஒரு பாதுகாவலாக வழிகாட்டியாக இணைந்து காணப்படுகின்றன. என டாக்டர் கைலாசபதி கூறுவது சிந்திக்கத்தக்கதாகும்.

இயற்கை வழிபாட்டில் தொடங்கிய வழிபாடு சிறு தெய்வழிபாடாக மலர்ந்தது. பின்னர் சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என இருவகையான வழிபாடுகள் தோன்றின் இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமைகளை நோக்கின், அதில் தனித்தன்மை நன்கு புலனாகும். சிறுதெய்வ, பெருந்தெய்வ வேறுபாடுகளைக் கீழ்க்கண்டவாறு நுணுகிக் காணலாம்.

| **சிறுதெய்வங்கள்** | | **பெருந்தெய்வங்கள்** | |
|---|---|---|---|
| 1. | பிறப்பு இறப்பு உள்ளவை | 1. | ஆதி அந்தம் இல்லாதவை |
| 2. | குறிப்பிட்ட ஆற்றலுடையவை | 2. | எல்லயற்ற ஆற்றலுடையவை |
| 3. | மனித உணர்வில் தோன்றியவை | 3. | பண்பாட்டு உணர்வில் தோன்றியவை |
| 4. | சில சக்திகளைக் கொண்டவை | 4. | எல்லாச் சக்திகளையும் கொண்டவை |
| 5. | உயிர்ப்பலி உண்டு | 5. | உயிர்ப்பலி இல்லை |
| 6. | பிராமணர் அல்லாதோர் பெரும்பாலும் | 6. | பிராமணர் பூசாரியாக இருப்பர். |

| | | | |
|---|---|---|---|
| | பூசாரியாக இருப்பர். | | |
| 7. | நாட்டுப்புறத் தெய்வங்களில் பெரும்பான்மை பெண் தெய்வங்கள் | 7. | பெரும்பான்மை ஆண் தெய்வங்கள் |
| 8. | பெண் தெய்வங்கள் திருமணமாகாதவை | 8. | பெண் தெய்வங்கள் திருமணமானவை |
| 9. | பூசை, திருவிழா முதலியவற்றில் வரையறை இல்லை | 9. | பூசை, திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமான வரன் முறை உண்டு. |
| 10. | சிறு தெய்வங்களை வீட்டுத் தெய்வம், குலதெய்வம், சாதித் தெய்வம், ஊர்த்தெய்வம் என பிரிப்பர் | 10. | பொதுவான தெய்வங்களாகக் கருதப்படுகின்றன. |
| 11. | தங்களுக்குள்ளே பகைமையை வளர்க்கும் | 11. | தங்களுக்குள் நேச உணர்வை வளர்க்கும். |
| 12. | பெரும்பாலும் கோயிலமைப்பு இல்லை | 12. | ஆகம விதிப்படி கோயிலமைப்பு உண்டு. |
| 13. | சிறு தெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடில்லை | 13. | பெருந்தெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடு. |
| 14. | அசைவப் பொருட்கள் படைக்கப்படுகின்றன. | 14. | சைவப் பொருட்கள் படைக்கப்படுகின்றன. |
| 15. | மக்களால் உண்டாக்கப்பட்டு மக்களால் பேணப்படுபவை | 15. | அக்காலத்தில் மன்னர், அரசியர், அதிகாரிகளால் பேணப்பட்டவை |
| 16. | நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு செவி வழிச் செய்தி, நாட்டுப்புறக் கதைகள் | 16. | ஸ்தல புராணங்கள் உண்டு. |
| 17. | பாமர மக்கள் வழிபடக் கூடியவை. | 17. | பாமர மக்களும் நகர்ப்புற மக்களும் வழிபடக் கூடியவை. |
| 18. | வட்டாரத்திற்கே உரியவை | 18. | எல்லா வட்டாரத்திற்கும் உரியவை |

| | | | |
|---|---|---|---|
| 19. | அருள்வாக்கு உண்டு | 19. | பூசை மட்டும் உண்டு |
| 20. | நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும் எண்ணிக்கை உடையவை | 20. | சிவன், திருமால் என்ற பிரிவில் அடக்குவர். |
| 21. | மாடங்கள், சுதைகள் கல், மரம், புற்று உறைபவை | 21. | கருங்கல் சிலை, செம்பு வடிவச் சிலை |
| 22. | கொடூர உருவமுடையவை | 22. | சாந்த உருவமுடையவை |
| 23. | இவ்வுலகில் வாழ்வாதாகக் கருதப்படுகின்றவை | 23. | மேலுலகிலும் வாழ்வதாகக் கருதப்படுபவை |
| 24. | வழிபாட்டு முறை இதற்கென்றே தனியாக உள்ளது. | 24. | வழிபாட்டு முறை இதற்கென்றே தனியாக உள்ளது. |
| 25. | பகையை அடியோடு அழித்தல் | 25. | அருள் செய்தல் |
| 26. | சமூக ஒற்றுமைக்கும் (Social Solidarity) கலைகளின் வளர்ச்சிக்கும் பயன்படுகின்றன. | 26. | கலைகளின் வளர்ச்சிக்குப் பயனப்படுகின்றன. |
| 27. | நாட்டுப்புற இயலுடன் தொடர்புடையவை | 27. | எழுத்திலக்கியத்துடன் தொடர்புடையவை |
| 28. | சிறு பாரம்பரிய மரபைச் (Little tradition) சார்ந்தவை | 28. | பெரும் பாரம்பரிய மரபை (great tradition) சார்ந்தவை. |
| 29. | அண்டம் முழுவதும் தொடர்பு கொள்ளாமல் கிராம வாழ்க்கையோடு தொடர்பு கொண்டவை | 29. | அண்டம் முழுவதும் தொடர்பு கொண்டு நகரிய வாழ்வோடு தொடர்பு கொண்டவை. |

**கோயில் அமைப்பு:**

பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வக் கோயில்கள் பீடங்களாகும். பீடங்களே கோயில்களாகக் கருதப்படுகின்றன. பீடங்கள் பெரும்பாலும் மண்ணாலும்

சிமெண்டாலும் கல்லாலும் அமைந்திருக்கும். விழாக்காலங்களில் மட்டும் பந்தல் போட்டுத் தோரணங்கள் கட்டுவர். சில தேவதைகளுக்கு மண்ணாலான மண்டபம் கட்டுவர். சில இடங்களில் கல்லாலான மண்டபம் கட்டியுள்ளனர். கோயில்கள் அதில் உறையும் தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன. சில நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை, முன் மண்டபம், கொடிக்கம்பம், சுற்றுச்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்கு இத்தகைய கோயில்களைக் காணலாம். கர்ப்பக் கிரகத்தைச் சுற்றிப் பல துணைத் தெய்வங்கள் இருக்கும். கிராமக் கோயில்கள் மரங்களுடன் தொடர்புடையனவாக உள்ளன. மரங்கள் வளமைக்குறியீடாகக் கருதப்படுகின்றன. பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வங்கள் நீர் நிலைக்கருகில் இருக்கும். மக்களது வாழ்வில் நீர் முக்கிய பங்கு வகிப்பதால் நீர் நிலைக்கருகிலேயே வைத்துள்ளனர்.

**உருவ அமைப்பு:**

நாட்டுப்புறத் தெய்வ உருவ அமைப்பை ஏழு வகையாகப் பகுத்துக் காணலாம்.

1. மரத்தையே தெய்வமாக வழிபடல், இதனின் எச்சமாகத்தான் பெருங்கோவில்களில் ஸ்தலவிருட்சத்தைக் காண்கிறோம்.

2. வடிவமற்ற கல்
   - தரையில்
   - மரத்தின் கீழ்
   - மாடத்தின் மேல்

3. வேல், சூலம், கத்தி

4. பீடங்கள்

4.1 சதுரமான மண் பீடம்

4.2 உயரமான வடிவமுடைய பீடம்

4.3 உயரமான வடிவமுடைய பீடத்தில் தெய்வ உருவம் வரைதல்

4.4 உயரமான வடிவமுடைய பீடத்தில் முக உருவம்

4.5 உயரமான வடிவமுடைய பீடத்தில் முழு உருவம்

4.6 உயரமான வடிவமுடைய பீடத்தில் கல் சிலைகள்

5. மாடத்தில் விளக்கு வைத்து வழிபடல்

6. பந்தல் அல்லது ஓடு போன்ற அமைப்பு கொண்ட தெய்வ உருவங்கள்

6.1 மண் உருவம்

6.2 மர உருவம்

6.3 கல் உருவம்

7. கோயில் போன்ற அமைப்புடைய இடத்திலுள்ள தெய்வ உருவங்கள்

7.1 மண்ணாலான உருவம்

7.2 கல்லாலான உருவம்

7.3 செம்புப்படிய உருவம் அல்லது வெண்கலச் சிலை உருவம்

**வழிபாட்டு முறைகள்:**

நாட்டுப்புறத் தெய்வங்களுக்குக் கொண்டாடப்படும் விழாவைத் திருநெல்வேலி மாவட்டத்தில் 'கொடை' என்றும் மற்ற மாவட்டங்களில் 'பொங்கல் வைத்தல்' அல்லது 'சாமி கும்பிடுதல்' என்றும் அழைக்கின்றனர். வழிபாட்டு முறைகள் தெய்வத்திற்குத் தெய்வம் வேறுபடுவதுண்டு. திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு முறைகள் மற்ற மாவட்டங்களினின்றும் வேறுபட்டு நிற்கின்றன. ஆண் தெய்வங்களுக்கு வெள்ளிக்கிழமையும் பெண் தெ்யவங்களுக்குச் செவ்வாய்கிழமையும் கொடை நடைபெறும். இம்மாவட்ட வழிபாட்டு முறையை மிகமிகச் சுருக்கமாகக் காண்போம்.

1. ஊர்க்கூட்டம்

2. கால் நாட்டுதல்

3. விரதமிருத்தல்

4. குடி அமைப்பு

5. காப்பு கட்டுதல்

6. கொடை நிகழ்ச்சிகள்

7. மத்தியானப் பரண்

8. சாமக் கொடை

9. திரளை எறிதல்

10. படைப்பு

11. பரண் வெட்டு

12. இரத்தத் பலி

மற்ற மாவட்ட நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு முறைகள் திருநெல்வேலி மாவட்ட வழிபாட்டு முறையினின்றும் வேறுபடுகின்றன. மற்ற மாவட்ட வழிபாட்டு முறைகளில் வேற்றுமைகள் இருப்பினும் அவற்றில் ஓர் ஒற்றுமையைக் காண்கிறோம். வழிப்பாட்டு முறைகள் ஊருக்கு ஊர் தெய்வத்திற்குத் தெய்வம் வேறுபடுவதைக் காண்கிறோம்.

மழை இல்லாக் காலத்தில் மழை வேண்டியும் விளைச்சல் பெருகவும் நோய்நொடி வராதிருக்கவும் பகை ஏற்படின் பகைக்குப்பின் சமரசமுயற்சியாகவும் சாமி கும்பிடுவது உண்டு. சாமி கும்பிடுவது என முடிவு செய்து விட்டால் பல்லி சகுனம் கேட்பர். பூக்கட்டிப் பார்ப்பர். நல்ல சகுனம் கிடைத்த பின்பு ஊர் சாற்றுவார்கள். கோயில் கும்பிடுவதற்கு அடையாளமாகக் காப்பு கட்டுவர்.

சாமி கும்பிடுவதற்கு வீட்டுவரி போடுவர். சில இடத்தில் தலைக்கட்டு வரி போடுவர். இதற்கிடையில் மேளக்காரருக்கும் குசவர்க்கும் அச்சாரம் கொடுப்பர். கோயில் முன்பும் ஊரின் நடுவிலும் பந்தல் போடுவர். நேர்த்திக்கடன் உள்ளோர் விரதமிருப்பர்.

சாமி கும்பிடும் நாளன்று மண்ணால் செய்த தெய்வ உருவச்சிலையைக் கொணர்ந்து கண் திறப்பர். சிலையைக் கோயில் வைத்தவுடன் கிடாவெட்டிப் பொங்கல் வைப்பர். பொங்கல் வைத்து தேங்காய் பழம் வைத்து சாமி கும்பிடுவதைச் 'சிறப்பு நடத்துதல்' என்பர். பின்னர் மாவிளக்கு, முளைப்பாரி கொண்டு வருவர். முளைப்பாரியைச் சுற்றிப் பெண்கள் கும்மியடிப்பர். நேர்த்திக்கடன் உள்ளோர் நேர்த்திக்கடன் செலுத்துவர். கவர் குத்தி ஆடுவர் சிலர். மரத்தொட்டில் செய்து கோயிலில் வைப்பர். நேர்த்திக்கடனுக்காக மொட்டையடிப்பதும், காணிக்கைச் செலுத்தலும் அக்னிச் சட்டி எடுப்பதும் உண்டு. சில இடங்களில் 'தீக்குழி' இறக்குவதும் உண்டு.

மறுநாள் காலையில் கிடாவெட்டி ரத்தத்தைப் பிடித்து சோற்றில் தேய்த்து சோற்றுத் திரளையைக் காவு கொடுப்பர். இஃது மயானத்தில்

நடைபெறும். சுடலைமாடன் கோயிலில் பன்றியைப் பலியிடுவர். பலியிட்ட பின்பு அனைவருக்கும் விருந்து அளிக்கப்படும். குழந்தைகளுக்குக் காதுகுத்திப் பெயர் வைப்பர். மாலையில் பள்ளயம் பிரிப்பர். அன்றிரவு கலை நிகழ்ச்சியோ, நாடகமோ நடைபெறும். இதில் கிராமப் பெருந்தனக்காரரும் கிராமப்பூசாரியும் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

காணிக்கை செலுத்தல், அங்கமளித்தல், காவடி எடுத்தல், கரகமெடுத்தல், பால்குடம் எடுத்தல், மொட்டையடித்தல், மிருகங்களை நேர்ந்து விடல் போன்ற சடங்குகள் உண்டு. சிறு தெய்வங்களுக்குக் கருவாடு, சுருட்டு, கஞ்சா, சாராயம் முதலியவற்றைப் படைப்பது உண்டு. சில தேவதைகளுக்கு ஆடு, கோழி, பன்றி பலியிடுவதுண்டு. சங்க கால மக்கள் பசுவினைப் பலியிட்டதாக அகநானூறு மூலம் அறிகிறோம். பின்னர் எலுமிச்சை, பூசணி கொண்டுப் பலி கொடுப்பதைக் காண்கிறோம். உயிரில் பலி தொடங்கிய கால கட்டத்தில் இம்மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். நேர்த்திக்கடன் நேர்ந்தோர் தெய்வத்தைப் போன்ற உருவம் செய்து நேர்வதுண்டு. பொங்கல், சித்திரை நாள், ஆடி, கார்த்திகை நாட்களில் கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுவர். சாமி கும்பிடும் நாட்களில் கரகமெடுத்தல், காவடி எடுத்தல், நையாண்டி மேளம், கணியன் ஆட்டம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். திருநெல்வேலி மாவட்டக் கொடை விழாவில் கணியன் ஆட்டமும் வில்லுப்பாட்டும் விழாவோடு இணைந்ததாகும். இவ்விரண்டும் இல்லாமல் கொடையே கிடையாது. கணியன் ஆட்டமும் வில்லுப்பாட்டும் வழிபாட்டுச் சடங்குடன் இணைந்து விட்டன. திருநீறு, குங்குமம், பூ, தீர்த்த நீர், வேப்பிலை, துளசி முதலியவற்றைக் கோயில் பிரசாதங்களாக வழங்குவதுண்டு. விழாக்காலங்களில் சாதி வேறுபாடின்றி அனைவரும் பங்கெடுப்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் செல்லும் மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்குத் திருவிழா நடைபெறும். சில தெய்வங்களுக்குத் தேர்த்திருவிழா நடைபெறும். மாரியம்மனுக்குத் தீமிதி விழா நடைபெறுகின்றது. திருவிழாக்களில் மாவிளக்குப் போடல், செடல் குத்திக் கொள்ளல், தீ மிதித்தல், பாடை கட்டி இழுத்தல், வேம்பாடடை தரித்தல் போன்ற வேண்டுதல்கள் நிறைவேற்றப்படும். திரௌபதியம்மன் கோவில் விழாவில் தெருக்கூத்து நடைபெறும். வீரபாண்டி மாரியம்மன் விழாவில் மட்டும் தாவணி இருக்கும். திருவிழாக்களின் போது சந்தை (Fair), கடைகள் போடப்படுவதையும் காண்கிறோம். நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு

மக்களின் எண்ணங்களையும் நம்பிக்கையும் வழிபாட்டு முறைகளையும் தொன்மை சமயத்தின் கூறுகளையும் பிரதிபலித்து நிற்பதைக் காண்கிறோம்.

நாட்டுப்புற மக்களின் வாழ்வில் ‘ஏற்படும் இன்ப துன்பங்களுக்கும் நோய்நொடிக்கும் ‘நாட்டுப்புறத் தெய்வங்களையே தஞ்சமடைகின்றனர். படையல்களும் பலியும் இட்டுத் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். விழா எடுப்பதன் மூலம் உள்ளத்திற்கு மகிழ்வும் உறவுக்குத் தொடர்பும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டை நன்கு ஆராயின் தொன்மை மதத்தைப் பற்றி (Primitive religion) நன்கு அறிந்து கொள்ளலாம்.

**நாட்டுப்புறத் திருவிழாக்கள்:**

மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்த போதிலும், அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களும் பண்டிகைகளும் ஆகும். மனிதன் ஆண்டு முழுவதும் உழைத்து ஓய்வு பெற்ற நேரத்தில் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவது இயல்பு. தமிழகத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாகத் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. சமூக மாற்றத்தினால் புதிய திருவிழாக்களுகம் ஏற்பட்டு அவற்றைக் கொண்டாடியும் வருகின்றனர். இத்தகைய விழாக்கள் மூலம் கலையாற்றலும், கலையனுபவமும் மேலோங்கி வளர்கின்றன. கலைகளின் வளர்ச்சிக்கே திருவிழாக்கள்தாம் மூலக்காரணம் எனின் மிகையாகாது.

கலைகள் அனைத்தும் கோயில்களோடும் விழாக்களோடும் இணைந்து விட்டன. கோயில்கள் கலைக் கூடங்களாகத் திகழ்கின்றன. எனவே தான், கோயில் என்றாலே கோயில் என்றாலே திருவிழா; திருவிழா என்றாலே கோயில் என்ற நினைவு அனைவருக்கும் வரும் திருவிழாக்கள் மதத்தின் கூறாக மட்டுமன்றி, கலைகளை வளர்ப்பனவாகவும் உள்ளன. திருவிழாக்கள் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கப் பயன்படுகின்றன. திருவிழாக்கள் வியாபாரத்தைப் பெருக்கவும் இன்றியமையாதனவாகின்றன. பொழுது போக்கு அம்சமும் திருவிழாக்களின் காணப்படுகின்றன. மக்களுடைய வாழ்வில் அவை ஒன்றிவிட்டன.

பிரிந்திருக்கும் குடும்பத்தார் மீண்டும் கூடுவதற்கு ஒரு வாய்ப்பைத் திருவிழாக்கள் நல்குகின்றன. தனிப்பட்டவர்களின் மகிழ்ச்சி, குடும்பத்தில் களிப்பு சமுதாயத்தின் குதூகலம். இவைதான் திருவிழாக்களின் குறிக்கோள்கள். இனி

நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் திருவிழாக்கள் பற்றிய செய்திகளை விரிவுபடக் காண்போம்.

**நாட்டுப்புற மக்களும் திருவிழாக்களும்:**

திருவிழாக்கள் மனமகிழ்ச்சியும் உள்ளக்கிளர்ச்சியும் உண்டாக்கிய போதிலும், குறிப்பாகவும் சிறப்பாகவும் பாமர மக்களுடைய பொருளாதாரத்தையும் செலவிடச் செய்கிறது. திருவிழாக்கள் வந்துவிட்டன என்றால் எவ்வளவோ பொருள்களை வாங்க வேண்டியும், கோயில்களுக்குக் காணிக்கை செலுத்த வேண்டியும், விருந்தினரைக் குறைவின்றி உபசரிக்க வேண்டியும் உள்ளது. கடன் வாங்கிச் செலவு செய்யவும் நேரிடுகிறது. முன் காலத்தில் ஆடம்பரமாக கருதப்பட்ட செலவுகள் இப்போது இன்றியமையாச் செலவுகளாகிவிட்டன.

திருவிழாக்களில் பெண், மாப்பிள்ளை ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதும் உண்டு. கிராம மக்களுக்கு இவைதான் திருமணத்திற்கு அடிகோலும் இடங்கள். ஏற்கெனவே சம்பந்தியாக உள்ளவர்களுடன் நல்லுறவை வலுப்படுத்திக் கொள்ளவும் திருவிழா வாய்ப்பாக உள்ளது. திருவிழாவுக்கு அவர்களை அழைத்து விருந்து படைப்பது வழக்கம். இடையே ஏற்பட்ட சிக்கல்களும் அப்போது அறுபட்டுப்போன உறவு புதுப்பிக்கப்பட்டு மங்கலம் உண்டாகும். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

கிராம மக்கள் கட்டுச்சோறு கட்டி, மாட்டு வண்டிகளில் கூட்டம் கூட்டமாக நெடுந்தூரங்களில் உள்ள ஊர்த்திருவிழாக்களுக்குப் புறப்பட்டுச் செல்வார்கள். பழந்தமிழ் நாட்டு அரசர்களும் அறச் செல்வர்களும் கட்டி வைத்துள்ள சத்திரங்களில் தங்குவார்கள்.

முக்கியமான திருவிழா நாட்களில் மழை பெய்யும் அல்லது மழைக் குணமாவது இருக்கும் என்பது பாமர மக்களின் நம்பிக்கை. திருவிழாக்களில் கலந்து கொள்பவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக இருக்க வேண்டும் என்றும், அந்த மரபை மீறினால் தனிப்பட்ட முறையிலோ அல்லது அந்த ஊர் முழுவதற்குமோ ஏதாவது கேடு நேரும் என்றும், பாமர மக்கள் அஞ்சுகிறார்கள். மாதவிடாய், பிள்ளைப்பேறு போன்ற தீட்டுக் காலங்களில் பெணகள் திருவிழாக்களில் கலந்து கொள்வதில்லை.

தமிழர்கள் திருவிழாக்களுக்காகத் தமிழ்நாட்டுக்கு வெளியேயும் தாராளமாகச் செல்லுகின்றனர். தமிழ்நாட்டில் நிகழும் திருவிழாக்களை மட்டும்தான் காணவேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு இல்லை. ஆந்திரப்பிரதேசத்தில் திருப்பதி - திருமலை, கேரளத்தில் குருவாயூர், சபரிமலை ஆகிய கோயில்களுக்கும் தமிழர்கள் திரளாகச் செல்லுகின்றனர்.

ஆடி, புரட்டாசி, மார்கழி, பங்குனி ஆகிய நான்கு மாதங்களிலும் திருமணங்களை நடத்தக் கூடாது என்பது தமிழர் மரபு. இந்தத் தடைக்குக் காரணம் என்னவாக இருக்கலாம்? மக்கள் அனைவரும் இந்த மாதங்களில் இறைவனுக்கு நடைபெறும் திருவிழாக்கள் செம்மையாக நிகழ்வதற்கே தங்கள் நேரத்தையும் பொருளையும் செலவிட வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு இருந்திருக்க வேண்டும். இந்நாளில் ஆடி, மார்கழி ஆகிய இருமாதங்கள் மட்டுமே திருமணத்திற்கு விலக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல்வேறுபட்ட நிலைகளில் நாட்டுப்புற மக்களும், திருவிழாக்களும் பற்றிய செய்திகளை அறியமுடிகின்றது.

**விழாக்களின் வகைகள்:**

**குடும்ப விழாக்கள்:**

ஒவ்வொரு குடும்பத்திலும் அவரவர் உறவினரோடு இணைந்து நடத்தும் சிறப்பு நிகழ்ச்சிகளைக் குடும்ப விழாக்கள் எனலாம். அதாவது குடும்பத்தில் நடக்கும் சுபநிகழ்ச்சிகள் யாவும் குடும்ப விழாக்களே. பிறந்த நாள் விழா, காதணி விழா, பூப்புனித விழா, திருமண விழா, வளைகாப்பு விழா முதலான விழாக்கள் குடும்ப விழாக்களில் அடங்கும். இக்குடும்ப விழாக்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் உறவினர்களை வரவழைத்து விருந்து வைத்து ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக்கூடி மகிழும் தன்மையைக் காணலாம்.

**சமுதாய விழாக்கள்:**

ஆடிப்பெருக்கு, தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்கள் அனைவரும் கொண்டாடி மகிழும் சமுதாய விழாக்கள் பல விழாக்களாக விளங்குகின்றன. அவ்விழாக்கள் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்வோம்.

❖ **ஆடிப்பெருக்கு:**

ஆடிமாதம் பதினெட்டாம் நாளில் காவிரிக் கரையில் வாழும் மக்கள் அனைவரும் காவிரித் தாய்க்குப் பெருவிழா எடுப்பர். மேலும், உழவர்கள் அனைவரும் 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பதற்கேற்ப உழவுத் தொழிலை ஆரம்பிக்கும் காலமாகும். ஆடி மாதம் காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். பதினெட்டாம் நாளில் ஆணும் பெண்ணும் காவிரித்தாயை வணங்கி வழிபடுவர். சில பகுதிகளில் புதிதாகத் திருமணமான மணமக்கள் தங்களது மணமாலைகளை ஆடிப்பெருக்கன்று ஆற்றிலோ, கடலிலோ விடுவர்.

இந்துக்களான பல சாதியினரும் அவரவர் வழக்கப்படி காவிரியை வழிபடுகிறார்கள். சில சாதியினர் களிமண்ணில் இறையுருவங்களைச் செய்து அவற்றுக்குக் குங்குமப்பொட்டு இட்டு, சந்தனம், ஊதுபத்தி, பச்சரிசி முதலியவற்றையும் வழங்குகிறார்கள். ஒரு நூலை, கணவனும், மனைவியும் இந்த நாளில் ஒருவருக்கொருவர் கட்டிவிடும் பழக்கமும் சில சாதிகளில் உண்டு. காவிரித்தாய்க்குக் காணிக்கையாக வளையல்களையும் கறுப்புநிறக் குமிழ் மணிகளையும் ஆற்றுக்குள் போடுவார்கள். வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்ட பிறகு, மக்கள் காவிரிக் கரையிலிருந்து அவரவர் வீட்டுக்குத் திரும்புவார்கள்.

சிலர் காலையில் காவிரியில் நீராடிய பிறகு காவிரிக்குப் பூவும் பாலும் வழங்குகிறார்கள். பிறகு தங்கள் இல்லங்களில் பாயசமும் வைத்து விருந்து உண்ணுகின்றனர். மாலையில் புத்தாடை உடுத்திக் கொண்டு பெண்களும் குழந்தைகளும் ஆற்றங்கரைக்குச் சித்திரான்னங்களுடன் சென்று காவிரியம்மனுக்குப் படைத்துத் தாங்களும் உண்டு பொழுது போக்கி மகிழ்ச்சியோடு வீடு திரும்புகின்றனர். பதினெட்டாம் பெருக்கைப் பெண்களும் குழந்தைகளும் மிகவும் ஈடுபாட்டுடன் கொண்டாடுகின்றனர்.

இந்த மங்கலநாளில் தேவையில்லாத பழைய ஓலைச் சுவடிகளை ஆற்றில் மிதக்க விடுவது மரபு. பல கோயில்களிலிருந்து கடவுளர் திருவுருவங்களை நடுப்பகல் அளவில் காவிரிக் கரையிலுள்ள மண்டபங்களுக்கு இந்த விழாவுக்காகக் கொண்டு வருவது வழக்கம்.

❖ **தீபாவளி:**

தீப ஒளியான தீபாவளியை நாட்டுப்புற மக்களைக் காட்டிலும் நகர்புற மக்கள் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அதிகாலையில் எழுந்து எண்ணெய்

தேய்த்துக் குளித்துப் புத்தாடை அணிந்து பட்டாசுகளை வெடித்து இனிப்புப் பண்டங்கள் செய்து தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

❖ **பொங்கல்:**

அறுவடை இனிது முடிந்ததை நினைவூட்டும் பொங்கல் திருவிழா சாதி மத வேறுபாடு இன்றி, தமிழர்கள் அனைவரும் கொண்டாடும் விழா ஆகும். இதுவே தமிழ்நாட்டின் மிகப்பெரிய விழா.

பொங்கல் நாளில் புதிய அரிசியைப் பொங்கி வெல்லம் முதலியவற்றுடன் சேர்த்துச் சர்க்கரைப் பொங்கலாகப் படைத்து உண்பதும், மறுநாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடி மாடுகளுக்கு நன்றி கூறுவதும் மரபு.

ஒவ்வொரு தாயும் தன்னுடைய மணமான பெண் மக்கள் வீட்டுக்குப் பொங்கல் பானை, அரிசி, மஞ்சள் கொத்து, வெல்லம், கரும்பு முதலியவற்றை அனுப்பக் கடமைப்பட்டிருக்கிறாள். இதனைப் 'படிகொடுத்தல்' என்பர்.

பொங்கல் நாளன்று உத்தராயணம் ஆரம்பமாகிறது. அதாவது அன்று சூரியனின் வடக்கு நோக்கிய பயணம் தொடங்குகிறது. எனவே, சூரியனுக்கு அன்று காலையில் சூரியோதயத்தில் பொங்கல் படைப்பது வழக்கம். புதிய பானையில் மஞ்சள் கொத்தைக் கட்டி அடுப்பில் ஏற்றிப் பாலும் தண்ணீரும் ஊற்றிய பிறகு, புது அரிசியை இட்டுச் சமைப்பார்கள். கரும்பு, வள்ளிக்கிழங்கு, பூசணிக்காய் முதலியவற்றை இலையில் பரப்பி வைப்பார்கள்.

புதிய அரிசியை பானையில் இட்டு அரிசி நன்கு வெந்தபிறகு, நறுமணப் பொருள்களைச் சேர்த்து அதைச் சுவையுள்ள பொங்கல் ஆக்குவர். 'பொங்கலோ பொங்கல்' என்ற முழக்கத்திற்கிடையே, பொங்கலை இலைகளில் வைத்துச் சூரியனுக்குப் படைப்பர். சூடம் ஏற்றி இறைவனின் அருளை வேண்டுவர். அன்று சந்திப்பவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பார்த்து, 'பால் பொங்கிற்றா' என்று கேட்டுக் கொள்ளுவது மரபு. பொங்கல் வாழ்த்துக் கூறும் இம்முறை பின்பு கவினுற அச்சிட்ட பொங்கல் வாழ்த்து அட்டைகளைப் பரிமாறிக் கொள்ளும் நாகரிகமாக மாறி தற்போது செல்பேசிகளில் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கம் வந்துவிட்டது.

பொங்கல் வரவு செலவுத் திட்டத்தில் வேலைக்காரர்களுக்கு புத்தாடை வழங்குவது ஒரு முக்கியமான நிகழ்வு. இந்த மாதத்தில் விதை மற்றும்

விளைபொருள்கள் கைவசமிருப்பதால், அவற்றை விற்று, தாராளமாகச் செலவிட வேண்டும் என்ற மனப்பான்மை எல்லோர் உள்ளங்களிலும் குடி கொண்டிருக்கிறது. இவ்விழாவையொட்டி வீடுகளை வெள்ளை அடிப்பதும் சுத்தப்படுவதும் மரபு.

ஆண்டுதோறும் தை முதல் நாளில் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. தைப்பொங்கல் நாள் தொடங்கிய மூன்று நாட்களும் இப்போதெல்லாம் தமிழ் விழாவாக, இலக்கிய உரைகள், பட்டிமன்றம் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்படுகின்றன.

மாட்டுப்பொங்கலன்று பசுக்களும் காளை மாடுகளும் நன்கு குளிப்பாட்டப் பெறுகின்றன. பிறகு அவற்றுக்கு பூ, குங்குமம் முதலியவற்றால் அலங்காரம் செய்து, கொம்பில் புதுத்துணி கட்டி வண்ணம் தீட்டி பொங்கல் சோறு படைத்து அவற்றை வணங்குவது மரபு. இம்மரபு இன்று கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

❖ **மதுவெடுப்பு விழா:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரளிக் கோட்டை என்னும் கிராமத்தில் ‘மதுவெடுப்பு’ என்னும் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் இவ்வூரில் வாழும் அனைத்துச் சாதி மக்களும் கலந்து கொள்கின்றனர். எட்டு நாட்கள் கொண்டாடப்படும் இவ்விழாவானது பங்குனி மாதம் கடைசி வாரத்தில் அல்லது சித்திரை மாதம் முதல் வாரத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்கி அடுத்த செவ்வாய்க்கிழமை முடிய எட்டு நாட்கள் கொண்டாடப்படுகிறது. இந்த விழா முடியும் வரை யாரும் ஊரை விட்டு வெளியே வெளியூர் செல்லுதல் கூடாது. விழாவின் முதல் நாள் மது ஓடு என்னும் பாத்திரத்தில் பசுமாட்டுச் சாணமாகிய எருவையிட்டு நீர் தெளித்து நவதானியங்களைத் தூவுவார்கள். இவை போடப்படும் மது ஓடு, ஓட்டைகள் உள்ளதாகவும் காற்றோட்டமுள்ளதாகவும் அமைந்திருக்கும்.

ஊர்ப்பொது இடத்தில் தானியங்கள் இடப்பட்ட மது ஓடு வைக்கப்படும். பிறகு பயபக்தியோடு வீட்டிற்கு கொண்டு வந்து நடுவீட்டில் வைத்திருப்பார்கள். இதற்குத் தினமும் நீர் தெளித்துப் பாதுகாத்து வருவர். அம்மை வந்த வீட்டில் இருப்பது போன்று எட்டு நாட்களும் தாளிப்புச் சத்தம் வராமல் சமையல் செய்வார்கள். அசைவ உணவும், பயறு வகைகளும்

உண்ணமாட்டார்கள். வெளி ஆட்கள் யாரையும் உள்ளே விடமாட்டார்கள். மிகவும் சுத்தமாக மது ஓட்டைப் பாதுகாத்து தினமும் நீர் தெளித்து வருவார்கள்.

நவதானியங்கள் முளைத்து நன்கு செழித்து வளரும். அதிகமாக வளர்ந்திருப்பதால் வண்ணார் மது ஓட்டைச் சுற்றி மறைப்புக் கட்டுவார். இதனை மாரியம்மா என்றே அழைப்பார்கள். ஒவ்வொரு நாளும் பொது இடத்திற்கு அம்மாவைக் கொண்டு போய் வைத்துத் தன்னன்னாப் பாட்டுப்பாடி பெண்கள் மகிழ்ந்த பிறகு வீட்டிற்குக் கொண்டு வருவார்கள். எட்டாவது நாள் காலையிலிருந்து எல்லோரும் உணவு உண்ணாமல் விரதம் இருப்பார்கள். உறவினர்களை வரவழைப்பார்கள். அன்று அசைவ உணவு வகைகளும் எல்லா விதமான காய்கறி வகைகளும் சமைத்து விருந்து வைப்பார்கள்.

அன்று மாலை அம்மாவை அணிகளாலும் குடைகளினாலும் மலர்மாலை புத்தாடையினாலும் அலங்காரம் செய்வார்கள். பிறகு மது எடுப்பு நடைபெறும். ஊரிலுள்ளவர்களை சாதி முறைப்படி அம்பலக்காரரின் தாயாரில் தொடங்கி அனைத்து மக்களும் வரிசையாக நின்று ஊர்ப் பொது இடத்தில் அம்மாவை வைப்பார்கள். அன்று இரவு காவடியாட்டம், கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் என்று பல விதமான கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மறுநாள் காலை அம்மாவின் அலங்காரத்தைக் கலைத்து விட்டு நீரில் கொண்டு போய் போட்டு விட்டு வருவார்கள். அன்று இரவு தெருக்கூத்தோ நாடகமோ நடைபெறும். இவ்விழாவின் போது ஊரிலுள்ள அனைத்து மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி இருப்பர். விழாநாள் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும். சிறியவர் முதல் பெரியவர் வரையிலும் ஆண்கள் முதல் பெண்கள் அனைத்து மக்களும் பலவிதமான விளையாட்டுகளை விளையாடிக் கொண்டும் பாடல் பாடிக்கொண்டும் இரவு நேரத்தில் விழித்திருந்தும் மகிழ்வார்கள். தென் மாவட்டங்களில் முளைபாரி என்றும் முளைப்பாரிகை என்றும் இச்சடங்கு வழக்கில் உள்ளது.

❖ **கார்த்திகை தீபம்:**

தொல்காப்பியர் காலத்திலிருந்து தமிழ்நாட்டின் கார்த்திகை தீபத்திருவிழா கொண்டாடப் பெறுகிறது. இவ்விழாவில் வீடுதோறும் கிளிஞ்சல் சிட்டிகளில் விளக்கேற்றி வைத்து அலங்கரிப்பார்கள். கார்த்திகை மாதம்

முழுவதும் விளக்கேற்றுபவர்களும் உண்டு. ஏனையோர் பரணி, கார்த்திகை ஆகிய இரு நாட்களிலும் விளக்கு ஏற்றி வைப்பார்கள். விழாவன்று சொக்கப்பனைக் கொளுத்தியும், வெடிகளை வெடித்தும் சிறுவர் சிறுமியர் மகிழ்வார்கள்.

இவ்விழாவில் தங்கள் வீட்டில் விளக்கேற்ற, தமிழ்நாட்டு வைணவர்கள் தாங்களே விளக்குகளைத் தயாரிப்பார்கள். விலைக்கு வாங்க மாட்டார்கள். இதன் பெயர் பொறிவானம், கவட்டைக்கம்பு, துணி, துணிக்கயிறு, மரத்தூள், கொங்கனைக் கோந்து, மருதங்காய் ஆகியவற்றைப் பயன்படுத்தி பொறிவானம் செய்வார்கள். இவற்றின் சேர்க்கையால் பொறிவானம் நிறைந்த ஒளி தருகிறது. குலாலர் செய்யும் யானை விளக்குகளை வாங்கி, தங்கள் பெண் மக்களுக்குத் தாய்மார்கள் அனுப்புகிறார்கள்.

இவ்விழாவானது, வேறு எல்லாத் தலங்களையும் விடத் திருவண்ணாமலையில் மிகப்பெரிய அளவில் கொண்டாடப்பெறுகிறது.

இவ்வாறு, பல்வேறு சமுதாய விழாக்கள் நாட்டுப்புற மக்களிடையே நிலவி வருவதை அறியமுடிகிறது.

**கோயில் விழாக்கள்:**

கோயில் என்றால் திருவிழா இருக்கும். அதுபோல திருவிழா என்பதும் கோயில் தொடர்பின்றி நிகழாது. தமிழ்நாடு, கோயில்கள் மலிந்த பகுதி. அதனால்தான் சமயச் சார்பு இல்லாத மாநில அரசு கூட, அதன் இலச்சினையில் கோயில் கோபுரத்தின் உருவத்தைப் பொறித்து வருகிறது. கோயில் கோபுரத்தின் பகுதியை இலச்சினையாகக் கொண்டு இயங்கும் இந்திய மாநிலம் தமிழ்நாடு ஒன்றே.

கோயில் திருவிழாக்கள் தமிழ்நாட்டைப் போல வேறு எங்கும் இவ்வளவு அதிகமாகவோ, விரிவானதாகவோ கொண்டாடப்படுவதில்லை என்று சொல்லலாம். பெரும்பாலான திருவிழாக்கள் புரட்டாசி மாதத்திலும், அறுவடை முடிந்து மக்கள் ஓய்வாக உள்ள பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களிலும் நிகழ்கின்றன. ஏகாதசி, கந்த சஷ்டி திருவிழாக்களில் பக்தர்கள் நோன்பு இருப்பார்கள். ஏனைய திருவிழாக்கள் அனைத்திலும் வயிரார உண்டு மகிழ்வர்.

இனி, கோயில் திருவிழாக்களில் சிலவற்றைக் காண்போம்.

### ❖ சித்திரைத் திருவிழா:

சித்திரை, தமிழர்களுக்கு முதல் மாதம். இம்மாதத்தில் சித்திரா பௌர்ணமி என்ற விழா, முழு நிலா நாளில் பல கோயில்களில் கொண்டாடப்படுகிறது. எனினும் இத்திருவிழாக்குரிய புகழ்பெற்ற தலம் மதுரையே ஆகும்.

சித்திரா பௌர்ணமி அன்று, மதுரையிலும் சுற்றுவட்டாரத்திலும் உள்ள கடவுளர் திருமேனிகள் அலங்கரிக்கப்பட்டு வைகைக் கரைக்கு எடுத்துச் செல்லப்படும் நூறாயிரக்கணக்கான மக்கள் இவ்விழாக்களில் கலந்து கொள்வர். இசை நிகழ்ச்சிகளை எண்ணி முடியாது. மதுரையில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் அன்னை மீனாட்சிக்கும் சிவபெருமானும் நடைபெறும் திருமண விழாவாக இத்திருவிழா அமைவதால், மக்கள் எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.

ஏறத்தாழ 100 கி.மீ. சுற்றளவிலிருந்தும் மக்கள் இந்தத் தெய்வத் திருமணத்தைக் காண மதுரைக்கு வருவார்கள். அந்நாளில் ஓர் இடத்திலும் ஒரு வேலையும் நிகழாது. அனைவரும் மீனாட்சியம்மனின் கல்யாணக் கோலத்தைக் காண்பதையே தம் கண் பெற்றப் பேறாக நினைப்பார்கள். மதுரை மாவட்டத்தில் உழவர்களுக்கு இது மிக முக்கியமான காலகட்டம். பண்ணை வேலையாட்களுக்குச் சம்பளம் பேசும் போது, ‘சித்திரைத் திருவிழா முதல் அடுத்த சித்திரைத் திருவிழா வரை’ என்றுதான் ஓராண்டுக் காலத்தைக் கணக்கிட்டுக் கொள்வர். வைகை ஆற்றில் அழகர் இறங்குகிற நாளில் மதுரைக்கு மணப்பெண்ணின் அழகு வந்து விடும் ‘ஆற்றைக் கண்டாயோ? அழகரைப் பார்த்தாயோ?’ என்ற பழமொழியும் உண்டு.

### ❖ வைகாசி விசாகம்:

வைகாசி, தமிழ் ஆண்டின் இரண்டாவது மாதம். இம்மாதத்து முழு நிலா நாள், சிவபெருமானின் குமாரனான சுப்பிரமணியருக்கு உரிய நாள். முருகன் கோயில்களில் விசாகம் பெரிய அளவில் கொண்டாடப்படும். திருச்செந்தூரிலும், அடுத்தப்படியாகத் திருப்பரங்குன்றத்திலும், பழனியிலும், இத்திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. பால்காவடி முதலிய இதனோடு ஒட்டிய சடங்குக்

காட்சிகளும் காணத்தக்கன. இந்த நாள் அறிவொளி பரப்பும் நாளாகவும் கருதப்படுகிறது.

வைகாசி விசாகத்தன்றுதான் கௌதமபுத்தர் பிறந்தார். அவர் ஞானம் பெற்றதும் வைகாசி விசாகத்தில்தான் அவர் நிர்வாணம் அடைந்ததும் வைகாசி விசாக நாளிலேயே. எனவே, வட இந்தியாவில் வைகாசி விசாகம் 'புத்த பூர்ணிமா' என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

❖ **வைணவத் திருவிழாக்கள்:**

காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் நிகழும் மிகப்பெரிய விழா கருட உற்சவம். ஒரு கருட உற்சவம் கூடத் தவறாமல் பார்த்து வருவது என்ற மன உறுதி படைத்த பக்தர்கள் தலைமுறை தலைமுறையாக உள்ளனர்.

ஆனி மாத முழுநிலா தமிழில் கேட்டை நட்சத்திரத்தன்று வரும். இந்த நாளில் ஸ்ரீரங்கத்தில் ஜேஷ்ட அபிஷேகமும் மன்னார்குடியில் தெப்பத் திருவிழாவும், அழகர் கோயிலில் படி உற்சவமும் கொண்டாடப்படுகின்றன.

❖ **ஆவணி மூலம்:**

ஆவணி மாதத்தில் வரும் மூல நட்சத்திரத்தன்று இத்திருவிழா மதுரையில் கொண்டாடப் பெறுகின்றது. சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்து வைகையின் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திய காட்சியைக் கண்டு இன்புறலாம். இவ்விழாவில் பக்தர்கள் அனைவரும் பிட்டு உண்பதும், ஒரு வழக்கம். எனவே, இத்திருவிழாவைப் பிட்டுத்திருவிழா என்றும் சொல்லுவார்கள்.

❖ நவராத்திரி:

புரட்டாசி மாதம் நவராத்திரி விழாவால் சிறப்பு பெறுகிறது. இந்த விழா, விஜயநகரப் பேரரசர்களாலும் அவர்களுடைய சிற்றரசர்களாக இருந்த மதுரை நாயக்க மன்னர்களாலும் தமிழ்நாட்டில் பரப்பப்பட்டது. அவர்களுடைய தொடர்பு இராமநாதபுரம் சேதுபதி போன்ற குறுநில மன்னர்களின் அரண்மனைகளில் இவ்விழா இன்றும் கொண்டாடப் பெறுகின்றது.

நவராத்திரி விழாவில் தமிழ்நாட்டுக் கைவினைக் கலைஞர்களின் பொம்மைகள் செய்யும் ஆற்றல் வெளிப்படுகிறது.

### ❖ கந்த சஷ்டி:

மாதம் இருமுறை ‘சஷ்டி’ வரும். ஆயினும் ஐப்பசியில் வரும் கந்த சஷ்டி தமிழ்நாடெங்கும் பெரிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. முருகன் மலையினின்றும் இறங்கி, நான்கு திக்குகளிலும் அசுரர்களைக் கொன்று வெற்றி வாகை சூடி மலைக்குத் திரும்பும் காட்சியைப் பழனியில் காணலாம். இது ‘சூரசம்ஹாரம்’ எனப்படும். ஏழாம் நாளில் முருகப் பெருமான் வள்ளியை மணந்து கொள்வார். முருகனின் அறுபடை வீடுகளான ஆறு கோயில்களிலும் இவ்விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

### ❖ வைகுண்ட ஏகாதசி:

மார்கழி மாதம் வளர்பிறை தொடங்கி இவ்விழா, இருபது நாட்களுக்கு ஸ்ரீரங்கத்தில் கொண்டாடப்படுகிறது. பத்தாம் நாள் நடைபெறும் மோகினி அவதாரம் அல்லது நாச்சியார் கோலம், பதினோராம் நாள் நடைபெறும் ஏகாதசி ஆகியவற்றுக்கு மக்கள் லட்சக்கணக்கானோர் கூடுவார்கள். ஆழ்வாரான திருமங்கைஆழ்வார் தொடங்கி வைத்த திருவாய்மொழி விழாவுடன் இருபதாம் நாளில் வைகுண்ட ஏகாதசித் திருவிழா முற்றுப் பெறுகிறது.

பதினோறாம் நாளிலும் அதன் பிறகு ஒவ்வொரு நாளும் அரங்கநாதப் பெருமான் பரமபத வாயில் வழியாக வந்து உணவுப்பண்டங்கள் பெற்று, துறவிகளை வாழ்த்தி, ஊர்வலமாகக் கருவறைக்குத் திரும்புகிறார் என்ற புராணக்கதை உண்டு.

### ❖ தைப்பூசம்:

தை மாதத்தில் நிகழும் பெரிய திருவிழா தைப்பூசம். அதற்கு உரிய இறைவன் முருகன். உரிய சிறப்புத்தலம் பழனி. ஏனைய தலங்களில் திருத்தணிகையும் முருகனின் பிற படைவீடுகளும்.

இவ்விழாவும் முழுநிலா நாளில் நிகழும் முருகனடியார்கள் அவன் புகழ்பாடி, காவடி தாங்கி, கரகம் ஆடி, நெடுந்தொலைவு கால்நடையாக வருவார்கள்.

இதுபோன்ற ஒரு விழா பங்குனி மாதத்தில் மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் எடுக்கப்படுகிறது. இது, சென்னை மாநகரின் குறிப்பிடத்தக்க விழாக்களில் ஒன்று.

❖ **மகா சிவராத்திரி:**

மாசி மகத்து அமாவாசை இரவுக்கு மகா சிவராத்திரி என்று பெயர். மாதந்தோறும் சிவராத்திரி வருவது உண்டு. ஆனால், மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி, சிவன் அடியார்களுக்கு மிகவும் புனிதமானது. இந்த நாளில்தான், தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலினைக் கடைந்ததால் உண்டான கொடிய நஞ்சினை சிவபெருமான் உண்டு, உலகத்தைக் காப்பாற்றினார் என்பது புராண வரலாறு. இக்காரணத்தால் இந்நாள், 'மகா' என்னும் அடைமொழி பெற்று மகா சிவராத்திரி ஆயிற்று.

சிவன் கோயில்கள் அனைத்திலும் மகாசிவராத்திரி விழா உண்டு. சைவ சமயத்தில் நம்பிக்கையுடைய ஒவ்வொருவரும், தாங்கள் தங்கள் இல்லங்களில் சிவனை நினைத்து இந்நாளில் இரவெல்லாம் விழித்திருந்து, 'ஓம்' நமசிவாய என்று ஒலித்தும், சிவன் புகழ் பாடியும், வழிபடுகின்றனர். மறுநாள் காலையில் குளித்து, மீண்டும் சிவனை வழிபட்டுத் தங்கள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்கின்றனர். மகாசிவராத்திரி நாளில் இரவில் சிவன் கோயில்களில் விளக்குகள் ஏராளமாகப் போடப்பட்டிருக்கும். அன்று இரவு பன்னிரெண்டு மணி நேரமும் மூன்று மணிக்கு ஒரு தடவையாக, நான்கு காலப்பகுதிகளில் நான்கு வகையாக வழிபாடு நடைபெறும். முதல் காலத்தில் பால், அடுத்து தயிர், பிறகு வெண்ணெய், நான்காவது கால்பகுதியில் தேன் ஆகியவற்றால் சிவபெருமான் உருவத்திற்கு அபிஷேகம் செய்வார்கள். மதுரையும் இராமேஸ்வரமும் மகாசிவராத்திரிக்கு முக்கியமான தலங்களாக உள்ளன.

❖ **பங்குனி உத்திரம்:**

பங்குனி மாதத்தில் தமிழ்நாட்டுக் கோயில்கள் எல்லாவற்றிலும் இறைவன் இறைவி திருமணம் நிகழும் இந்த மாதத்தில் முருகனுக்குப் பத்துநாள் உத்திரவிழாவும் நடைபெறும். நாட்டுப்புற மக்களுக்கு இதில் ஈடுபாடு மிகுதி. வேலைகள் முடித்து அவர்கள் ஓய்வாக இருப்பது இக்காலம். எனவே,

கோயில்களுக்கு நெல் காணிக்கை கொடுத்து, மகழ்ச்சியுடன் பங்குனி உத்திரப் பெருவிழாவில் பங்கு கொள்வர்.

பங்குனி உத்திரத்துக்கு மறுநாள் இடும்பன் விழாவாகக் கொண்டாடப்பெறும். சுப்பிரமணியருக்குத் கட்டுப்பட்டவனான இடும்பனுக்கும் பூஜைகள் நடத்திக் காணிக்கை வழங்குவர். அப்போது இடும்பனின் ஆவி பக்தர்கள் பலருக்குள் புகும் என்பர். பக்தர்கள் தங்களையே இடும்பன் தடியால் அடித்துக் கொண்டு வருங்காலத்தைப் பற்றிச் சில ஜோதிடங்கள் கூறுவர். இடும்பனே இவற்றைக் கூறியதாக மக்கள் நம்புகின்றனர்.

❖ **கிருஷ்ண ஜெயந்தி (ஸ்ரீ ஜெயந்தி):**

விஷ்ணு, கிருஷ்ணாவதாரம் எடுத்ததை முன்னிட்டு, பெருமாள் கோயில்களில் பிரார்த்தனைகள், பஜனைகளுடன் நடைபெறும் திருவிழா இது. பத்தாம் நாள் மிகவும் உற்சாகமாகக் கொண்டாடப்பெறும். பானை நிறைய மோர் நிரப்பி, பானையை மஞ்சள் துணியால் மூடி, ஒரு கம்பியின் உச்சியில் கட்டியிருப்பார்கள். ஓர் இயந்திரக் கருவியின் துணையால், வெளியே நிற்கும் ஒருவன் பானையை உயரத்தில் ஏற்றுவான். அல்லது நினைத்த போது கீழே இறக்குவான். வேடிக்கைப் பார்ப்பவர்கள், இந்தப் போட்டியில் கலந்து கொண்டு கிருஷ்ணன் போல உடை உடுத்தியிருப்பவர்கள் மீது பல வண்ணத் தண்ணீர் ஊற்றுவர். கயிற்றை இறக்குபவன் சற்று கவனக் குறைவாக இருக்கும் நேரத்தில், உயரத் தாவுபவன் வெற்றி பெற்றுவிடுவான்.

இவ்விழாக்களேயன்றி கம்பித் திருவிழா, மொத்தையன் திருவிழா, நடபாவி திருவிழா, கொடைத்திருவிழா, போலார் அம்மன் திருவிழா, மயானக் கொள்ளை, கூத்தாண்டவர் விழா போன்ற பல விழாக்களையும் நாட்டுப்புற மக்கள் கொண்டாடி மகிழ்வதை அறியலாம்.

**திருவிழாக்களும் சந்தைகளும்:**

திருவிழாக்களுடன் சேர்ந்து சந்தைகளும் கூடுகின்றன. நாட்டுப்புற மக்கள் தங்களிடமுள்ள உபரிப் பொருட்களை விற்கவும், தங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொள்ளவும், இந்தச் சந்தைகள்தான் பயன்படுகின்றன.

வாரந்தோறும் கூடும் சந்தைகளில் குறிப்பிடத்தக்கது. பொள்ளாச்சி சந்தை. இது வியாழக்கிழமைகளில் கூடும். ஆனைமலை, பாலக்காட்டுப்பகுதி, பொள்ளாச்சிப் பள்ளத்தாக்கு ஆகியவற்றின் விளைபொருள்கள் இந்தச் சந்தையில்தான் விலை போகின்றன. நெல், தானியங்கள், தேங்காய், மணிலாக் கடலை, எண்ணெய் வகைகள், காய்கறிகள், பதனிடப்பட்ட தோல், கோழி, துணிமணிகள் யாவற்றையும் பொள்ளாச்சிச் சந்தையில் மொத்தமாக வாங்கலாம். மலைப்பகுதிகளிலும், காடுகளிலும் பிடிக்கப்படும் யானைகளும் பிற விலங்குகளும் கூட இங்கு விற்பனையாகின்றன. தாயாரைத் தவிர எதை வேண்டுமானாலும் பொள்ளாச்சிச் சந்தையில் விலைக்கு வாங்கலாம் என்று பாமர மக்கள் பேசிக்கொள்வது வழக்கம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வடசேரியில் வியாழக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூடும் கனகமூலம் சந்தையும் மிகப்புகழ்ச்சி பெற்றது. இங்கு விற்பனையாகும் காய்கறிகள், தேங்காய், கறி - இலை வகைகள் ஆகியவற்றை வணிகர்கள் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பல இடங்களுக்கும் கொண்டு போகிறார்கள். இரணியலில் திங்கட்கிழமைகளிலும் கூடும் திங்கள் சந்தை முக்கியமானது. இந்தச் சந்தையில் கைத்தறித் துணிகளும், ஆடு மாடு கோழி ஆகியனவும், விற்பனை செய்யப்படுகின்றன.

கார்த்திகை தீபத் திருவிழாக்காலத்தில் திருவண்ணாமலையில் நான்கு நாட்களுக்குக் கால்நடைச்சந்தை கூடுகிறது. இது தமிழ்நாட்டின் பிரபலமான சந்தைகளுள் ஒன்றாகும். இந்தச் சந்தையில் சராசரி 20,000 கால்நடைகள் விற்பனையாகின்றன என்று கணக்கிடப்படுகின்றது. பசு, எருமை, காளை, ஆடு, கோழி, குதிரை என்னும் கால்நடை வகைகள் அனைத்தையும் இங்கு வாங்கலாம்.

மதுரையில் சித்திரைத் திருவிழாவினையொட்டிச் சந்தை கூடும். இது தென்மாவட்ட விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமானது. சுருக்கமாகச் சொன்னால், நாட்டுப்புற ஆடவர்களாலும் பெண்டிராலும், திருவிழா இல்லாத ஒரு பெரிய சந்தையையோ சந்தை இல்லாத பெரிய திருவிழாவையோ, எண்ணிப் பார்க்கக்கூட முடியாது.

**நாட்டுப்புற மக்களிடம் திருவிழாக்கள் பெறும் இடங்கள்:**

- நாட்டுப்புற மக்கள் சமயச் சார்புடைய திருவிழாக்களைப் பொழுது போக்குக்காக மட்டுமன்றிப் பயன் கருதியும் நடத்துகின்றனர்.

நாட்டுப்புற விழாக்கள் மூலம் நாட்டு மக்களின் பண்பாடும் நாகரிகமும் வெளிப்படுகின்றன.

- ❖ பழங்காலத்தில், மக்கள் இறைவனைத் தேடிச் சென்ற போதிலும் இறைவனும் மக்களைத் தேடிச் சென்றதற்குத் திருவிழாக்கள் சான்றாக உள்ளன.
- ❖ இந்தியாவிலேயே பெரிய தேர், தமிழ்நாட்டில் திருவாரூரில் உள்ளது. இதன் அழகினைத் 'திருவாரூர்த் தேரழகு' என்ற பேச்சு வழக்கினால் உணரலாம்.
- ❖ திருவிழாக்கள் மக்கள் ஒன்று கூடிப் பண்பாட்டு உறவு கொள்ளும் களமாக அமைகிறது.
- ❖ பெண், மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் முடிப்பதற்குத் தேர்வு செய்யும் களமாகவும் திருவிழாக்கள் அமைகின்றன.
- ❖ திருவிழாக்கள் பண்டமாற்று நிகழ்வாகச் சந்தைகளை அமைத்துத் தருகின்றன.
- ❖ மக்கள் தங்களுடைய மகிழ்ச்சியைப் பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்திக் கொள்ளத் திருவிழா வழிவகுக்கிறது.
- ❖ நாட்டுப்புறக் கலைகளின் பிறப்பிடமாக, இருப்பிடமாக, வாழ்விடமாக, வளர்விடமாகத் திருவிழாக்கள் திகழ்கின்றன.
- ❖ நாளும் உழைக்கும் நலித்த மக்களுக்கு நல்விருந்துண்ணும் நல்ல நாளாகத் திருவிழாக்கள் அமைகின்றன.
- ❖ ஒற்றுமையே மேம்படுத்திக் கொள்வதற்கும் மனித உறவுகளுக்கும் திருவிழாக்கள் வழிவகுக்கின்றன.
- ❖ கிராமியக் காதலின் வளர்ச்சிக்குத் திருவிழாக்கள் களமாக விளங்குகின்றன.
- ❖ தனிமனித வாழ்க்கை சமுதாய வாழ்க்கையாக மலர்வதற்குத் திருவிழாக்களே பெரிதும் துணைபுரிகின்றன.

இவ்வாறு பல்வேறு நிலைகளின் நாட்டுப்புற மக்கள் வாழ்வில் திருவிழாக்கள் பெறும் இடத்தினை அறிந்து கொள்ள முடிகின்றது.

# அலகு IV

# நாட்டுப்புற விளையாட்டுக்கள்

# அலகு IV

## நாட்டுப்புற விளையாட்டுக்கள்

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலைப் பற்றி ஆராய்வது நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புற விளையாட்டுக்கள் அவற்றின் ஒரு கூறாகும். நாட்டுப்புற மக்களின் நாகரிகத்தோடும் பண்பாட்டோடும் விளையாட்டு இணைந்ததாகும். விளையாட்டு என்பது வெளித்தூண்டல்களின்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். விளையாட்டை மனமகிழ்ச்சி ஊட்டும் செயல் என்பர். அவ்விளையாட்டு பொழுதுபோக்காக மட்டுமின்றி உடல்நலம், மனநலம் பேணுபவையாகவும் உள்ளது. விளையாட்டில் உடல் செயல்களின்றி உள்ளச் செயல்களும் இடம் பெறுகின்றன. குழந்தைகளின் இயல்புகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. வேலைக்கும் விளையாட்டுக்குமுள்ள வேற்றுமை செயல்படுபவனின் மனப்போக்கில் உள்ளது எனலாம், வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்று விளையாட்டைக் கூறுவர்.

மற்ற சமூக நிறுவனங்களைப் போல விளையாட்டும் வரையறுக்க இயலா மூலத்திலிருந்து தோன்றியதாகும். மனித இன வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் மனிதன் இன்றைய நிலையை எய்துவதற்குப் பல்வேறு நிலைகளில் பல்வேறு காலகட்டங்களைக் கடந்து முன்னேறியுள்ளான். வேட்டையாடி வாழ்ந்த காலத்திலும், நிலைத்த வாழ்வு வாழத் தொடங்கியபோதும் வேட்டை, போர் போன்றவற்றில் ஈடுபட்டான். அவற்றிற்காகப் பல பயிற்சிகளை மேற்கொண்டான். சமுதாய மாற்றத்தின் விளைவாக அப்பயிற்சிகள் காலப்போக்கில் விளையாட்டுகளாகப் பரிணமித்தன. விளையாட்டு எல்லா மனித இனங்களிலும் பண்பாட்டிலும் காணப்படும் ஒன்றாகும். கலை, மொழி, சமயம் போன்று விவரிக்க இயலாத சிக்கல் வாய்ந்ததொன்றாகும்.

விளையாட்டு என்பது அமைப்புடைய ஆட்டமாகவும் போட்டியை ஏற்படுத்துவதாகவும் வெற்றியை நிர்ணயிக்கும் விதிகளைக் கொண்டதாகவும் உள்ளன. விதிகள் பொதுவாகப் பலரால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்க வேண்டும். விளையாட்டின் அடிப்படை இயல்பு, விளையாட்டின் பயன், ஏன்

விளையாடுகிறோம் போன்றவற்றிற்குப் பதிலளிக்கும் வகையாக விளையாட்டு பற்றிய கொள்கை எழுந்தது.

1. மிகை ஆற்றல் கொள்கை
2. ஆயத்தகுக் கொள்கை
3. புனராக்கக் கொள்கை
4. பொழுதுபோக்குக் கொள்கை
5. காலுதற் கொள்கை
6. போட்டி மனப்பான்மை

**மிகை ஆற்றல் கொள்கை:**

இக்கொள்கையை 'ஷில்லரும்', 'ஹெர்பர்ட் ஸ்பென்ஸரும்' விளக்கியுள்ளனர். விளையாட்டின் மூலம் குழந்தைகளிடம் அதிக அளவுள்ள உடற்சக்தியையும், உள சக்தியையும் வெளியிடுகிறார்கள் என்பதே இக்கொள்கையின் சாரமாகும்.

**ஆயத்தக் கொள்கை:**

'கார்ல் குருஸீம்', 'மெல்பிரான்சும்' இக்கொள்கையை வலியுறுத்துகின்றனர். குழந்தைகளை விளையாட்டு வாழ்க்கைக்கு ஆயப்படுத்துகின்றது. இளம்பிராயம் விளையாட்டுக்காக அமைந்தது என்ற கூற்றே ஆயத்தக் கொள்கையின் அடிப்படையாகும். சிக்கல் மிகுந்த சமூக வாழ்க்கையில் பின்னர் ஈடுபட வேண்டியிருப்பதற்கு இளம் வயதிலேயே அவற்றை எதிர்நோக்கும் பயிற்சியை விளையாட்டு அளிக்கிறது.

**புனராக்கக் கொள்கை:**

'ஸ்டான்லி ஹால்' இக்கொள்கையை நன்கு விளக்கியுள்ளார். விளையாட்டின் வழியே ஒரு குழந்தை தன் இனத்தின் பண்டைய செயல்களையும் அனுபவங்களையும் மீண்டும் பெறுகிறது என்பது இக்கொள்கையின் சாரமாகும்.

**பொழுதுபோக்குக் கொள்கை:**

விளையாட்டு வெறும் பொழுதுபோக்கு என்ற கருத்தும் நிலவுகிறது. விளையாட்டுச் செயல்கள் எளியனவாகவும் மனித இனத்தின் தொடக்கக் காலச் செயல்களை ஒத்திருப்பவனவாகவும் இருந்தலால் விளையாட்டுச் செயல்கள் பொழுதுபோக்குச் செயல்கள் எனக் கருதப்படுகின்றன.

**காலுதற்கொள்கை:**

பிறருக்குத் துன்பமளிக்கும் இரக்கமற்ற செயல்களில் ஈடுபடும் பண்டைய நோக்கு மனிதனிடமிருந்து இன்னும் முழுமையாக மறைந்தொழியவில்லை. தீய விளைவுகளை நீக்கி அவற்றை உயர்நிலைப்படுத்துவற்கு விளையாட்டுக்கள் உதவுகின்றன. விளையாட்டு மூலம் உளப்போராட்டங்களுக்குத் தீர்வு காணும் முறையும் உள மருத்துவ முறைகளில் ஒன்றாகும்.

**போட்டி மனப்பான்மை:**

போட்டி மனப்பான்மை விளையாட்டின் அடிப்படையாகும். இன்று விளையாட்டுக்களை அகவிளையாட்டு, புறவிளையாட்டு என இரண்டாகப் பிரிக்கின்றனர். விளையாட்டுக்களை,

1. கால அடிப்படையிலும்
2. கருவிகள் அடிப்படையிலும்
3. வயது மற்றும் விளையாடுவோர் அடிப்படையிலும்
4. தன்மை அடிப்படையிலும்
5. போட்டி அடிப்படையிலும்

வகைப்படுத்துகின்றனர். மேலும்,

1. தனிநபர் விளையாட்டு
2. இருவர் கலந்து விளையாடும் விளையாட்டு
3. குழு விளையாட்டு

என்றும் பிரிப்பர்.

விளையாட்டைப் பால் அடிப்படையிலும் வயது அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துவர்.

1. சிறுவர் விளையாட்டு
2. சிறுமியர் விளையாட்டு
3. சிறுவர் சிறுமியர் விளையாட்டு
4. ஆடவர் விளையாட்டு
5. மகளிர் விளையாட்டு

தன்மை அடிப்படையில் விளையாட்டை நான்கு வகையாகப் பகுக்கின்றனர்.

1. உடல் திறன்
2. அறிவுத்திறன்
3. வாய்ப்பு நிலை
4. மனமகிழ்ச்சி நிலை

மரினடவியலார் இதனையே மூன்று வகையாகப் பகுக்கின்றனர்.

1. உடல் திறன் விளையாட்டு
2. மனத் தந்திர விளையாட்டு
3. வாய்ப்புநிலை விளையாட்டு

விளையாட்டுகளைப்,

(i) பாடலுள்ள விளையாட்டு

(ii) பாடல் இல்லா விளையாட்டு

என இரு வகையாகப் பகுக்கலாம். சிறுமியர் விளையாட்டில் பாடல் மிகுதியாக இருக்கும்.

ஆடவர் விளையாட்டுக்கள் புறவிளையாட்டுக்களாகவும், உடல் திறன், அறிவுத்திறன், வாய்ப்புநிலை வாய்ந்த விளையாட்டுகளாகவும் உள்ளன. ஆனால்

அதே நேரத்தில் மகளிர் விளையாட்டுக்கள் அக விளையாட்டாக உள்ளன. சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்கள் போலச் செய்தலை அடிப்படையாகக் கொண்டன. மரபு வாயிலாக இவை பாதுகாக்கப்படுகின்றன. சிறுவர் சிறுமியர் உடல் திறன், மனமகிழ்ச்சி விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர். சிறுவர்களைக் காட்டிலும் சிறுமியர்கள் இத்தகைய விளையாட்டுக்களில் அதிகம் ஈடுபடுகின்றனர். சிறுவர் போட்டி விளையாட்டுக்களில் அதிகம் ஈடுபடுகின்றனர். அதிக சக்தி செலவிடக்கூடிய தீவிரமான விளையாட்டுக்களைச் சிறுவர்களும், மென்மையான விளையாட்டுக்களைச் சிறுமியர்களும் விளையாடுகின்றனர். வயது வந்தோர் விளையாட்டு கடின உழைப்பினின்றும் ஓய்வு பெறத் தோற்றுவிக்கப் பெற்றிருக்க வேண்டும். பொதுவாக ஆடவர் விளையாட்டை அறிவுத்திறன் சார்ந்தது என்றும், மகளிர் விளையாட்டை மனமகிழ்ச்சி, பொழுதுபோக்குச் சார்ந்தது என்றும் கூறுவர். குழந்தைகளின் பருவத்திற்கேற்ப விளையாட்டுக்கள் வேறுபடுகின்றன.

விளையாட்டு குழந்தையின் முழுவளர்ச்சிக்கு இன்றியமையாததாகிறது. விளையாட்டின் வழியே 'புலப் பயிற்சி' இயற்கையாக நிகழ்கிறது. படைப்புச் செயல்களின் சிறந்த வெளிப்பாடே விளையாட்டு, குழந்தைகள் இயல்பூக்கம், விளையாட்டில் வெளிப்படுகின்றன. விளையாட்டு பண்பாட்டுச் செயல்களின் வெளிப்பாடாகும். விளையாட்டு சமூக ஒழுகலாறுகளைக் கற்பிப்பதற்குப் பயன்படுகிறது. விளையாட்டின் மூலம் குழந்தைகளிடையே கட்டுப்பாட்டுணர்வு வளர்கிறது. ஒற்றுமையுணர்வு ஏற்படுகின்றது. குழந்தைகளிடையே தலைமைப் பண்பும் வளர்கிறது. அதே நேரத்தில் பணிவும் பிறருக்கு உதவும் மனிதநேயமும் குழந்தைகளிடையே வளர்கின்றன.

நாட்டுப்புற விளையாட்டுக்களைப் பால், வயது அடிப்படையில்,

1. சிறுவர் விளையாட்டு
2. சிறுமியர் விளையாட்டு
3. சிறுவர் சிறுமியர் விளையாட்டு
4. ஆடவர் விளையாட்டு
5. மகளிர் விளையாட்டு

எனப் பாகுபடுத்தி ஆராயலாம்.

**சிறுவர் விளையாட்டு:**

1. கால் தூக்கிக் கணக்குப் பிள்ளை
2. ஆவியம்
3. பம்பர விளையாட்டு
4. தவிட்டுக்கஞ்சி
5. கிளித்தட்டு
6. தெல்லு
7. கிந்தான்
8. சைக்கிள் கிந்தான்
9. ஆயிரம் கிந்தான்
10. உப்பு விளையாட்டு
11. கள்ளன் போலீஸ்
12. கோலி
13. கால் தாண்டி
14. வண்ணம் பொதி
15. மந்தி ஓடுதல்
16. கிட்டிப்புள்
17. பந்து விளையாட்டு
18. மாக்கொளக்கட்டை
19. ஒச்சிய்யான்
20. தலைவனைக் கண்டுபிடித்தல்
21. உருண்டை திரண்டை விளையாட்டு
22. மாட்டுக்கால் திரி விளையாட்டு
23. சைக்கிள் விளையாட்டு
24. தேர் அல்லது சப்பர விளையாட்டு

25. மாட்டு விளையாட்டு

26. குருட்டு கொக்கு விளையாட்டு

27. ஐஸ்பாஸ் ரெடி விளையாட்டு

28. கல்லெடுக்கும் விளையாட்டு

29. காற்றாடி

30. பட்டம்

31. சூடிசுப்பி

32. ஒத்தையா? ரெட்டையா

33. தைத்தக்கா தை

34. வட்டத்திரி

35. எலியும் பூனையும்

36. காக்காக் குஞ்சு

37. குண்டு விளையாட்டு

38. ஆடு - ஓநாய் விளையாட்டு

39. சக்கர விளையாட்டு

40. ஆனைத்திரி பூனைத்திரி

41. காட்டு கண்ணாமூச்சி

**சிறுமியர் விளையாட்டுக்கள்:**

42. பூப்பறிக்க வருகிறோம்! வருகிறோம்!

43. பூசணிக்காய் விளையாட்டு

44. உன் புருஷன் பெயரென்ன?

45. பூச்சொல்லி விளையாட்டு

46. ஒருபத்தி இருபத்தி

47. குச்சு குச்சு ராக்கம்மா

48. சோற்றுப்பானை விளையாட்டு

49. கழற்சிக்காய் விளையாட்டு

50. திரித்திரி பொம்மக்கா

51. ரானா மூனா தண்டட்டி

52. என் தலைக்கு எண்ணெய் ஊத்து

53 கரகர வண்டி

**சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்கள்:**

54. நொண்டி

55. நிலாப்பூச்சி

56. சிறுசிறு மாம்பழம்

57. சாட்டு பூட்டு

58. கண்ணாமூச்சி

59. ஒரு தலையிலே ஆடு மேயுதாம்

60. யாருக்கு வேட்டை?

**மகளிர் விளையாட்டுக்கள்:**

61. பல்லாங்குழி

62. தட்டாங்கல்

63. தாயம்

**ஆடவர் விளையாட்டு:**

64. சிலம்பாட்டம்

65. சடுகுடு

66. பதினைஞ்சாம் முடி

67. உறியடி விளையாட்டு

68. சேவல் கட்டு

69. எருது கட்டு

**சிலம்பாட்டம்**

கையிலுள்ள கம்பினை வீசி ஒலியெழுப்பி விளையாடும் விளையாட்டிற்குச் சிலம்பாட்டம் என்று பெயர். கம்பு வீசுத்திறன், காலடி எடுத்து வைக்கும் முறை, வேகமாக வீசுந்திறன் இம்மூன்றும் சிலம்ப விளையாட்டின் அடிப்படைகளாகும். இது வீரத்தின் அடிப்படையில் எழுந்த விளையாட்டாகும். இச்சிலம்பாட்டத்தினை மராட்டிய மொழியில் 'லாட்டி' என்றும், குஜராத்திய மொழியில் 'டல்லாக்கடி' என்றும், வங்கமொழியில் 'லாடிகீலா' என்றும், தெலுங்கு மொழியில் 'கரடி ஆட்டமு' என்றும், மலையாள மொழியில் 'நெடுவடி' என்றும் வழங்குவர்.

**சடுகுடு:**

சடுகுடு விளையாட்டைப் பழந்தமிழரின் விளையாட்டு என்பர். இதனைப் 'பலிஞ்சடுகுடு' என்றும் 'பலின்சடுகுடு' என்றும் 'கபடி' என்றும் கூறுவர். இதனைப் 'பலிஞ்சப்பளம்' எனத் தெலுங்கு மொழியிலும், 'குடுடுடு' என மராட்டிய மொழியிலும், 'குடுடுடு' என வங்க மொழியிலும் வழங்குவர். இவ்விளையாட்டு குறித்து நவராஜ் செல்லையா அவர்கள் 'பழந்தமிரசர்களிடையே நிரைகளைக் (ஆநிரை) கவர்வதும் (வெட்சி) கவர்ந்த நிரைகளை மீட்பதுமாகிய செயல்கள் இருந்தன. இதனடிப்படையில் போரும் எழுந்தது. போரில் வெற்றிகிட்டக் காளியை வணங்கினர். சடுகுடுப்பை அல்லது குடுப்பை என்ற பறையால் ஒலியெழுப்பி காளியை வழிப்பட்டிருப்பர். போரின் செயல்பாடு விளையாட்டிலும் இருப்பதால் 'பலிஞ்சடுகுடு' என்று மாறி வந்திருக்கலாம் என்கிறார். 'பலிஞ்சடுகுடு' என்ற சொல் மூச்சை அடக்குவதற்காகப் பயன்படும் சொல்லாகும். இதனை இரண்டு பிரிவாகப் பிரிந்து நின்று விளையாடுவர். ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குப் பாடிப்போகும் போது அப்பக்கத்திலுள்ளவரைத் தொட்டுவிட்டுக் கோட்டைத் தாண்டிவிட்டால், தொடப்பட்டவர் விளையாட்டிலிருந்து வெளியேறிவிட வேண்டும். இன்றும் இவ்விளையாட்டு கிராமப்புறங்களில் இரவிலும் பகலிலும் நடைபெறுவதுண்டு.

தமிழினம், தமிழ்ப்பண்பாட்டைக் காக்க விழைவோர். இவ்வியைாட்டினை ஊக்கப்படுத்தி வளரச் செய்ய வேண்டும்.

**பதினைந்தாம் புலி:**

இக்கட்ட விளையாட்டினைப் 'பதினைந்தாம் புலி' என்றும் 'ஆடுபுலி ஆட்டம்' என்றும் கூறுவர். இருவர் பங்கு கொள்ளும் இவ்வாட்டத்தில் ஒருவர் (ஆடாகயிருப்பவர்) பதினைந்து காய்களையும் மற்றொருவது (புலியாகயிருப்பவர்) மூன்று காய்களையும் வைத்து விளையாடுவர். ஆடாகயிருப்பவர் காய்களை வைத்துக் கொண்டே இருக்க, புலியாக இருப்பவர் காய்களை நகர்த்திக் கொண்டேயிருப்பார். ஒரு காய் வைக்குமிடத்திலிருந்து ஒரு புள்ளி தள்ளி காய் இல்லாவிட்டால், அக்காயை வெட்டலாம். புலியின் காய்களை நகர்த்த முடியாத அளவிற்கு காய்களை வைத்துவிட்டால், ஆடாகயிருப்பவர் வெற்றி பெற்றவராவர். காய்களைப் பார்த்து அடைபடாமல் தப்பித்து எதிரியின் காய்களை வெட்டி முடித்துவிட்டால், புலியாயிருப்பவர் வெற்றி பெற்றவராவார். வேலையில்லாத காலத்து கிராமத்துப் பெரியவர்கள் பொது இடங்களில் இன்றும் இவ்விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

**தாயம்:**

மகளிர் விளையாடும் இவ்விளையாட்டினைத் 'தாயம்' என்றும், விளையாடுவதற்கு வரையப்படும் கட்டத்தினைத் 'தாயக்கட்டம்' என்றும், உருட்டும் பகடையைத் 'தாயக்கட்டை' என்றும் கூறுவர். சோளிகள், புளியங்கொட்டை முதலியவற்றை வைத்து விளையாடுவர். நான்கு கட்டத்தாயம், எட்டுக்கட்டத் தாயம், பத்துக் கட்டத் தாயம் எனப் பலவகையுண்டு. குறைந்தது இருவர் இவ்விளையாட்டில் பங்கு கொள்வர்.

**பல்லாங்குழி:**

'பல்லாங்குழி' என்பதனைத் தமிழ்ப் பேரகராதி 'பதினான்கு + குழி' என்றும், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் 'பண்ணை + குழி' என்றும், எஸ்.நவராஜ் செல்லையா 'பல்-அம்- குழி' என்றும், இரா.பாலசுப்பிரமணியம் 'பரல்-

ஆடும்-குழி' என்றும் பிரித்து விளக்க முயன்றுள்ளார்கள். 'பண்ணை' என்பதற்கு 'நிலம்' என்ற பொருளும் உண்டு. நிலத்தில் குழிகள் தோண்டி ஆடிய விளையாட்டு என்பதால் 'பண்ணைக்குழி' என்பது 'பண்ணாங்குழி' எனத் திரிந்து இன்று 'பல்லாங்குழி' என வழங்கப்படுகிறது. இன்றும்கூட தமிழகத்திலும் ஆப்ரிக்காவிலும் குழிகளைத் தோண்டி, இவ்விளையாட்டு விளையாடுவதால் இப்பெயர் பொருந்தும் என்றே தோன்றுகிறது. நிலத்தில் குழிகள் தோண்டிப் பல்லாங்குழி ஆடுவது வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே கிராமங்களில் நடைபெற்று வருகின்றது.

பல்லாங்குழியை மலையாளத்தில் 'பல்லாங்குழி' என்றும், தெலுங்கில் 'ஓமன கூறு' என்றும், கன்னடத்தில் 'சென்னமனே' என்றும், துளு மொழியில் 'ஜோடுபெர்கா', 'அரசாட்டம்' 'சென்னே ஆட்டம்' என்றும், பஞ்சாபி மொழியில் 'குட்கா போய்யா' என்றும், ஒரியா மொழியில் 'கஞ்குடி' என்றும் வழங்குகின்றனர். ஆப்பிரிக்கா நீக்ரோ மக்களின் தேசிய விளையாட்டு இதுவென மானிடவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். சூடான், கென்யா, உகாண்டா, தான்சானியா, ரொடீஷியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் இவ்விளையாட்டு விளையாடப்படுகின்றது. எகிப்து பிரமிடுகளிலும் பல்லாங்குழி செதுக்கப்பட்டுள்ளது. சிவென்ய் பர்த் என்னும் மானிடவியல் அறிஞர் மத்திய ஆப்பிரிக்காவில் தோன்றி, அரபு வியாபாரிகளால் மற்ற இடங்களுக்கும் பரவியிருக்கும் எனக் கருதுகிறார். மேற்கிந்தியத் தீவுகள் டச்சு கயானாவில் வாழும் பழங்குடிகள் இரவில் இவ்விளையாட்டை விளையாடுவதில்லை, இவ்விளையாட்டை மரணச் சடங்கொடு இணைத்துப் பார்க்கின்றனர். பிணத்தைத் திருப்திப்படுத்த பிணத்தின் முன் ஆடுகிறார்கள். அடியார்க்குநல்லார் உரையில் மட்டும் இவ்விளையாட்டு பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இவ்விளையாட்டை நன்கு ஆராயின் இது தமிழரின் விளையாட்டா? அல்லது மற்றவர்களிடமிருந்து பெறப்பட்டதா? என்பது தெரிய வரும்.

**தட்டாங்கல்:**

கல்லை மேலே தூக்கிப்போட்டு அது கீழே வந்து விழுவதற்கு முன்பு கையால் தரையில் கட்டிக் கல்லைப் பிடிக்கும் விளையாட்டைத் தட்டாங்கல் விளையாட்டு என்பர். இலக்கியங்களில் காணப்படும் 'கழங்காடுதலுக்கும்' இதற்கும் தொடர்பு உண்டு என்பர்.

**கண்ணாமூச்சி:**

சிறுவர் சிறுமியர் இணைந்து கண்ணை மூடிக்கொண்டு விளையாடும் விளையாட்டிற்குக் 'கண்ணாம் மூச்சி' என்று பெயர். ஓடி ஒளிந்திருப்பவர்களைக் கண்டுபிடித்து விளையாடும் விளையாட்டாகும்.

**நொண்டி விளையாட்டு:**

ஒரு காலினைப் பயன்படுத்தி ஆடும் ஆட்டம் நொண்டி விளையாட்டாகும். ஒருவர் நொண்டியடித்துக் கொண்டு, மற்றவர்களைத் தொட்டு விளையாடும் விளையாட்டாகும்.

**கிட்டிப்புள்:**

இது சிறுவர்கள் விளையாடும் விளையாட்டாடும் நீளக்குச்சி, கிட்டி என இரண்டு வைத்திருப்பர். நிலத்தில் சிறிது பள்ளம் தோண்டி அவற்றில் கிட்டியை வைத்து நீளக்குச்சியினால் அடிப்பர். அதிரே உள்ளவன் அதனைப் பிடித்து விட்டால், அடித்தவன் காயாகிவிடுகிறான். இவ்வாறு இருவர் மாறி மாறி விளையாடுவர்.

**பம்பரம்:**

பம்பரம் எனும் விளையாட்டுப்பொருளைக் கொண்டு ஆடும் ஆட்டத்திற்குப் 'பம்பர ஆட்டம்' என்று பெயர். வட்டமிட்டு அதனுள் ஒரு பம்பரத்தை வைத்து அதனை வெளியேற்றுவர். வெளியேற்றியவுடன் அனைவரும் சாட்டையால் பம்பரத்தைச் சுற்றிக் கையால் எடுக்க வேண்டும். யார் எடுக்கவில்லையோ அவனது பம்பரத்தை வட்டத்தில் வைக்க வேண்டும்.

**குண்டு விளையாட்டு:**

சிறுவர் விளையாடும் இவ்விளையாட்டினைக் 'குண்டு விளையாட்டு' என்றும் 'கோலி விளையாட்டு' என்றும் கூறுவர். நிலத்தில் குழி தோண்டி அதனை

நோக்கிக் குண்டை அடித்து அதில் விழச் செய்ய வேண்டும். கிராமத்துச் சிறுவர்களிடையே இவ்விளையாட்டினைக் காணலாம்.

**ஒத்தையா? இரட்டையா? விளையாட்டு:**

கிராமங்களில் புளியங்கொட்டை, முத்து அல்லது அவரையைக் கையில் வைத்து மறைத்து விளையாடும் விளையாட்டை 'ஒத்தையா? இரட்டையா? என்பர். ஒத்தை என்று கூறின், கையிலுள்ளதைக் கணக்கிட்டு ஒற்றைப்படை எண் வரின் கூறியவர்க்குக் கொடுக்க வேண்டும். இரட்டைப்படை எண்ணாக வரின், ஒத்தை என்று கூறியவருக்கு அவ்வளவு முத்துக்களையும் கொடுக்க வேண்டும்.

**பட்டம் விடுதல்:**


கிராமங்களில் மட்டுமின்றி நகரங்களிலும் காற்றுக்காலத்தில் பட்டம் விடுவது சிறுவர்களுக்குப் பொழுதுபோக்கான விளையாட்டாகும்.

**கரக வண்டி:**

சிறுமியர்கள் பலர் நின்று கொண்டு சுற்றிக் கொண்டேயிருப்பர். யார் கடைசிவரை சுற்றுகின்றார்களோ அவரே வென்றவராவர். 'கரகவண்டி காமாட்சி வண்டி' எனப்பாடிக் கொண்டே ஆடுவர்.


**கிளித்தட்டு:**

(கிளித்தட்டு மாதிரிப்படம்)



தட்டுக்கு ஒருவராக நிற்க, ஒருவன் கிளியாக நடுக்கோட்டிலும் ஓடுவான். எதிர் தரப்பினர் உள்ளே இறங்கி, கடைசித் தட்டுக்குப் போக முயற்சிப்பர். முத்தட்டுப் பாய்ந்தவன் தட்டுக்குள் நுழைந்துவிட்டால் பழம்; எதிர் தரப்பினர் கிளியை மறிப்பர். மற்றவர்கள் ஒரு தட்டு விட்டு மற்ற தட்டுப் போகும்போது எதிரியைத் தொடலாம்.

**கிந்தான் அல்லது ஐந்தாங் கிந்தான்:**



(மாதிரிப்படம்)

இவ்விளையாட்டில் நான்குபேர் விளையாடலாம். எதிர் தரப்பிலும் நான்கு பேர். ஓட்டாஞ்சல்லியை ஒவ்வொரு கட்டத்திலும் போட்டு அதை மிதித்து வெளியே தள்ளி காலால் மிதிக்க வேண்டும். ஐந்து கட்டத்திலும் போட்டு இவ்வாறே செய்ய வேண்டும். ஐந்து கட்டம் முடிந்த பிறகு 'ஒண்ணாம் போட்டு மண்டாசலம்' என முதல் கட்டத்தில் போட்டு விளையாட வேண்டும். ஐந்தாவது கட்டத்திற்கு வெளியே போட்டு 'மண்டாசலம்' எனக்கூறி அதையும் வெளியே தள்ளி மிதிக்க வேண்டும். கோட்டில் மிதித்துவிட்டாலும் ஓட்டஞ்சல்லி மாறி விழுந்தாலும் 'சப்பை' என்பர். பூவா கொட்டையா எனக்கேட்டு எதிர்ப்பு பூ என்று சொன்னால், ஐந்தாவது கட்டத்திற்கு வெளியே குனிந்து நின்று கவுக்குள்ளாக ஐந்து ஒன்று தவிர மற்ற கட்டத்திற்குள் விழச் செய்யவேண்டும். கொட்டை என்று சொன்னால் தலைக்கு மேலே ஒட்டாஞ்சல்லியை ஐந்து, ஒண்ணு தவிர மற்ற கட்டத்தில் விழச்செய்ய வேண்டும். அப்படி விழுந்ததால், அந்த விழுந்த கட்டம் மட்டும் 'பழம்'. இரண்டு, மூன்று, நான்கு கட்டங்கள் முடிந்தபின்பு ஒரு பழம். அடுத்த ஒண்ணு, ஐந்தாவது கட்டத்தில் போடலாம். அவ்வளவு 'பழம்' ஏறிவிட்டால், ஜெயித்துவிட்டதாகக் கருதப்படும்.

**ஆயிரம் கிந்தான்:**

எல்லையிலிருந்து ஒட்டாஞ்சல்லியை ஏதாவதொரு கட்டத்தில் போட வேண்டும். போட்ட இடத்திலிருந்து நொண்டி வந்து நூறாம் கட்டத்தில் நொண்டியடித்து 200, 300 என வரிசையாக ஒட்டாஞ்சல்லி இருக்கின்ற கட்டத்தில் மிதிக்க வேண்டும். ஒட்டாஞ்சல்லியை எத்தி வெளியேறிய ஒட்டாஞ்சல்லியை நொண்டியடித்து மிதித்து எல்லையில் மிதிக்க வேண்டும். 1000 போட்டால் தான் பழம். ஒவ்வொரு ஆயிரத்திற்கும் ஒரு பழம். கோட்டில் விழுந்தாலோ கோட்டில் மிதித்தாலோ ‘சப்பை’ இப்படியே மாறி மாறி விளையாடுவர்.

**கள்ளன் - போலீஸ் விளையாட்டு:**

சிறுவர்களில் ஒருவன் படுத்துத் தூங்குவது போல் நடிப்பான். இரண்டு சிறுவர்கள் இவனிடம் திருடுவது போல் நடித்து ஓடி ஒளிந்து கொள்வர். படுத்தவன் போலீஸ் போன்று நடிக்கும் பையனிடம் முறையிடுவான். போலீஸ் போன்று நடிப்பான் அவர்களைத் தேட முயற்சிப்பான். இதுதான் விளையாட்டு கிராமங்களில் பெரியவர்கள் திருடர்களின் வீரசாகசங்களையும் திறமைகளையும் அறிவையும் பற்றி கதை கதையாகக் கூறுவர். அதன் அடிப்படையில் எழுந்த விளையாட்டாகும்.

**கால் தாண்டி விளையாட்டு:**

இவ்விளையாட்டைப் ‘பச்சைக் குதிரை’ என்றும் கூறுவர். காலை நீட்டி உட்கார்ந்து கால்மேல் கால் வைப்பான். பின் கால்மேல் விரல் வைப்பான் பின் இரண்டு விரல் வைப்பான் பின்பு குனிவான். மற்றவர்கள் அவனைத் தாண்டுவார்கள். அவன் மீது படாமல் தாண்ட வேண்டும். பட்டுவிட்டால் அவன் குனிய வேண்டும்.

**உருண்டை திரண்டை விளையாட்டு**

இவ்விளையாட்டில் ஒருவன் குனிந்து கொள்வான். அவன் முதுகின் மீது மற்ற பையன்கள் ஒருவன் கைமீது ஒருவன் வைத்துக் கொள்வான்.

தலைவனாயிருப்பவன் யாரிடமாவது ஒருவனிடம் துரும்பு கொடுப்பான். பின்பு அனைவரும் 'உருண்டை திரண்டை உள்ளங்கை பிரண்டை' எனப் பாடிக் கொண்டே கையைத் தேய்ப்பர். குனிந்தவன் யாரிடம் துரும்பு உள்ளது எனக் கூறிவிட்டால் அவன் குனிய வேண்டும். இவ்வாறு மாறி மாறி விளையாடுவர்.

**மாட்டுக்கால் திரி விளையாட்டு**

இரண்டு பிரிவாகப் பிரிந்து கொண்டு பத்துபாக இடவெளியில் எதிர் எதிராகக் கால் நீட்டி உட்கார்ந்து கொள்வர். ஓரணித்தலைவன் ஏதாவது உரு மச்சத்தை (திரியை), அமர்ந்திருக்கும் ஏதாவது ஒரு சிறுவன் பின்னால் வைப்பான். கையைப் பின்னால் வைத்திருப்பான். எதிரணித் தலைவன் யார் கையில் திரி உள்ளது எனக் கூறவேண்டும். சரியாகக் கூறிவிட்டால் அவனது அணியிலிருந்து ஒருபையன் இருகாலையும் ஒன்று சேர்த்து வைத்துக் குதித்து நடுவில் உட்காருவான். இரு அணிகளைச் சேர்ந்த ஜோடிகள் ஒன்று சேரும் போது கல்யாணமாகிவிட்டது என்று கூற, அவர்கள் ஆட்டத்திலிருந்து எழுந்து கொள்வார்கள். இது தொடர்ந்து நடைபெறும்.

**சைக்கிள் விளையாட்டு:**

இரண்டு பையன்கள் நின்று கொண்டு கைகளைக் கோர்த்துக் கொள்வர். மூன்றாவது பையன் கைகோர்த்திருப்பவன் மீது அமர்ந்து கொள்வான். அமர்ந்த பையன் சைக்கிள் ஓட்டுவது போன்று காலை ஆட்டுவான். ஒரு எல்லைக்குள் போக வேண்டும். எல்லைக்குள் போனவுடன் மாறி மாறி 'உட்காருபவர்' முடிவு செய்யப்படும்.

**கல்லெடுக்கும் விளையாட்டு:**

ஒரு வட்டத்தில் ஒருகல் இருக்கும். எத்தனை பேர் வேண்டுமானாலும் பங்கு பெறலாம். (இரட்டை எண்ணாகயிருக்க வேண்டும்). ஒவ்வொரு பக்கத்தில் உள்ளவருக்கும் எண்கள் உண்டு. விளையாட்டுத் தலைவன் எண் ஒன்று கூறினால், ஒரு பக்கத்திலுள்ள எண் ஒன்று, அந்தக் கல்லை எடுக்க வேண்டும்.

மறுபக்கத்திலுள்ள அதே எண் உள்ளவன் கல்லை எடுக்க விடாமல் தடுப்பான். கல்லை எடுத்து விட்டால் தோற்றவன் பக்கத்திலுள்ளவன் ஜெயித்தவன் பக்கம் போய் நிற்க வேண்டும். இதே போன்று ஒரே பக்கத்திலுள்ள நான்கு பேரும் கல்லை எடுத்துவிட்டால் அவர்கள் வெற்றி பெற்றவர்களாவர்.

**சூடி சுப்பி:**

மூன்று பையன்கள் உட்கார்ந்திருக்க, அவர்கள் பக்கத்தில் இருவர் நிற்பர். நிற்பவர் ஒருவரை ஒருவர் விரட்டிப் பிடிக்க வேண்டும். அவர்கள் இருவரும் மூன்று பையன்களைச் சுற்றிச் சுற்றி வருவர். பிடித்து விடுவான் எனத் தெரிந்தால், உட்கார்ந்தவனை எழுப்பிவிட்டு அவன் உட்கார்ந்து கொள்வான். இவ்விளையாட்டில் சிறுவர்களுக்கு நல்ல உடற்பயிற்சி ஏற்படுகிறது.

**வட்டத்திரி:**

பிள்ளைகள் வட்டமாக உட்கார்ந்து கொள்வர். ஒருவன் திரியைக் கையில் வைத்துக் கொண்டு அவர்களைச் சுற்றிச் சுற்றி வருவான். குலைகுலையாய் ‘முந்திரிக்காய்’ என்பான். மற்றவர்கள் ‘நிறைய நிறைய கொண்டு வா’ என்பர். திரியை யாரேனும் ஒருவருக்குப் பின்னால் போட்டுவிட்டு சுற்றிச் சுற்றி வருவான். திரியை எடுத்தவன் இவனைப் போல சுற்றி வருவான். திரியை எடுக்காவிட்டால், திரி யாருக்குப் பின் உள்ளதோ அவனை அடிப்பான்.

**எலியும் பூனையும்:**

எலியாக இருப்பவன் வட்டத்தினுள்ளேயும் பூனையாக உள்ளவன் வட்டத்திற்கு வெளியேயும் இருப்பான். பூனையாக வெளியே சுற்றிக் கொண்டிருப்பவன் உள்ளே நுழைய முயற்சிப்பான். பூனை உள்ளே வந்துவிட்டால், எலி வெளியே சென்று விடும். பூனையாகயிருப்பவன் எலியைத் தொட்டுவிட்டால் விளையாட்டு முடிந்துவிடும். இவ்வாறு மீண்டும் மீண்டும் விளையாடுவர்.

**ஆடு - ஓநாய் விளையாட்டு:**

சிறுவர்கள் வரிசையாக ஒருவர் இடுப்பினை ஒருவர் பிடித்துக் கொண்டு நிற்பர். ஒருவன் மட்டும் சுற்றிச்சுற்றி வருவான். 'என் ஆட்டைக் காணோமே? என ஓடி வருபவன் கூறுவான். தேடி பிடிச்சுக்கோ?' என நிற்பவன் கூறுவான். வரிசையிலிருந்து பிரிந்து நிற்பவனைத் தொடுவான். பின்பு தொடப்பட்டவன் சுற்றி வர வேண்டும். வரிசையாக நிற்பவர்களை ஆடுகளாகவும் சுற்றி வருபவனை ஓநாயாகவும் கருதுவதால், இவ்விளையாட்டிற்கு 'ஆடு - ஓநாய் ஆட்டம்' எனப் பெயர் வந்தது.

**நிலாப்பூச்சி:**

நிலாக் காலங்களில் விளையாடும் விளையாட்டாகும். சிறுவனோ சிறுமியோ பிடித்து வருவாள். அவள் நிலா வெளிச்சத்தில் நின்று கொள்வாள். மற்றவர்கள் நிழலில் நின்று கொள்வர். வெளிச்சத்திலுள்ள நிழலைத் தொட்டாலும் தொடுபட்டவன் பிடித்து வர வேண்டும்.

**பூசணிக்காய் விளையாட்டு:**

சிறுமியர்கள் விளையாடும் விளையாட்டு தரையில் அமர்ந்த ஒருவர் இடுப்பை மற்றொருவர் பிடித்துக் கொள்வர். முதலில் இருக்கும் சிறுமி தோட்டக்காரன். கடைசியில் இருக்கும் சிறுமி பூசணிக்காய். ஒரு சிறுமி இராஜாவாகவும் மற்றொரு சிறுமி சேவகனாகவும் நடிப்பர். இராஜா சேவகனிடம் தோட்டக்காரனிடம் கூறி 'பூசணிக்காய் வாங்கி வா' என்பர். தோட்டக்காரன் இப்பொழுதுதான் விதை நட்டிருக்கிறோம் என்பான். இராஜா 'இதை வாங்கிட்டு வா' என்பார். 'இப்பத்தான் 'இலை விட்டிருக்கு' என்பான் தோட்டக்காரன். அதையும் வாங்கி வா என்பார். பூசணிச்செடியின் வளர்ச்சியை முறையாகக் கூறப்படும். கடைசியில் காயாக உள்ளது என்பர். 'தண்ணீர் வீட்டு வேலி அடைத்து பூசணிக்காய் பிடுங்கிக் கொண்டு போ' என்பான் தோட்டக்காரன். சேவகன் பிடுங்கப் போகும் போது உட்கார்ந்திருக்கும் பிள்ளைகள் நாய் போல் குரைப்பர். ஒருபிள்ளை சேவகனின் காலைக் கிள்ளும், சேவகன் தேள் கடித்து விட்டது என்பான். கடைசியிலிருக்கும் பூசணிக்காயைப் பிடுங்கிக் கொண்டு செல்வான். இராஜா 'இது

அழுகி இருக்கு; வேறொரு பூசணிக்காய் பிடுங்கி வா' என்பார். 'எரு போட்டு தேங்காய் உடைத்து பிடுங்கிப் போ' என்பான். இப்படி இராஜா எல்லாக் காய்களையும் பிடுங்கிக் கொண்டு வரச் சொல்வார். கடைசி பூசணிதான் நல்ல பூசணி என்று எல்லாப் பூசணிக்காயையும் பிடுங்கிக் கொண்டு வந்து விடுவார். அரசன் குடிமக்களிடம் எப்படி வசூலித்தான் என்பதையும் குடிமகன் எவ்வளவோ பதில் கூறியும் மறுக்க முடியவில்லை என்பதையும் இவ்விளையாட்டு நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

**ஒருபத்தி இருப்பத்தி விளையாட்டு:**

சிறுமியர்கள் வட்டமாய் அமர்ந்து கைகளைத் தரையில் வைத்துக் கொள்வது. தலைவியாக உள்ளவள் ஒவ்வொரு கையையும் தொட்டு, கீழ்க்கண்டவாறு பாட்டுப்பாடுவாள்.

"ஒருபத்தி இருப்பத்தி
ஓரிய மங்கலம்
செப்பு செவந்திமாடு
கண்ணு வார வேளெ
மஞ்சத்தண்ணி கரைக்கிற நேரம்
புட்டுகிட்டு அவிக்கிற நேரம்
பூமாதேவி கையெடு'

உங்கள் ஐயா பெயரென்ன? எனக் கேட்பாள். முருக்கந்தண்டு எனப் பதில் வரும்.

"முருக்கந்தண்டு தின்னவரே முள்ளிச்சாறு குடிச்சவரே

தார்தார் வாழைக்காய் தமுர்குத்தி வாழைக்காய்

பூப்பூ மண்டலம், பூமாதேவி கையெடு"

என ஒவ்வொரு கையின் மீதும் தனது விரலை வைத்து வருவாள். 'பூமாதேவி கையெடு' என்ற வரி யார் மீது வருகிறதோ, அவள் தனது கையை மலர்த்திக் கொள்வாள். தலைவி மீண்டும் பாட்டுப்பாடுவாள். மலர்த்திய கையின் மீது 'பூமாதேவி கையெடு' என்ற தொடர் வரும்போது அவள் கையை எடுத்துக்

கொள்ளலாம். இப்படி இருகைகளையும் எடுத்துக் கொண்டவள் விடுதலை பெற்றவளாகிறாள். ஒவ்வொருவரும் விலகிய பின்பு கடைசிப் பெண்ணிடம் 'வானம் வேணுமா? பூமி வேணுமா? எனக் கேட்பாள். அவள் கூறும் பதிலிலிருந்து பாட்டைத் தொடர்வாள். கடைசிப் பெண்ணும் விடுதலையடைந்த பின் அனைவரும் தூர நிற்பர். தலைவி, ஏ முதல் பூனைக்குட்டியோள் என்று அழைக்க, ஓய் என பதில் கிடைக்கும். 'மாரியம்மா கோயிலுக்கு நெல் குத்தவாறீயா? எனக் கேட்க, 'பிள்ளை அழுகிறது' எனப் பதில் வரும். இப்படியே பல பதில் கூறிப் பிள்ளை போகமாட்டேங்கிறது என்பாள். காலை முறிச்சி அடுப்பிலே வை எனக்கூற 'வச்சாச்சு' எனப் பதில் வரும். தலைவி கன்னத்தில் கை வைத்து 'சுடுது' என்பாள். சிலரது கையைப் பிடித்து 'சுடவில்லை' எனக் கூறி 'தூ' எனத் துப்புவது போல் பாவனை செய்வாள். இப்படி எல்லோரையும் அழைத்த பின்பு விளையாட்டு முடியும்.

**அமைப்பியல் ஆய்வு:**

'விளாடிமிர் பிராப்பின்' அமைப்பியல் ஆய்வைப் பின்பற்றி, நாட்டுப்புற விளையாட்டுக்களும் ஓர் அமைப்புக்குட்பட்டவை என்றும் அவை சில செயல்களின் தொகுப்பு என்றும் கூறலாம். உதாரணமாகக் 'கண்ணாமூச்சி' என்ற விளையாட்டில் கண்ணைக் கட்டல், ஒளிதல், கண்டுபிடித்தல், தொடுதல் என்ற நான்கு செயல்களும் 'காக்காக் குஞ்சு' என்ற விளையாட்டில் ஒளிதல், கண்டுபிடித்தல், தொடுதல் என்ற மூன்று செயல்களும் இருப்பதைக் காண்கிறோம் இச்செயல்கள் இணைந்துதான் நாட்டுப்புறவிளையாட்டு உருவாகின்றது. நாட்டுப்புற விளையாட்டுக்களை அமைப்பில் நோக்கி ஆராய்ந்தால், வகைப்படுத்துவதும் ஆராய்வதும் எளிதாகும்.

| | | காக்காகுஞ்சு | கண்ணாமூச்சி |
|---|---|---|---|
| 1. | கண்ணைக் கட்டல் | ✗ | ✓ |
| 2. | ஒளிதல் | ✓ | ✓ |
| 3. | கண்டுபிடித்தல் | ✓ | ✓ |
| 4. | தொடுதல் | ✓ | ✓ |

விளையாட்டுக்கள் நமது சமுதாயத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் விளக்கவல்லன. புதுமையாக்கத்தாலும் இயந்திர யுகத்தாலும் சமுதாய மாற்றத்தாலும் மறைந்து கொண்டும் மாறிக் கொண்டும் அழிந்து கொண்டும் வருகின்றன. நாட்டுப்புற விளையாட்டுக்கள் அழிவதற்கு முன், அவற்றைச் சேகரித்துப் பாதுகாப்பதும் சிலவற்றிற்கு உயிர் ஊட்டுவதும் நமது கடமையாகும்.

# அலகு **V**

# நாட்டுப்புற மருத்துவம்


# அலகு V

## நாட்டுப்புற மருத்துவம்

ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்கென ஒரு மருத்துவ அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. அதனைச் சமூக நிறுவனம் என்றே கூறலாம். நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாதன ஆகும். நாட்டுப்புற மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்பர். இவை "Folk Medicine, Ethno Medicine, Popular Medicine, Popular health culture Ethnoiatry, Ethnoiatrics" எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. தமிழகக் கிராமப்புறங்களில் நாட்டு வைத்தியம், கை மருத்துவம், பாட்டி வைத்தியம், மூலிகை மருத்துவம் என்றெல்லாம் கூறுவர். மிகப் பழமையான மருத்துவமுறை என்று ஆயுர்வேத மருத்துவ முறையைக் குறிப்பிடுவர். நாட்டுப்புற மருத்துவம் அதர்வணவேத காலத்திலேயே நடைமுறையில் இருந்தது. அறிவியல் நாகரீக, இயந்திர வளர்ச்சி பெற்ற இக்காலத்திலும் கூட, கிராமப்புறங்களில் நாட்டுப்புற மருத்துவமுறை வழக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற மருத்துவமுறை பற்றி இந்திய நாட்டில் விரிந்தளவு ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. பழங்குடிகளை ஆராய்ந்த மேலைநாட்டு மானிடவியலறிஞர்கள் நாட்டுப்புற மருத்துவம் பற்றி சில குறிப்புகளை எழுதியுள்ளனர். கிராமப்புற மக்களின் பண்பாட்டோடும், பழக்கவழக்கத்தோடும் சமூக அமைப்போடும் நாட்டுப்புற மருத்துவம் பின்னிப் பிணைந்துள்ளது. அவர்களது நம்பிக்கைக்கேற்ப நவீன மருத்துவ முறைகளையும் மேற்கொள்கின்றனர். பழங்குடி மக்களிடையேயும் நாட்டுப்புற மக்களிடையேயும் இன்றும் நாட்டுப்புற மருத்துவம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நாட்டுப்புறப்பாடல்களில் பல அரிய மருந்துமுறைகள் பாலில் வெண்ணெய் போல் அடங்கியுள்ளன. மருத்துவப்புலமை என்னும் மத்தினால் கடைந்தால் வெண்ணெய் திரள்வது போல் பிணி தீர்க்கும் மருத்துவ முறைகள் வெளிப்படும் என சு.வெங்கடேசன் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மரியட் (Marriott, 1955) அவர்கள் மருத்துவ நம்பிக்கை கொண்ட கிராமப்புற மக்கள் நாட்டுப்புற மருத்துவத்தைக் கையாளுகின்றனர் எனக் கூறுகிறார். லெஸ்லே ஏ. ஒயிட் (Leslie A. White, 1967) அவர்கள் சிறுபாரம்பரிய மரபில் காணப்படும் மருத்துவ முறைகள் பெரும்பாரம்பரிய மரபில் ஒன்றாவது, இணைவது மாற்றம் பெறுவது குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்கிறார். எல்வின் (Elwin 1955) அவர்கள் பழங்குடி மக்களிடையே காணப்படும் மந்திர - சமய மருத்துவ முறைகளையும் ஆராய வேண்டும் என்கிறார். பிரேசர் (Frazer) முதற்கொண்டு மாலினோவ்ஸ்கி (Malinowski) வரை மந்திரச் சடங்கு பற்றிக் கூறியவற்றை நன்கு ஆராயின், நாட்டுப்புற மருத்துவத்தின் முன்னைய வடிவத்தை நன்கு அறிந்து கொள்ளலாம்.



மந்திர சமய மருத்துவம் (**Magic - religions medicine**)

மனித இன வரலாற்றை நோக்கின் நோய்கள் ஏற்பட சில காரணங்கள் இருந்தன என ஆரம்ப காலத்தில் மனிதன் நினைத்தான். காணிக்காரன் போன்ற பழங்குடி சமுதாயத்தில் பிலாத்தி என்பவனே பூசாரியாகவும் மந்திரவாதியாகவும் வைத்தியனாகவும் உள்ளான். அவனுக்கு அச்சமுதாயத்தில் மிக்க மதிப்பு உண்டு. இன்றும் நோயினைத் தீர்ப்பதற்கு மருத்துவரை நாடுவதற்குப் பதிலாகப் பூசாரியையும் மந்திரவாதியையும் நாடுவதைப் பழங்குடிச் சமுதாயத்திலும் நாட்டுப்புறச் சமுதாயத்திலும் காணலாம். ஆவியுலகக் கோட்பாட்டின் அடிப்படையில் மந்திரம் தோன்றியது. மனிதனுக்கு அப்பாற்பட்ட ஆற்றலொன்று உலகைக் கட்டுப்படுத்துகிறது. அவ்வாற்றலை வழிபாட்டின் மூலமும் பலியிடுதல் மூலமும் ஈர்க்கமுடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலமைந்த செயல்பாடு கொண்ட அமைப்பைச் சமயம் என்கிறோம். வழிபாட்டையும் பலியிடுதலையும் அடிப்படையாகக் கொண்டது சமயமென்றும் பாவனைச் செயல்களையும் கட்டளையிடுதலையும் அடிப்படையாகக் கொண்டது மந்திரம் என்றும் வரையறுக்கலாம். மந்திரம் சமயத்துடன் இணைந்து சில சடங்கு வடிவில் தோற்றமளித்தது. இதனை மந்திரம் சமயச்சடங்குகள் (Magic -Religious rites) என்பர். மந்திரம் நிகழ்த்தப்படுவதை அடிப்படையாகக் கொண்டு தூய மந்திரம் (White Magic), தீய மந்திரம் (Black Magic), உற்பத்தி மந்திரம் (Protective Magic), பாதுகாப்பு அழிப்பு மந்திரம் (Productive - Destructive Magic) என வகைப்படுத்துவர். மந்திர சமயச் சடங்குகளில் மந்திரித்தல், பேயோட்டுதல் முதலியவற்றைத் தூய மந்திரமாகவும், செய்வினை செய்தல் முதலியவற்றைத் தீய மந்திரமாகவும் கருதுவர். ஒன்று இணைந்த பொருட்களை வேறாகப் பிரிப்பினும் ஒன்றாக இருக்கும். ஒன்றின் தாக்கம் மற்றவற்றில் இருந்து கொண்டேயிருக்கும் என்ற தொத்து மந்திரம் (Contagious magic) இச்சடங்குகளில் ஆராயப்பட வேண்டியதொன்றாகும். இதன் அடிப்படையிலும் தொத்து மந்திரம் தொடர்புவிதி அடிப்படையிலும் அமைந்துள்ளன. குழந்தையற்ற பெண்கள் மரத்தொட்டிலைக் கிராம தேவதைக்கு நேர்த்திக் கடனாக அளித்தல் பாவனை மந்திரத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். ஈன்ற பசுவின் நஞ்சுக் கொடியை ஆலமரத்தில் கட்டும் வழக்கம் தொத்து மந்திரத்தின் அடிப்படையிலானதாகும்.

பழங்குடிச் சமயம் ஆவியுலகக் கோட்பாட்டை நம்பியதாகும். பழங்குடி சமுதாயத்தில் மந்திரத்தையும் சமயத்தையும் வரையறுப்பது கடினமானதாகும். கண்ணேறு கழித்தல் முதலியவற்றை மந்திரச் சடங்குகளில் அடைக்கலாம். மந்திரமும் சமயமும் பழங்குடி வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றன. இருள் அடித்தவர்களுக்கு மந்திரித்த தாயத்து கட்டுகின்றனர். பெண் கர்ப்பமாயிருக்கும் போது, பிறக்கும் குழந்தையின் நலன் வேண்டி கோழி பலியிடுவது உண்டு. காணிக்காரப் பழங்குடிகளிடையே பல்வலி காய்ச்சல், தலைவலி, வயிற்று வலி, நாய்க்கடி, பாம்புக்கடி முதலியவற்றை மந்திரம் மூலம் குணப்படுத்த முயலுகின்றனர். தெய்வத்தையும் வழிபடுகின்றனர். மந்திரம் ஓதுவது மூலம் நோய் குணமாகும் என நம்புகின்றனர்.

மருத்துவ மந்திரச் சடங்குகள் பற்றி ஹெக்கரட், சர்சிட்னி ஸ்மித், ஜாக்கி போன்றோர் விரிவாக ஆராய்ந்துள்ளனர். நாட்டுப்புற மக்கள் மருத்துவ மந்திரச் சடங்குகளை மந்திரித்தல், திருநீறுபோடல், கோடங்கி கேட்டல், பார்வை பார்த்தல். நேர்த்திக்கடன் செய்தல், பேயோட்டல், செய்வினை செய்தல் போன்ற பல பெயர்களால் அழைக்கின்றனர். இவர்களைப் பூசாரி (Priest), பேயோட்டி (Exorcist), பாம்புக்கடி மருத்துவர் (Snake bute currer), எலும்பு முறிவு வைத்தியர் (Bone sets), மந்திரவாதி (Magician) சாமியாடி, அருளாடி, நாட்டுவைத்தியன் எனப் பல பெயர்களால் அழைக்கின்றனர். மக்களது நோயினைத் தீர்ப்பதற்கு மத மந்திரத்தைத் தழுவி நிற்பதனை மந்திர சமய மருத்துவம் (Magio - religious medicine) எனலாம்.

முறைற்ற உணவாலும் (improper food) முறையற்ற சீதோஷ்ண நிலையாலும் (improper weather) இரத்தம் கெடுதலாலும் (impurity of blood) நீர்த்தோய்வினாலும் (dampness of locality) மிதமிஞ்சிய உடலுறவினாலும் (indulgence in sex) நோய்கள் உண்டாகின்றன என மக்கள் நம்புகின்றனர்.

அம்மை போன்ற நோய்கள் மாரியம்மன் சினத்தால் உண்டாவதாக மக்கள் நம்புகின்றனர். நகர்ப்புற மக்கள் கூட மாரியம்மனின் சீற்றம் எனக் கருதி, டாக்டரிடம் செல்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அம்மனின் சீற்றம் தணிய அக்கினிச் சட்டி எடுப்பதாக நேர்த்திக்கடன் நேர்ந்து விடுகின்றனர்.

பாம்புக்கடிக்கு இன்றும் மந்திரிப்பதைக் காணலாம். வண்டு கடிக்குப் பூசாரி வேப்பிலையால் மந்திரிக்கின்றார். உடல் உறுப்புக்கள் நோய்வாய்ப்பட்டால், உடல்

உறுப்புக்கள் செய்து கடவுளுக்குக் காணிக்கையாகப் படைக்கின்றனர். இ∴து பாவனைச் சடங்கைச் சார்ந்ததாகும். தீட்டுப் போதல், பயந்த கோளாறு போன்ற நோய்கள் தீய ஆவியால் ஏற்படுவதாக நம்புகின்றனர். தீய ஆவியால் குறிப்பாகப் பெண்களுக்குப் பேய் பிடிப்பதும் உண்டு. கோடாங்கி உடுக்கையடித்து சில மந்திரச் சடங்குகள் செய்து, அப்பெண்ணின் தலைமுடியை ஒரு மரத்தில் ஆணி அடித்துக் கட்டுவர். இது பெண்ணைப் பிடித்துள்ள தீய ஆவியை மரம் போன்ற இன்னொரு பொருளுக்கு மாற்றுவதாகும். இச்சிகிட்சை முறையெல்லாம் மந்திரத்தின் அடிப்படையிலே அமைந்ததாகும்.

திருஷ்டிபட்டதற்கு முச்சந்தி மண் எடுத்து திருஷ்டி கழிப்பதுண்டு. மந்திரித்து தாயத்து (Amulet) கட்டுவதும் உண்டு. கழிப்பு கழித்தல் முதலியன தொத்து மந்திரச் சடங்குகளின் பாற்படும். குலமரபுச் சின்னத்தைத் (tolemism) தொடர்புபடுத்திச் சில சடங்குகள் செய்வதுண்டு.

அக்கி உரு போன்ற நோய்களுக்கு முதுகில் செம்மண்ணால் நாய், சிங்கம் போன்ற உருவத்தை வரைவர். இதுவும் மந்திரச் சமய மருத்துவத்தின் பாற்படும்.

உடலிலுள்ள கட்டியைக் குணப்படுத்த ‘கத்திப் பார்வை பார்த்தல்’ என்ற சிகிட்சை முறை நெல்லை மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. வைத்தியர் கட்டிக்கு நேராகக் கத்தியை வைத்துக் கட்டிக்கு நேராகக் கத்தியை வைத்துக் கீறுவது போன்ற பாவனை செய்து சில மந்திரங்களை முணுமுணுப்பார். கட்டி உடைந்துவிடும் எனக் கிராமப்புற மக்கள் நம்புகின்றனர். வயிற்றுப் போக்கினைக் கொதி பார்த்துக் குணமாக்குவதும் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

நோய்களுக்கான காரணங்களாகத் தெய்வத்தின் சினம், தீய ஆவிகளின் செயல், மந்திரவாதிகளின் செயல், தீயப் பார்வை முதலியவற்றைக் கருதுகின்றனர். குழந்தை அழகாக இருந்தால் தீய ஆவியினால் கெடுதல் ஏற்படும் எனக்கருதி சூடு வைப்பதைச் சடங்காகச் செய்கின்றனர். பயந்த கோளாறும் தீய ஆவிகளினால் உண்டாவதாகக் கருதுகின்றனர். தீட்டுப் போவதற்கும் தீய ஆவியின் சினம் காரணம் எனக் கருதுகின்றனர். இந்நோய்களைத் தீர்ப்பதற்குப் பூசாரிகள் சில மந்திரச் சடங்குகளைச் செய்கின்றனர். பேய் பிடித்த பெண்ணை அவற்றினின்று நீக்குவதற்கு மந்திரவாதிகள் சில மந்திரச் சடங்குகளை நடத்துகின்றனர். தீட்டுக்கழித்தலில் பாவனைச் சடங்கின் தன்மையும் தொத்து மந்திரச் சடங்கின் தன்மையும் காணப்படுகின்றன. ‘கழிப்பு கழித்தல்’ தொத்து மந்திரச்

சடங்கின்பாற்படும். பில்லி சூன்யம் வைத்தல் தொத்து மந்திரச் சடங்கின் பாற்படும். தண்ணீர் மந்திரித்தல் வெண்ணெய் மந்திரித்தல், தீர்த்தம் குடித்தல், திருநீறு மந்திரித்தல், பார்வை பார்த்தல், ஓலை மந்திரித்தல் தொத்து மந்திரச் சடங்கு வகையைச் சார்ந்ததாகும். சில விலங்குகளுக்கு நோயை உண்டாக்கும் ஆற்றலும் சில விலங்குகளுக்கு நோயை நீக்கும் ஆற்றலும் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். பொஹிமியா பழங்குடி மக்களிடையே குருவிக் கூட்டைத்தேடி குஞ்சுகளை எடுத்துக் காய்ச்சலில் உள்ளவரோடு மூன்று நாட்கள் வைத்தால் காய்ச்சல் குணமாகி விடுவதாக நம்புகின்றனர்.

கடவுள் வழிபாடு, நேர்த்திக்கடன், பேயோட்டம், மந்திரத்தால் ஏற்படும் விளைவுகளை நீக்கல், தாயத்து கட்டல் போன்ற முறைகளைக் கையாளுவதுடன் மூலிகைகளையும் பயன்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இயற்கை நாட்டுப்புற மருத்துவம் (Natural Folk Medicine):

மூலிகை, தாது போன்ற பொருட்கள் மருந்துகள் முதலியவற்றை இயற்கை நாட்டுப்புற மருத்துவம் என்பர். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உட்கொள்ளும் மருந்து, வெளிப்பூச்சு மருந்து என இருவகையுண்டு. இயற்கை நாட்டுப்புற மருத்துவம் மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே உள்ளது. பண்டைய மனிதனின் மருத்துவ அறிவை நம்பிக்கையை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### 1. மஞ்சள் காமாலை நோய்:

அ) கீழாநெல்லி, மஞ்சள் கரிசலாங்கண்ணியை அரைத்து மோரில் கலந்து ஒன்பது நாள் சாப்பிட வேண்டும். உப்பில்லாத பால்சோறு சாப்பிட வேண்டும்.

ஆ) சித்திரமூலம் மஞ்சள் காமாலையைக் குணமாக்கும்.

இ) கரிசலாங்கண்ணி இலையைக் கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து நான்குநாள் சாப்பிட வேண்டும். உப்பு, புளி நீக்க வேண்டும்.

ஈ) அதிமதுரம், சங்கம் வேர், கீழாநெல்லி ஆகியவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் காயவைத்து மாத்திரைகளாக்கிச் சாப்பிட வேண்டும்.

**2. நெஞ்சு வலி:**

மான் கொம்பினை வெண்கடுகு பெருங்காயம் முதலியவற்றைச் சேர்த்து அரைத்து மார்பில் பூச வலி குறையும்.

**3. மண்டை வலி:**

மாதுளம் பூ லேகியம், சுக்கு முதலியவற்றைச் சேர்த்து அரைத்து உண்ண மண்டை வலி குணமாகும்.

**4. தொண்டை வலி:**

தூதுளம்பூ லேகியம் சாப்பிடவும்.

**5. உடம்பு வலி:**

ஏலம், இஞ்சிச்சாறு சாப்பிடவும்.

**6. பல்வலி:**

அ) நாயுருவியால் பல் விளக்கவும்.

ஆ) கருவப்பட்டைத் தூள், படிகாரபஸ்பம், கல்நார் பஸ்பம் முதலியவற்றைச் சேர்த்து பல் துலக்கி வந்தால், பல்லசைவு, பல்வலி, பல்லில் இரத்தம் ஒழுகல் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

**7. வயிற்று வலி:**

சுக்குப்பொடி ஒரு சிட்டிகை சிலாத்து பற்பம் சேர்த்துசுடு தண்ணீரில் சாப்பிட்டால் வயிற்றுவலி குறையும்.

**8. பக்கவலி:**

முட்காவேளை என்னும் மூலிகையைச் சுக்குடன் கலந்து இடித்துக் காய்ச்சி காலையில் உண்டு வர பல்வலி தீரும்.

**9. கண் வலி:**

வேக வைத்த பருப்பையும் தேங்காய் தூவலையும் உண்டு வந்தால் கண்வலி நீங்கும்.

**10. மார்பு வலி:**

தாமரைப்பூ, ரோஜா மொட்டு, பூமிச்சக்கரைக் கிழங்கு, கோரைக் கிழங்கு, செம்பரத்தம்பூ, கொத்தமல்லி, அரைக்கீரைவிதை சம எடை எடுத்து அரைப்படி தண்ணீரில் வற்றக் காய்ச்சி பால், மிளகுத்தூள், சித்தரத்தத்தோடு கோழிமுட்டை வெள்ளைக்கரு கலந்து காலை, மாலை கொடுக்கவும், மார்பு வலி நீங்கும்.

**11. மூட்டுவலி:**

சதக்குப்பி மூலிகையைப் பயன்படுத்தவும்.

**12. கீல்வலி:**

நீர்ப்பிரமி மூலிகையைப் பயன்படுத்தவும்.

**13. இடுப்பு வலி:**

செந்தட்டி வேரை அரைத்துப் பூச, இடுப்புவலி நீங்கும்.

**14. மூலநோய்:**

அ) துத்தி இலை, மஞ்சள் தூள் ஆறுகிராம் நல்லெண்ணெயில் குழைத்து ஆசனத்தில் தடவவும்.

ஆ) மிளகு ஐம்பது கிராம் சோம்பு எழுபது கிராம் தூள் செய்து தேனில் கலந்து காலை, மாலை சாப்பிடவும்.

இ) பூலாத்தி மூலிகை அரைத்து வேர்ப்புலா, வெப்புலா, கரும்புலா நல்லெண்ணெயில் கலக்கிச் சாப்பிடவும்.

ஈ) முள்ளங்கிக் கிழங்கைப் பாலிலிட்டுச் சாப்பிடவும்.

உ) கருணைக் கிழங்கு லேகியம் சாப்பிடவும்.

ஊ) நாகபஸ்பம் கொடுத்தால் மூலவியாதி வேரோடு போகும்.

### 14.2 உள்மூலம்:

குப்பைமேனிச் செடியை இடித்துப் பசு வெண்ணெயில் குழைத்துச் சாப்பிடவும்.

### 14.3 இரத்த மூலம்:

அ) சுருள் பட்டையைத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

ஆ) வெள்ளைப்பூண்டை அதிமதுரப் பாலிலிட்டு பதமாய்க் காய்ச்சி சாப்பிடவும்.

(பத்தியம் : புளிப்பு உப்பு நீக்கவும்.)

### 14.4 முளைமூலம்:

பொரிகாரம், வெங்காரம், சவக்காரம் சமமாய் எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துத் தடவவும்.

## 15. வயிற்றுப் பூச்சி:

அ) வேப்பிலைக் கொழுந்துடன் சிறிது வெல்லம் கலந்து கொடுக்கவும்.

ஆ) துளசியையும் மிளகையும் சேர்த்துக் காய்ச்சிக் குடிக்கவும்.

**16.1 வயிற்று உளைச்சல்:**

வெள்ளிலையையும் உப்பையும் சேர்த்துக் கொடுக்கவும்.

**16.2 வயிற்றுப்போக்கு:**

மாதுளம் பிஞ்சு, தென்னம் பிஞ்சு, மாவிலைக் கொழுந்து இம்மூன்றையும் அரைத்துக் கொடுக்கவும்.

**16.3 வயிற்று உப்பிசம்:**

சீரகமும் வெல்லமும் கலந்து சாப்பிட உப்பிசம் நீங்கும்.

**17. ஆஸ்த்மா:**

அ) முசுமுசுக்கை இலையைப் பறித்து மிளகைக் கலந்து சாப்பிடவும்.

ஆ) ஆடாதொடை இலையுடன் மிளகு, திப்பிலி கூட்டி கியாழம் பண்ணி உண்ணலாம்.

இ) நஞ்சறுப்பான் மூலிகையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**18. கண்ணில் நீர் வழிதல்:**

அகத்திக் கீரைச்சாறு, குளிர் தாமரை இலைச்சாறு, பொன்னாங்கன்னி சீந்தில் இலைச்சாறு எடுத்து 200 மில்லி மிளகு நற்சீரகம், சந்தனத்தூள், வெற்றிவேர், கதம்பப்பூ இவைகளை வகைக்கு ஐந்து கிராம் இடித்துத் தூளாக்கி சாறுடன் கலந்து விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், பசுநெய் வகைக்கு அரைக்கால் படி வீதம் ஒன்று சேர்த்து வற்றுக்காய்ச்சி துணியில் வடிகட்டி வாரத்திற்கு இரண்டுமுறை தலைக்குத் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும்.

**19. மேகநோய்:**

செருப்படை (மூலிகை) அரைத்துக் கொடுக்கவும்.

**20. மலச்சிக்கல்:**

காலையில் வெறும் வயிற்றில் குளிர்ந்த தண்ணீர் குடிக்கவும்.

**21. மூச்சடைப்பு:**

பூமி சக்கரைக் கிழங்கு இடித்துத் தேனில் கலந்து சாப்பிடவும்.

**22.1. காது குத்தல்:**

(அ) வெள்ளைப் பூண்டை வேகவைத்து அதன் சாற்றைக் காதில் விடவும், (ஆ) ஓதிய இலை, ஆமணக்கு இலை, முருங்கை இலை, முள்ளங்கி இலை அடுப்பில் காயவைத்து அதன் சாற்றைக் காதில் விடவும்.

**22.2. காதிரைச்சல்:**

முசுமுசுக்கைத் தைலத்தைக் காதில் விடவும்.

**22.3. காதுவலி:**

சவுரிப்பழம் உண்ணவும்.

**23. அக்கி:**

ஊமத்தம் இலையை அரைத்து எருமை வெண்ணெயில் குழைத்துப் பூசவும்.

**24. காக்கா வலிப்பு:**

தும்பை இலையைக் கசக்கி மூக்கில் பத்து துளி விடவும்.

**25. சளி:**

துளசிச் சாறு கொடுக்கவும்.

**26. நகச்சுற்று:**

அ) எலுமிச்சம் பழத்தில் துளையிட்டு அதனை விரலில் நுழைத்துச் சில நாட்கள் வைத்து வர, நகச்சுற்று நீங்கும்.

ஆ) பேதி உப்புடன் கிளிசரைன் குழைத்து விரல்கள் மீது பூசவும்.

இ) வெற்றிலைக் கொழுந்தில் சுண்ணாம்பு தடவி அரைத்து விரல்கள் மேல் வைத்துக் கட்டவும்.

**27. தொண்டை வலி:**

சுக்குநீர் சாப்பிடவும்.

**28. கை, கால் வீக்கம்:**

அ) கணை எண்ணெய் பூசவும்.

ஆ) காட்டாமணக்கு இலையை ஆமணக் கெண்ணெய் ஊற்றிவதக்கிக் கட்டினால் வீக்கம் குறையும்.

**29. பித்தம்:**

வேலம்பட்டையை அரைத்துக் கொடுக்கவும்.

**30. சீதபெதி:**

மாதுளம் பிஞ்சு அரைத்துப் பாலில் கொடுக்கவும்.

**31. மார்புச்சளி:**

முசுமுசுக்கை இலையை அரைத்துக் கொடுக்கவும்.

**32. நாக்குப்பூச்சி:**

குப்பைமேனி வேரை நசுக்கி நன்கு காய்ச்சிக் குடிக்கவும்.

33. **தீராத கபம், சுவாச காசநோய்:**

ஆடாதோடா மூலிகையைப் பயன்படுத்தவும்.

34. **வயிற்றுக்கிருமி, வாயு வீக்கம்:**

குப்பைமேனியைக் கசக்கிச் சாறு குடிக்கவும்.

35. **மேல்நோய், வாய்ப்புண் மற்றும் குடல்புண்:**

வல்லாரை மூலிகையைப் பயன்படுத்தவும்.

36. **கபம்:**

துளசிச் சாற்றைக் குடிக்கவும்.

37. **இரத்த சோகை:**

பசலைக்கீரை உண்ணவும்.

38. **புளியேப்பம், கபரோகங்கள்**

தூதுவளை மூலிகைச் சாறு உண்ணவும்.

39. **கொடிய விஷஜுரம்:**

நொச்சி இலைச்சாற்றை உண்ணவும்.

40. **கால் நீரேற்றம்:**

அ) ஆத்து அரளியை அரைத்துக் கொடுக்கவும்.

ஆ) வெடி உப்பு சீனிக்காரம் அரைத்துப் பூசவும்.

**41. விஷக்கடி:**

சீமையகத்தியைக் கொடுக்க குணமாகும்.

**42. பாம்புக்கடி:**

அ) நீலி, வசம்பு அரைத்துக் கொடுக்க விஷம் நீங்கும்.

ஆ) நல்ல பாம்பு கடித்தால், கோழியைப் பிடித்து அதன் ஆசனவாயைப் பாம்பு கடித்த இடத்தில் வைத்தால் அதன் விஷத்தை உறிஞ்சி அது இறந்துவிடும் பாம்பு கடிபட்ட மனிதர் பிழைத்துக் கொள்வார்.

**43. நாய்க்கடி:**

எருக்கம் வேரைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் கலந்து ஆறுநாள் பூச நாய்க்கடி விஷம் தீரும்.

**44. தேள்கடி:**

மூட்டுக்குக் கீழே கயிற்றால் கட்டுப்போட வேண்டும் கொட்டிய இடத்தில் வெங்காயத் துண்டுகளைத் தேய்க்க வேண்டும். நாயுருவி வேரைப் பச்சையாக மெல்ல, அதன் விஷம் இறங்கும்.

**45. நட்டுவாக்காலி கடி:**

அ) தேங்காய்ப் பாலைப் பருகச் செய்ய வேண்டும்.

ஆ) செருப்படி எனும் மூலிகையுடன் மிளகு, வெள்ளைப் பூண்டு சேர்த்து அரைத்துப் பருக வேண்டும்.

**46. அரணைக்கடி:**

சாரணைச் செடியின் வேரை அரைத்துச் சாப்பிடவும். அதில் கொஞ்சம் நீர் விட்டு கடிவாயில் பத்துப் போடவும். பத்தியம் : உப்பு, புளி நீக்க வேண்டும்.

47. **எலிக்கடி:**

பச்சை நன்னாரி வேரை அரைத்துப் பசும்பாலில் கலக்கி சாப்பிட வேண்டும்.

48. **காயங்கள்:**

தவசு முருங்கையைக் காயங்கள் மீது கட்ட புண் குணமாகும்.

49. **தீப்பட்ட புண்:**

வேப்ப இலைக் கொழுந்தை மோரில் அரைத்துப் புண் மீது பூசவும்.

50. **சேற்றுப் புண்:**

மருதாணி இலையை அரைத்துப் பூசவும்.

51. **பித்தவெடிப்பு:**

மாசிக்காயை அரைத்துப் பூசவும்.

52. **சிறுநீர் எரிச்சல்:**

நெருஞ்சிமுள் நீரில் ஊற வைத்து இறுத்து சர்க்கரைச் சேர்த்துப் பருக எரிச்சல் நீங்கும்.

53. **அரையாப்புக்கட்டி:**

முருங்கைவேர்ப்பட்டை, புழுங்கலரிசி, உப்பு முதலியவற்றை அரைத்துக்கட்டி மீது தடவ, அக்கட்டி கரைந்து விடும்.

**54. கக்குவான்:**

கண்டங் கத்திரி வேரைப் பசுவின் பாலில் காய்ச்சிக் கொடுக்க குணமாகும்.

**55. முறை சுரம், குளிர் காய்ச்சல்:**

அதிவிடயத்தைப் பயன்படுத்தவும்.

**56. நீரிழிவு:**

அ) அத்திப்பழச்சாறு கொடுக்கவும்.

ஆ) சர்க்கரை வேம்பு பயன்படுத்தவும்.

**57. அழற்சி, பேசி, வேர்கபம்:**

ஆதொண்டை மூலிகை பயன்படுத்தவும்.

**58. மேகநோய் மேகக்கிரந்தி:**

சங்கக்குப்பி மூலிகையைப் பயன்படுத்தவும்.

**59. வீக்கம், விக்கல் மூலக்கடுப்பு:**

சதக்குப்பியைப் பயன்படுத்தவும்.

**60. மூச்சடைப்பு கபம்:**

சஞ்சீல் மூலிகைச் சாறு குடிக்கவும்.

**61. சூதக வாய்வு:**

சடாமஞ்சில் பயன்படுத்தவும்.

**62. நாக்குப்பூச்சி:**

சதுரக்கள்ளியைப் பயன்படுத்தவும்.

**63. இருமல், வயிற்றுப்புண்:**

பனை வெல்லத்தைப் பயன்படுத்தவும்.

**64. தாது விருத்தி:**

பாதாம்பருப்பை நீரில் நனையவைத்துத் தோலை நீக்கிப் பாலில் கலந்து ஒரு மண்டலம் (48 நாள்) உண்ணவும்.

**65. விந்து கட்ட:**

சாதிக்காய் பயன்படுத்தவும்.

**66. விந்து உற்பத்தி:**

சாமை அரிசி பயன்படுத்தவும்.

**67. சுக்ல நஷ்டம்:**

தூதுளை உணவில் சேர்க்கவும்.

**68. புண் ஆற:**

சித்திரமூலம் பயன்படுத்தவும்.

**69. மண்ணீரல் நோய்:**

சீந்தில் கொடியைப் பயன்படுத்தவும்.

**70. கண்கட்டி:**

திருநீற்றுப் பச்சிலைச் சாற்றில் சங்கை நன்றாக உரைத்துப் பூசவும்.

**71. தீராத கபம்:**

ஆடாதோடை இலையைச் சுருக்காக்கிக் குடித்தால் இந்நோய் நீங்கும்.

**72. உடல் சூடு:**

பொன்னாங்கன்னியைப் பூண்டுடன் சமைத்துச் சாப்பிடவும்.

**73. கபக்கட்டு:**

கரிசலாங்கண்ணித் தைலத்தை ஒரு மண்டலம் உண்ணவும்.

**74. வயிற்றுக்கிருமி:**

குப்பைமேனி, வேர்ப்பீக்கு, பூவரசன் பட்டை, ஓமம் முதலியவற்றை அரைத்து எண்ணெயில் கலந்து கொடுக்கவும்.

**75. பெரும்பாடு:**

கீழாநெல்லி வேர், நாவல் பட்டை அரைத்து மோரில் கலந்து கொடுக்கவும்.

**76. குடல்புண்:**

வல்லாரை இலையை வாயில்போட்டு மென்று தின்றால் இந்நோய் நீங்கும்.

**77. சூதக வியாதி:**

துளசியை மென்று தின்றால் இந்நோய் நீங்கும்.

**78. முடக்குவாதம்:**

பிண்டத் தைலத்தைத் தடவி நொச்சி இலையை வேக வைத்து ஒத்தடம் கொடுக்கவும்.

**79. ஜலதோஷம்:**

வெங்காயம் தின்று சுடுநீர் பருகவும்.

**80. சுகப்பிரசவம்:**

அ) மாலதி வேரை மோருடன் கலந்து கொடுக்கவும்.

ஆ) கசாயம் காயச்சிக் கொடுக்கலாம்.

இ) வெண்ணெய் உண்ணலாம்.

**81. பிறந்த குழந்தைக்கு:**

வெந்நீர் ஊற்றிக் காயம் கருப்பட்டி கொடுக்கலாம்.

**82. வெள்ளை வெட்டை:**

செம்பரத்தம் பூவைப் பசும்பாலில் கலக்கிக் கொடுக்கவும்.

**83. தேககாங்கை:**

தனியாவை அரைத்துச் சர்க்கரையில் கலந்து குடிக்கவும்.

**84. வீக்கம்:**

சிற்றரத்தை அரைத்துப் பத்து போட்டால் வீக்கம் குறையும்.

**85. வாய்ப்புண்:**

மணத்தக்காளியைப் பயன்படுத்தவும்.

**86. குன்மம்:**

பிரண்டைச் சாற்றை உண்ணவும்.

**87. சருமநோய்:**

நாகவல்லி மூலிகையைப் பயன்படுத்தவும்.

**88. சீதபேதி:**

கூகை நீரைப் பயன்படுத்தவும்.

**89. மார்புச்சளி:**

தூதுளை இலை பயன்படுத்தவும்.

**90. கண்ஒளி:**

மஞ்சள் கரிசாலைப் பயன்படுத்தவும்.

**91. கண்நோய்:**

நந்தியாவட்டைப் பயன்படுத்தவும்.

**92. பீநிசம்:**

அருவதா மூலிகைப் பயன்படுத்தவும்.

**93. கருப்பை நோய்:**

அசோகம் பூ பயன்படுத்தவும்.

**94. மேக வெள்ளை:**

செம்பரத்தைப் பயன்படுத்தவும்.

**95. உடற்சூடு:**

குமரியைப் பயன்படுத்தவும்.

**96. ஈரல் நோய்**

கருசாலைப் பயன்படுத்தவும்.

**97. பித்தம், மயக்கம், சுரம்:**

வெட்டிவேர் அரைத்துக் கொடுக்கவும்.

**98. கல்லடைப்பு:**

மாவிலிங்கம் பயன்படுத்தவும்.

**99. குத்திருமல்:**

தூதுவளைப் பயன்படுத்தவும்.

**100. விரைவீக்கம்:**

கழற்சிக்காய் பயன்படுத்தவும்.

**101. விக்கல், காசம்:**

மலைத்தேன் பருகவும்.

**102. உளாந்தை:**

கொம்புத்தேன் பருகவும்.

**103. இருமல், ஈளை:**

புற்றுத்தேன் பருகவும்.

**104. புரை, கபம்:**

மனைத்தேன் பருகவும்.

**105. அஜீரணம்:**

ஓமமும் உப்பும் கலந்து பொடி செய்து உண்ணவும்.

**106. இடுப்புப்பிடி:**

சுக்குப் பொடியைக் கொதிக்க வைத்து பாலும் சர்க்கரையும் கலந்து பருகவும்.

**107. இராஜ பிளவை:**

ஆடுதீண்டா மூலிகையை வெள்ளாட்டின் பாவில் சர்க்கரையும் கலந்து கொடுத்துவர கட்டி குணமாகும்.

**108. நீர் அடைப்பு:**

வாழைத்தண்டு தினமும் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் குணமாகும்.

**109. கருந்தேமல்:**

மருதாணி இலையைச் சோம்புடன் சேர்த்து அரைத்துப் பூச குணமாகும்.

**110. வேர்க்குரு:**

பனைநுங்கு கொண்டு வேர்க்குருமீது தேய்க்கவும். சந்தனத்தையும் கரைத்துத் தேய்க்கலாம்.

**111. படர் தாமரை:**

சீமை அகத்தியைத் தேங்காய் எண்ணெயில் குழைத்துத் தேய்க்கவும்.

**112. மூக்கடைப்பு:**

கரிமஞ்சள் கொம்பை நல்லெண்ணெயில் தேய்த்து விளக்கில் சுட்டு அதில் வரும். புகையில் மூக்கைக் காட்டி நுகர்ந்தால் மூக்கடைப்பு நீங்கும்.

**113. சொறி சிரங்கு**

பூவரசு மரப்பட்டையைத் தூள் செய்து தேங்காய் எண்ணெயில் குழைத்துப் பூசவும்.

**114. சுளுக்கு:**

சூடத்தைத் தேங்காய் எண்ணெயில் கலக்கி சுளுக்கு உள்ள இடத்தில் பூசவும்.

**115. வீட்டு விலக்கு வயிற்றுவலி:**

பிரண்டை உப்பை வெண்ணெயில் குழைத்துச் சாப்பிடவும்.

**116. சீதக்கடுப்பு:**

வெந்தயத்தைத் தண்ணீரில் ஊற வைத்துச் சாப்பிடவும்.

**கிறித்தவ மீனவர் நாட்டுப்புற மருத்துவம்:**

**மந்திர மருத்துவம்:**

1.1. மேரியன்னையின் பாதங்களைக் கழுவிய நீரை நோயாளிகளுக்குக் கொடுத்தால் குணமாகும் என நம்புகின்றனர்.

1.2. ஒரு குடும்பத்தில் பலர் நோயுற்றால் தேவாலயத்தில் ஏற்றி வைக்கப்பட்ட மெழுகுவர்த்திகளில் தண்ணீர் விட்டு அதனைக் கொணர்ந்து தெளிந்தால் குணமாகும் என நம்புகின்றனர்.

1.3. சுகப்பிரசவம் விரும்பும் பெண்கள் போர்த்துகீசிய கத்தோலிக்கத் துறவியின் கல்லறையில் எண்ணெய் ஊற்றி, அதனை வழித்தெடுத்து வயிற்றில் தடவுவர்.

1.4. காலரா, அம்மை, மஞ்சள்காமாலை போன்ற நோய்கள் குழந்தைகளுக்கு ஏற்பட்டால் புனிதர்களில் ஒருவரை நினைத்து மொட்டையடித்து காதில் வாளி அணிந்தால் நீங்கும் என நம்புகின்றனர்.

**2. இயற்கை நாட்டுப்புற மருத்துவம்:**

2.1 தோல், கண்வியாதி, ஆஸ்துமா, இருமல் போன்ற நோய்களுக்குச் சங்கு சோழிகளின் ஓடுகளைப் பொடியாக்கி மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

2.2 ஆமை இரத்தம் இரத்தமூலத்திற்கு மருந்தாகப் பயன்படுகிறது.

2.3 கண்ணாடிச் சிப்பியின் முத்துக்களிலிருந்து ‘சூர்மா’ என்ற மருந்து தயாரித்து, கண்ணேய்க்குப் பயன்படுத்துகின்றனர்.

2.4 காரல் மீன் சாறு குடித்தால் உடல்நலத்திற்கு நல்லது.

2.5 ஆமைக்கறி உண்டால் குறுங்கு நோய்க்கு நல்லது.

2.6 பருவுக்கு பன்றிக் கொழுப்பை வைத்துக் கட்டலாம்.

2.7 வயிற்று மந்தம், மூலம், தோல், நுரையீரல் வியாதிக்குச் சங்கு பஸ்பம் பயன்படுகின்றது.

2.8 குழந்தை பெற்றவர்களுக்குப் பால் உண்டாக கறு தூரல், சிறுகீளி, தோட்டா, மஞ்சக்காமாலை கொளைக்கார ஊடகம், தென்னகரென கொடுக்கப்படும்.

2.9 வயிற்று உளைச்சலை செந்திரிகைமீன் போக்கும்.

2.10 உடம்புக்கு ஆகாதவர்கள் பஞ்சிரா சாப்பிடலாம்.

2.11 கம்பா, லோமியா, சாலையுடன் வெள்ளைப்பூடு சேர்த்து உண்டால் வாய்வு நீங்கும்.

2.12. சுறாமீன், திரிக்கை கண்ஒளி உண்டாகும்.

2.13. பேச்சாலை இரத்த அழுத்தத்திற்கு நல்லது.

**காணிக்கார பழங்குடிகளின் நாட்டுப்புற மருத்துவம்:**

1. **மந்திர சமய மருத்துவம்:**

1. இருள் அடித்தவர்களுக்கு மந்திரித்த தாயத்து கட்டுகின்றனர்.

2. பெண் கர்ப்பமாகியருக்கும்போது குழந்தை நலம் வேண்டி கோழி பலியிடுவதுண்டு.

3. பல்வலி, காய்ச்சல், வயிற்றுவலி, நாய்க்கடி, பாம்புக்கடி முதலியவற்றை மந்திரம் மூலம் தீர்க்க முயலுகின்றனர்.

4. காணிக்காரர்களிடையே ‘பிலாத்தி’ என்பவர் ஜோஸ்யராகவும் சூன்யக்காரராகவும் வைத்தியராகவும் பணியாற்றுகிறார்.

5. மந்திர ஓதுவது மூலம் நோய் தீருமென நம்புகின்றனர்.

6. ‘கொக்ரா இசை முழங்க மருந்து உட்கொண்டாக நோய் தீருமென நம்புகின்றனர்.

**இயற்கை நாட்டுப்புற மருத்துவம்:**

1. **தலைவலி:**

தும்பைச் செடியைக் கசக்கி முலைப்பாலில் கலந்து மூக்கு வழியே விட்டால் தலைவி நீங்கும்.

2. **ஜலதோஷம்:**

பூண்டு அரைத்துச் சாப்பிடவும்.

3. **பல்வலி:**

வெள்ளைப்பூண்டையும் உப்பையும் சேர்த்துப் பல்லில் தேய்க்கவும்.

4. **காதுவலி:**

மிளகாய் வற்றலைக் காய்ச்சிய தேங்காய் எண்ணெயில் ஊற வைத்துக் காதில் விடவும்.

5. **மூக்கில் இரத்தம் ஒழுகுதல்:**

தும்பை இலையை அரைத்து மூக்கில் விட, இரத்த ஒழுகல் நின்றுவிடும்.

6. **வயிற்றுப் போக்கு:**

சுட்ட வாழைப் பழத்தில் கொஞ்சம் தேன் ஊற்றிக் கொடுக்க வயிற்றுப் போக்கு நீங்கும்.

7. **நெஞ்சுவலி:**

வேல் பருத்தி இலையைப் பால் அல்லது முட்டையுடன் அரைத்து மூன்று வேளை கொடுக்க நெஞ்சுவலி நீங்கும்.

8. **மூலம்:**

நாவல் மரப்பட்டையைச் சீரகத்துடன் கரைத்துக்குடிக்கவும்.

9. **சொறி:**

மிளகு, பூண்டு, ஆமணக்கு முதலியவற்றை கடலை எண்ணெயில் சுட் வைத்துப் பூசவும்.

10. **காக்கா வலிப்பு:**

ஒரு மூக்குத்துவாரத்தின் எரியும் பீடியை வைத்து மற்றொரு மூக்குத் துவாரத்தை வரலினால் மூட, காக்கா வலிப்பு நின்றுவிடும்.

11. **வாதம்:**

வடவல்லிக் கொடி இலையை வதக்கி அச்சாற்றை அருந்தவும்.

12. **வலிப்பு:**

வலிப்பு கண்டவர்களுக்கு இரும்புத் துண்டைக் கையில் கொடுக்கவும்.

13. **தீக்கொப்பளம்:**

வாழைத்தண்டுச் சாற்றையும் தேனையும் தடவவும்.

14. **பாம்புக்கடி:**

கோடைக்கொடி, சிறியா நங்கை இலையை அரைத்த பாலில் கலந்து கொடுக்கவும்.

15. **மலேரியா:**

துளசி இலை, கருப்பு மிளகு வடிநீரைக் குடிக்கவும்.

16. டைபாய்ட் சுரம்:

துளசி இலை, கருப்பு மிளகு வடிநீரைக் குடிக்கவும்.

17. காலரா:

முள்ளம்பன்றி கல்லீரல் சாற்றை மோர், எலுமிச்சையுடன் கலந்து உண்ண, காலரா நோய் குணமாகும்.

18. புட்டளாம்மை:

வேப்பிலையை மஞ்சளுடன் அரைத்துப் பூசவும்.

**நாட்டுப்புறு வைத்திய முறை:**

இம்மருத்துவ முறையில் 'பத்தியம் இருத்தல்' மிக முக்கியமானது. உப்பில்லாத பத்தியம் கண்டிப்பாக அனுசரிக்க வேண்டும். நோயின் தன்மையையொட்டி உணவில் சிலவற்றை உண்ணவும் சிலவற்றை நீக்கவும் வேண்டும்.

**நாட்டுப்புற மருத்துவ நம்பிக்கைகள்:**

1. அம்மைநோய் தெய்வக்குறை என எண்ணி மாரியம் மனுக்கு வழிபாடும் நேர்த்திக்கடனும் பண்ணுகின்றனர்.
2. அமாவாசை நாளில் நோயின் குணம் தீவிரமாகும் என எண்ணுகின்றனர்.
3. கை கால் சுளுக்கிக் கொண்டால் இரட்டையர் தடவினால் போகும் என மக்கள் நம்புகின்றனர்.
4. 'நெற்றியில் கை வைத்தல்' 'நெஞ்சில் கை வைத்தல்' போன்றவற்றை மருத்துவரை நாடிவரும் ஆட்கள் செய்தால் நோய் குணமாவது கஷ்டம் என வைத்தியர்கள் நம்புகின்றனர்.

5. சனிக்கிழமை ரேவதி நட்சத்திரத்துடன் எமகண்டமும் கூடியிருந்தால், மருந்து கொடுக்கக் கூடாது என வைத்தியர்கள் நம்புகின்றனர்.

**நாட்டுப்புற மருத்துவமும் பழமொழிகளும்:**

1. வைத்தியன் தகப்பனாரைப் போன்றவன்.
2. வைத்தியன் பாராத நோய் தீருமா?
3. வைத்தியனுக்கு ஊரார் யாவரும் சிநேகிதம்.
4. வைத்தியத்தில் இரண வைத்தியமும் வயதில் இளமையும் நன்மை தரும்.
5. வைத்தியனுக்கு அஞ்ச வேண்டும்.
   வம்பனுக்கும் அஞ்ச வேண்டும்.
6. வைத்தியனுக்குத் தன் மருந்து பலிக்காது.
7. வைத்தியனும் கைவிட்டால் ஆண்டவனே கதி.
8. வைத்தியன் பெரிதோ, மருந்து பெரிதோ?
9. ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.
10. மண்டை உள்ளவரை சளி இருக்கும்.
11. சுக்கு இல்லாத கஷாயம் உண்டோ?
12. ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
13. வியாதிக்கு மருந்து உண்டு. விதிக்கு மருந்துண்டா?
14. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்.
15. சாகிற வரையில் விடான் வைத்தியன்.
    செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்.
16. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.
17. கறந்த பாலைக் காய்ச்சாமல் குடித்தால் காசநோய் தானாக வரும்.
18. உள்ளங்கை புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?
19. தூங்கினவன் சாகிறதில்லை;

வீங்கினவன் பிழைக்கிறதில்லை.

20. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

21. நோய் கொண்டார் பேய் கொண்டார்.

22. நோய்க்கிடங் கொடேல்.

23. நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்.

24. எட்டியும் எருக்கும் நஞ்சு போக்கும்;

இஞ்சி சுரம் போக்கும்.

25. கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கன்னி.

26. பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்.

27. நொறுங்கத் தின்றால் நூறு வயது.

28. மூடி வைத்த புண் ஆறாது.

29. உண்டபின் ஒரு மைல் நட.

30. நாள் இரண்டு (மலம் கழித்தல்)

வாரம் இரண்டு (எண்ணெய் குளியல்)

மாதம் இரண்டு (போகம்)

வருஷம் இரண்டு (குடலைத் தாய்மை செய்தல்)

31. இம்பூறல் காணாமல் இருமிச் செத்தான்.

32. விடாச்சுரத்துக்கு விஷ்ணு கரந்தை.

33. தூதுளை ஆயுளை விருத்தி செய்யும்.

34. விஷத்தைக் குடித்தவன் மிளகுநீர் குடிக்க வேண்டும்.

35. வேப்பெண்ணெய் ஆபத்துக்கு உதவும்.

36. வேலம்பட்டை பித்தத்தைப் போக்கும்.

37. கொடிமுள்ளி நாறும் கபத்தை அறுக்கும்

38. ஆற்றுநீர் வாதம் போக்கும்.

அருவி நீர் இரண்டும் போக்கும்.

சோற்று நீர் பித்தம் போக்கும்.

39. வலியவனுக்கு இடம் கொடுத்தால்

வயிற்று வலிக்கு இடம் கொடுத்தது போல

40. சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை;

சுப்பிரமணியருக்கு மிஞ்சிய சாமியும் இல்லை.

நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற மருத்துவத்தைப் பற்றிச் சில நம்பிக்கைகள் வைத்துள்ளனர். அந்த நம்பிக்கை அவர்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப்பிணைந்தவை, பழமை என்று அவற்றை ஒதுக்கக் கூடாது. இன்றும் மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கு நாட்டுப்புற மருத்துவமே சிறந்தது என்று நம்புகின்றனர். எனவே நாட்டுப்புற மருத்துவம் பற்றி அறிவியல் முறையில் பரிசோதனைக் கூடத்தில் ஆய்வு செய்வது நம் கடனாகும்.